E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

செப்டம்பர் 2018
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



திரிகோணமலை கோணேஸ்வரர் ஆலயம்
(இலங்கை)

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



“கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்.”

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



KCLAS KUMARAGURU

குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக ‘ஒழுக்கமே வாழ்வு’ எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்படையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

KCT BUSINESS SCHOOL

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

KUMARAGURU institute of agriculture

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE

போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான ‘போர்ஜ்’ வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்
0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



கண்ணீர் அஞ்சலி...!



டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
மேனாள் தமிழக முதல்வர்

தேராழி ஓடுகின்ற திருவாரூர் பெற்றிட்ட
போராளி கலைஞர் போய் விட்டாரென
ஊராரும் உற்றாரும் மற்றோரும் எல்லாரும்
நீராரும் கண்களோடு நின்றார் நிலைகுலைந்தார்!

குமரிக்கடல் குமுறியது வள்ளுவரின் நெஞ்சம் போல்
அமைதிக்கே உறக்கமில்லை தமிழுனை மறக்கவில்லை
இமயமாய் உயர்ந்தாய் இளையவன்நீ அண்ணாவாம்
தமையனிடம் போனாயோ ஆசைதீரப் பேசுதற்கு!



வாழ்நாள் சாதனையாளர் விருதுபெறும் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன், விருது வழங்கிய டி. உதயசந்திரன், இ.ஆ.ப., கவிஞர் சிற்பி, டி. பாலசுந்தரம், ஆர். ராமமூர்த்தி, ஈ.கே. பொன்னுசாமி, எஸ். சௌந்தரராஜன் ஆகியோர்..

கோவை புத்தகத் திருவிழா – 2018



தொழிலதிபர்கள் டி. பாலசுந்தரம், இயகோகா சுப்பிரமணியம், சி. வேலுமணி மற்றும் பலர்.




கோவை மாநகரத்தின் சிறு தொழில்களின் சங்கம் 'கொடீசியா', கோவையின் புகழ் மிக்க அடையாளங்களில் முதல் அடையாளம். காரணம், இந்தக் கொடீசியாவில்தான் நூற்றுக்கணக்கான சிறு மற்றும் குறுந் தொழில்கள் உள்ளன. மோட்டார் பம்ப்செட், வார்ப்பகங்கள், மிக்சி, கிரைண்டர், எஞ்சினியரிங் தொழில்கள், தேனிரும்பு மூலப்பொருள் தொழில்கள் எனப் பல உள்ளன.

இந்தியாவைப் பொறுத்த அளவிற்கு, சிறுதொழில்களின் உற்பத்தி, மொத்த உற்பத்தியில் 40 சதவிகிதமாகும். இந்த 40 சத உற்பத்தியைச் செய்வதற்கு, இதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 4 கோடிப் பேர்கள். இவர்களில் கோவையில் 2 லட்சம் பேர்கள் உள்ளனர்.

கோவை மாநகரத்தை ஒரு சிறிய இந்தியாவாகக் கருதலாம். சுதந்திர இந்தியாவில் திருச்சியில் அரசு முயற்சியில் உருவான துப்பாக்கித் தொழிற்சாலை, பாய்லர் தொழிற்சாலைகள் உள்ளன. சென்னை, ராணிப்பேட்டையில் பல தொழிற்சாலைகள் உள்ளன. தனியார்

தொடர்ச்சி 18–ம் பக்கம்

கண்ணீர் அஞ்சலி...



மேனாள் பாரதப் பிரதமர் **அடல்பிகாரி வாஜ்பாய்**

அடல்பிகாரி வாஜ்பாயாம் திருவிளக்கு அணைந்தது
கடல்போலச் சுழன்றகவிச் சூறாவளி அடங்கியது
மடல்தாழை மணங்கமழ்ந்த பூவொன்று உதிர்ந்தது
உடல்விட்ட உயிர் நம்மூச்சில் கலந்தது!

மாலுமியை இழந்தோமே மாசற்றஜோதி மகராசன்
வாழும்வரை வாழ்ந்து வரலாறுகண்ட வேந்தன்
நூலுக்குள் அடங்காச் சாதனைகள் நூறாகூறுதற்கு
ஆளுமையில் இமயமே அலைஓயாச் சமுத்திரமே!

வணங்குகிறோம் உறங்குகிற வரலாற்று நாயகனை
மனசாட்சி சொன்னபடி மரணம்வரை வாழ்ந்தவரை
இனம்கண்டோம் இந்தியாவின் ஈடில்லா மணிமுடியாய்
தினந்தோறும் முழங்கிடுவோம் திசையெட்டும் அவர்புகழை!

சுரங்கம்

நமது நாடாளுமன்றத்தில் அரசியல் கட்சிகளின் சார்பில் அரசியல்வாதிகளான எம்.பி.-க்கள்தான் 545 பேர் இடம்பெறுகிறார்கள். இதேபோல மாநிலங்களவையில் 245 பேரும் கட்சிகள் சார்பாக இடம்பெறுகிறார்கள்.

அரசியல்வாதிகளுக்கு இல்லாத அனுபவம் பல்வேறு துறைகளில் நிபுணர்களாக உள்ளவர்களுக்கு நிச்சயம் இருக்கும். அந்த நிபுணர்களின் வல்லமையை, அனுபவத்தை நாடாளுமன்றம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், அவர்களுக்குரிய பிரதிநிதித்துவம் நாடாளுமன்ற அவைகளில் இருக்க வேண்டுமா, வேண்டாமா?

இருக்குமானால்தான் நாடாளுமன்றம் சரியான சட்டங்களைச் செய்ய முடியும். அப்போதுதான் அவற்றை மிகச் சரியாக அமல்படுத்தவும் முடியும் என்ற கருத்தை அருட்செல்வர் 16 ஆண்டுகளுக்கு முன்பு (2002) சிந்தித்தார். இன்றுவரை அந்தச் சிந்தனை செயல்படவில்லை என்ற வருத்தத்தை இந்த மாதம் 'சுரங்கம்' பகுதியில் அவருடைய கட்டுரையை வாசிக்கும் நீங்கள் உணர்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

– இ.ஆர்.



நாடாளுமன்றத்தில் தொழிலதிபர்களின் இன்றியமையாமை

திறமையான தொழில் அதிபர்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்திருப்பார்களேயானால், இதுபோன்ற பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து தெளிவுபடுத்தியிருப்பார்கள். சிக்கல்களுக்கான சரியான தீர்வுகளையும் தந்திருப்பார்கள்.

உலகமயம் நடைமுறையாகி உள்ள இன்றைய காலகட்டத்தில் திறமையும் தீர்க்க தரிசனமும் கொண்ட தொழில் அதிபர்கள், கட்டாயம் அரசியலிலும் பிரவேசிக்கத்தான் வேண்டும். அவ்வாறு அவர்கள் அரசியல் துறையில் ஈடுபடுவதன் மூலம் இந்தியாவின் தொழில் கொள்கையை உருவாக்கும் பணியில் மிகப்பெரிய பாத்திரத்தை வகிக்க முடியும்.

நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் முதலியவை அரசுத் துறையிலும் உள்ளன, தனியார் துறையிலும் உள்ளன, கூட்டுறவுத் துறையிலும் உள்ளன. அரசுத்துறைத் தொழில் நிறுவனங்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடிக்கடி பணி மாறுதலுக்கு உரியவர்களாக உள்ளனர்.

சட்டம், ஒழுங்கு மற்றும் வரி

டாக்டர் நா. மகாலிங்கம்



வருவாய் ஆகிய துறைகளில்தான் நமது ஐ.ஏ.எஸ் அதிகாரிகளுக்கு அதிகமான பயிற்சிகள் உண்டு. தொழில் நிறுவனங்களை லாபகரமாக நிர்வாகம் செய்யும் புதிய புதிய உத்திகளுக்கான பயிற்சிகளைப் பெற அவர்களுக்கு அதிக வாய்ப்பில்லை.

பருத்தி விவசாயிகளைப் பற்றியோ, கரும்பு விவசாயிகளைப் பற்றியோ, நெல் விவசாயிகளைப் பற்றியோ, தனியார்துறை நிர்வாக இயக்குநர்களுக்குள்ள (MD) அனுபவம் அரசுத்துறை அதிகாரிகளிடம் இருக்குமா என்பது சந்தேகமே. அரசு அதிகாரிகளில் சிலர்தான் இத்துறையில் நல்ல திறமையானவர்களாகப் பிரகாசிக்கிறார்கள்.

அரசியல் துறையில் சட்ட நிபுணர்கள் இடம்பெற்றிருப்பது போல, தொழில் நிபுணர்களும் இடம்பெற வேண்டும்.

சரியான காலகட்டத்தில் இதனைத் தேர்தல் கமிஷனர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கது.

திறமைமிக்க தொழில் அதிபர்கள் அரசியல் துறையில் ஈடுபடுவார்களானால் அதனால் நாட்டுக்குத்தான் அதிக நன்மை.

ஒவ்வொரு தொழிற்சாலையும் அது தனியார் நிறுவனமானாலும், பொதுத்துறை நிறுவனமானாலும் முதலில் அது தேசத்தின் சொத்து. செல்வங்களின் உற்பத்தியாளர்கள் என்றுதான் தனியார் துறையினரைக் கூற வேண்டும். இடதுசாரிகள் அவர்களைச் சுரண்டுவோர் என்று விமர்சனம் செய்து தேச அபிவிருத்தியைத் தேக்கமடையச் செய்துவிட்டனர்.


திரு. கிருஷ்ணமூர்த்தி

அண்மையில் அமரரான தொழிலதிபர் அம்பானி அவர்கள், ஒரு பெட்ரோல் நிலையத்தில் ஊழியராக இருந்தவர். சென்ற 40 ஆண்டுக் காலத்தில் ரூ. 70 ஆயிரம் கோடிக்குரிய அதிபரானார். ரிலையன்ஸ் தொழில் நிறுவனங்கள் அவருடைய முயற்சியில் உருவானவை. முதலில் அவற்றைத் தேசத்தின் சொத்துகள் என்றே எண்ண வேண்டும். திரு. அம்பானி இல்லை என்றால், இந்தச் சொத்துகள் உருவாகி இருக்காது.

பிலானியில் உள்ள பிர்லா பல்கலைக்கழகம் தேசப் புகழ் பெற்றது. பிரதமர் இந்திராகாந்தியே அதில் ஒரு மாணவனைச் சேர்க்க முயற்சி செய்தபோது, தகுதிக்குத்தான் முதலிடம் என்று பிரதமரிடமே தயவு தாட்சண்யம் இல்லாமல் பிர்லா கூறினார். இத்தகைய நிர்வாகமே நாட்டுக்கு நன்மை தரும். இதுபோல எத்தனையோ தொழிலதிபர்கள் தேசத் தொண்டில் ஈடுபட்டுள்ளனர். இவர்களைப் போன்ற தொழில் நிபுணர்கள் கட்சி – அரசியலில் இடம்பெற முடியாது.

அதிக முதலீடு செய்துள்ள அரசு நிறுவனங்களை இத்தகையவர்களின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்திருந்தால், அவை மேலும் மேலும் வளர்ச்சி அடைந்திருக்குமே தவிர, இப்போது போல நலிவுற்று நஷ்டமடைந்து இருக்காது.

தொழில் அதிபர்களைப் பற்றி இடதுசாரிகள் செய்த இடைவிடாத பிரச்சாரங்கள், அவர்களை அவ்வாறு சித்தரித்துவிட்டன. உண்மையில், அநேகத் தொழிலதிபர்கள்



தொழிலதிபர் திரு. அம்பானி

மக்களவை விவாதங்களைக் குவளையில் உள்ள டீ போல, குடிக்க முடியாத அளவுக்குச் சூடானது என்பார்கள். ராஜ்ய சபை விவாதங்களை "சாசரில்" உள்ள டீ போல, குடிப்பதற்கு இதமானது என்று குறிப்பிடுவார்கள்.

இப்பொழுது நடைமுறையில் என்ன பார்க்கிறோம் என்றால், ராஜ்ய சபையையும் அரசியல்வாதிகளால் நிரப்பி இருக்கிறோம்.

தேசியத் தொண்டு புரிகின்றவர்கள் தான். சிலர் சுயநலவாதிகளாக இருக்கலாம். எந்தத் துறையில்தான் அவர்கள் இல்லை? எல்லாத் துறைகளிலும் சிலர் இப்படி இருக்கத்தான் செய்கிறார்கள்.

இவர்களைப்போல இராணுவத்தில் ஓய்வு பெற்ற தலைமைத் தளபதிகள், நீதித்துறையில் ஓய்வுபெற்ற தலைமை நீதிபதிகள், மருத்துவ நிபுணர்கள், பொருளாதார அறிஞர்கள், தலைசிறந்த கல்வியாளர்கள், தொழிலதிபர்கள், விவசாய விஞ்ஞானிகள் மற்றும் விவசாயத் தலைவர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் உரிய எண்ணிக்கையில் ராஜ்ய சபையில் இடம் பெறுமாறு செய்திருக்க வேண்டும்.

எந்த ஒரு துறையைச் சார்ந்த மசோதா விவாதத்திற்கு வந்தாலும், விருப்பு, வெறுப்பு இல்லாமல் அதனை ஆய்வு செய்து முடிவு எடுப்பதற்கு அவர்களுடைய விவாதங்கள் நிச்சயம் உதவும்.

இத்தகைய நிபுணர்களும், அனுபவசாலிகளும் ராஜ்யசபையில் இப்போது இடம்பெறவில்லை. மக்கள் சபையில் சூடு பறக்க விவாதிக்கப்படுகிற ஒரு பிரச்சனையை, ராஜ்ய சபையில் அமைதியாக விவாதிக்க முடியும்.

ராஜ்ய சபையில் உள்ள 245 பேரும் மக்கள் சபையில் உள்ள 545 உறுப்பினர்களைப் போல அரசியல்வாதிகளேதான். ஒருசிலர்கூட அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இல்லை.

இதற்குக் காரணம், அரசியல்வாதிகள் தேர்தலில் தோற்றுப் போனால்கூட, அந்தந்த அரசியல் கட்சிகள் அவர்களை ராஜ்யசபை உறுப்பினர்களாக ஆக்கிவிடுகிறது.

அறிஞர்கள், மேதைகள், விஞ்ஞானிகள், நிபுணர்கள் ஒதுக்கப்பட்டு விடுகிறார்கள். அதுதான் நாட்டின் இன்றைய துயரம்.

இந்தச் சூழலில், தேர்தல் ஆணையர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் திறமையான தொழிலதிபர்களும் அரசியலில் பங்குபெற வேண்டும் என்று அழைத்திருப்பதும், மக்கள் பிரதிநிதிகளைத் திரும்பப் பெறும் உரிமை வாக்காளர்களுக்குத் தரப்பட வேண்டும் என்பதும் துணிச்சல் மிக்க வரவேற்கத்தக்க கருத்துக்களாகும்.

●



தென்அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் பட்டம் பெறுகிறார் ஐசக் தேவகுமார்.

சீனாவில் வேத கணிதம்

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது தமிழகத்துப் பழமொழி. திரவியம் தேடுவதோடு, புகழையும் தேடுவது அதனினும் மேலானது. அந்த வகையில், நம் தமிழகத்தில் ஈரோட்டில் பிறந்து வளர்ந்த, கணித ஆசிரியர் ஒருவர், சீன நாட்டில் பணிபுரியச் சென்று, அந்நாட்டில் பணியாற்றும் வெளிநாட்டு ஆசிரியர்களில் 'சிறந்த ஆசிரியர்' என்ற அரசின் விருதினைப் பெற்றுள்ளது அவருக்கு மட்டுமல்லாமல், நம் அனைவருக்கும் பெருமை.

அந்த நல்லாசிரியர் திரு. ஐசக் தேவகுமார் இந்த விருதைப் பெறுவதற்குக் காரணம், எந்த ஒரு கடினமான கணக்கினையும், நம் நாட்டின் பண்டைய 'வேத கணித' முறையில் மிக மிக எளிமையான முறையில், 'அபாகஸ்' முறைக் கணிதத்தைத் தந்த சீன நாட்டினருக்குக் கற்பித்து, அவர்களை வியப்படையச் செய்துள்ளார்.

விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்திருந்த திரு. தேவகுமார், கோவையில் 'ஓம் சக்தி'க்கு அளித்த பேட்டி...

கேள்வி : உங்கள் மாணவப் பருவத்தையும், ஆசிரியப் பணிக்கு வந்ததையும் பற்றிக் கூறுங்கள்...

பதில் : ஒன்றாம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில்தான் நான் கல்வி பயின்றேன். இதுவரை 10 பட்டங்கள் பெற்றிருக்கிறேன். இதற்கான உந்துதல் பள்ளியில் படிக்கும்போதுதான் கிடைத்தது.

நான் ஈரோட்டில் ஒரு சாதாரணமான சிறிய மெட்ரிகுலேசன் பள்ளியில் எனது ஆசிரியப் பணியைத் தொடங்கினேன். என்னுடைய ஆராய்ச்சியினால், மாணவர்களுக்கு எப்படித் தெளிவாக,

எளிதாகக் கற்பிக்க முடியும் என்பதை அறிந்து, கணிதத்தை மாணவர்கள் ஆர்வத்துடன் எளிதாகக் கற்றுக்கொள்ளும் வழிமுறையை உருவாக்கிக் கற்பித்து வருகிறேன்.

கேள்வி : கணிதத்தில் உங்களுக்கு எப்படி ஆர்வம் வந்தது?

பதில் : கணிதம் எனக்குப் பிடித்ததற்குக் காரணம், கணிதத்தை அனைத்து அறிவியல் பாடங்களுக்கும் அரசி என்பார்கள். ஒருவர் கணிதத்தில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தால், மற்ற பாடங்களை மிக எளிதாகப் படித்துவிட முடியும். இதை ஒரு பாடமாகப் படிக்காமல், ஒரு விளையாட்டாகவே கற்கலாம்.

நான் பள்ளிப் பருவத்திலேயே கணக்குகளை மிக நன்றாகப் போடுவேன். அப்போதே கணிதம்தான் மற்ற பாடங்களுக்கு அடிப்படை என்பதைத் தெரிந்து கொண்டேன். அதனால், நான் கணிதத்தில் ஆர்வம் கொண்டு கணித ஆசிரியரானேன். மேலும் 10–ஆம் வகுப்பில் எனக்கு குணசேகரன் என்ற ஆசிரியர் இருந்தார். அவர் கணக்குப் பாடத்தை நடத்தும்போது, அதை ஒரு விளையாட்டுப்போல நடத்துவார். அதுவும் எனக்குக் கணக்கில் ஆர்வத்தை ஏற்படுத்தியது.

கேள்வி : வேத கணிதம் என்பதைப் பற்றி விளக்குங்கள்...

பதில் : வேத கணிதம் என்பது நம் வேதங்களில் உள்ள இந்திய நாட்டின் பழமையான ஒரு கணித முறை. இதனை நமது முன்னோர்கள் மிக அதிக அளவில் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதில் மனத்தளவிலேயே பல கணக்குகளைப் போட்டு விடுவார்கள். எடுத்துக்காட்டாக ஓர் இடத்தில் கட்டடம் கட்ட வேண்டுமானால், அந்த இடத்தைப் பார்த்தே இன்னின்ன அளவுகளில் கட்டினால் வசதியாக இருக்கும் என்பதைச் சொல்லி விடுவார்கள். இது வேத கணித முறையாகும்.

இன்றைக்குக் கணிதச் சூத்திரங்களைக் கொண்டு பல படிநிலைகளில் ஏட்டில் பக்கம் பக்கமாகப் போடும் கணக்குகளை மிகச் சுருக்கமாக ஒரிரு படிநிலைகளில் எளிதாக வேத கணிதத்தில் போட்டுவிடலாம்.



சீன நாட்டின் சிறந்த ஆசிரியர் விருதுபெற்ற ஐசக் தேவகுமார்.

மகாராஜா சங்கராச்சார்யா என்பவர் வேத கணிதத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் வேதங்களைப் பற்றி, அவற்றில் கூறியுள்ள கணித முறைகளைப் பற்றியெல்லாம் விளக்கமாகத் தெரிவித்துள்ளார்.

கேள்வி : ஆர்யபட்டா, பாஸ்கரா முதலிய பண்டைய இந்திய வானியலாளர்கள் இந்த வேத கணிதத்தைப் பயன்படுத்தியுள்ளனரா?

பதில் : ஆம்! அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் காலத்தில் வேத கணிதம்தான் இருந்தது. அதனைப் பயன்படுத்தியே தங்கள் வானியல்

ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர்.

கேள்வி : வேத கணிதம் தொடர்பான புத்தகங்கள் ஏதேனும் எழுதியுள்ளீர்களா?

பதில் : இதுவரை புத்தகம் எதுவும் வெளியிட வில்லை. ஆனால், நான் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுப் பல தகவல்களைச் சேகரித்து வைத்துள் ளேன். கூடிய விரைவில் எனது நூலை வெளி யிடத் திட்டமிட்டுள்ளேன்.

ஒன்றாலும், தன்னாலும் மட்டுமே வகுபடும் 'பிரைம் எண்கள்' தொடர்பான ஆராய்ச்சிகளில் தற்போது ஈடுபட்டுள்ளேன். கூடிய விரைவில் இந்த ஆய்வு முடிவு பெறும். இந்த ஆய்வு வெற்றி பெற்றால், மனித சமூகத்திற்குப் பெரும் பயனைத் தரும்.

கேள்வி : டாக்டர் அப்துல் கலாம் அவர்கள் வேத கணிதத்தைப் பற்றி ஏதேனும் கூறியிருக்கிறாரா?

பதில் : அவர் வேத கணிதத்தைப் பற்றிப் பல முறை பேசியுள்ளார். ஆனால், அவரது ஆராய்ச்சி வேறு துறையில் இருந்தது.

கேள்வி : உங்களுக்கு இந்த வேத கணிதத்தை யார் அறிமுகப்படுத்தினார்கள்?

பதில் : நான் ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் பி.எஸ்சி. கணிதம் படிக்கும்போது எனக்குப் பேராசிரியர் அகஸ்டின் என்பவர் கணிதப் பாடங்களைக் கற்பித்தார். அவர் ஒரு கணக்கினைப் பல படிநிலைகளில் பெரிதாகப் போட்டார். வகுப்பு முடிந்தபின் அவரைச் சந்தித்து, இக்கணக்கு மிகவும் பெரிதாக உள்ளது. இதை நினைவில் வைத்துக் கொள்வது மிகவும் கடின மாக இருக்கிறது. இதை எளிதாக, சுருக்கமாகப் போட முடியாதா? என்று கேட்டேன்.

அதற்கு அவர், உறுதியாகப் போட முடியும். அதற்கு இந்தியாவின் பழைய முறையான 'வேத கணிதம்' (Vedic Mathematics) என்பது உள்ளது. அதனை நீ படித்தால் எப்படிப்பட்ட கணக்கையும் மிக எளிதாக இரண்டு – மூன்று படிநிலைகளில் போட்டு விடலாம் என்றார். அப்போதே நான் அதைப் பற்றி அறிய ஆவல் கொண்டு அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டேன்.

அதன்பின் நான் வேத கணிதம் தொடர்பான தகவல்களை நிறையத் திரட்டினேன். அதன் மூலம் எந்தக் கணக்கினையும் எளிதாகப் போடும் முறையைக் கண்டறிந்தேன். ஆசிரியப் பணியில் இருப்பதனால், மாணவர்களுக்கு எளிதாகக் கணக்குகளைக் கற்பிக்க இந்த முறையைப் பயன் படுத்தத் தொடங்கினேன். மற்ற ஆசிரியர்கள், பல படிநிலைகளில் கற்றுத் தருவதைவிட, மிகச் சுலபமான வேத கணித முறையில் கற்பிக்கத் தொடங்கினேன்.

கேள்வி : கணித மேதை ராமானுஜம் வேத கணிதத்தைப் பயன்படுத்தியுள்ளாரா? இது பற்றி அவர் ஏதேனும் சொல்லியிருக்கிறாரா?

பதில் : அவர் மூன்று தலைமுறைகளுக்கு முற் பட்டவர். எனவே, அது பற்றித் தகவல் எதுவு மில்லை. ஆனால், கணித மேதை ராமானுஜம் அவர்கள் பிறந்தது ஈரோட்டில்தான். இப்போதும் அவரது கொள்ளுப்பேரன் திரு. லட்சுமி நாராயணன் ஈரோட்டில்தான் இருக்கிறார். அவரது வீட்டிற்குச் சற்று அருகில்தான் எங்கள் வீடு உள்ளது. அவரிடத்திலும் கணிதம் பயின்ற பெருமை எனக்குண்டு. அவர் ஈரோட்டில் 'ராமானுஜம் கணித மையம்' என ஓர் அமைப்பை நடத்தி வரு கிறார். அதில் நான் செயலாளராக இருந்துள் ளேன். அதன் மூலம் பல கல்லூரிகளுக்குச் சென்று கணிதம் கற்பித்துள்ளேன். அதனால் என்னை 'ஈரோடு ராமானுஜம்' என்று அழைப் பார்கள்.

கேள்வி : இப்போது நம் தமிழகக் கல்வித் துறையில் உள்ள கணித நூல்களைவிட, வேத கணிதம் எந்த அளவில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது?

பதில் : வேத கணிதம் என்பது தனியான ஒரு முறை கிடையாது. இது இந்தியக் கணித முறை தான். இதில்தான் ஆதி காலத்தில் கணக்கு களைப் போட்டார்கள். இந்தக் கணித முறையைத் தமிழக அரசின் பாடத்திட்டத்தில் பயன்படுத்தி னால், நிச்சயமாக மாணவர்கள் மிகவும் ஆர்வ மாகப் படிக்கத் தொடங்கி, நல்ல முன்னேற்றத் தைக் காண்பார்கள்.

கேள்வி : பூஜ்யத்தைக் கண்டுபிடித்தவர்கள் யார்? பூஜ்யத்தால் கணிதத்திற்குத் தவிர வேறு துறை களுக்குப் பயன் உண்டா?

பதில் : பல்லாயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்பு பூஜ்யத்தைக் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்கள். அதைக் கண்டுபிடித்த பின்னர்தான் அறிவியலே வளரத் தொடங்கியது. வட்ட வடிவத் தில்தான் சக்கரங்கள் சுழல்கின்றன. பல

செயல்பாடுகள் இந்த வடிவில் நடைபெறுகின்றன. எனவே, கணிதத்திற்கு மட்டுமின்றி, பல அறி வியல் துறைகளுக்கும் இந்தியாதான் வழிகாட்டி யாக இருந்துள்ளது.

கேள்வி : சீனாவில் ஆசிரியர் பணிக்கு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது எப்படி?

பதில் : அங்கிருந்து வேலைவாய்ப்பு அறி விப்புச் செய்திருந்தார்கள். நான் விண்ணப்பித் தேன். அதன்பின் 'ஆன்லைனில்' தேர்வு வைத் தார்கள். பின்னர் குறிப்பிட்ட பாடத்தைத் தந்து 'ஆன்லைனிலேயே' கற்பிக்கச் சொன்னார்கள். அதன்படி நான் கற்பித்தேன். அதன்பின் நேர்முகத் தேர்வு (இண்டர்வியூ) ஸ்கைப் மூலம் செய்தார்கள். இவற்றிலெல்லாம் நான் தேர்வானபின் அங்கே ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

கேள்வி : உங்களுக்கு நம் நாட்டில் ஆசிரியப் பணிக்கு வாய்ப்பு இல்லாமல் வெளிநாட்டு வேலைக்கு முயற்சி செய்தீர்களா?

பதில் : இங்கு எனக்கு வாய்ப்புகள் இருந்தன. இங்கும் ஆசிரியப்பணி செய்து கொண்டுதான் இருந்தேன். பி.எஸ்சி. முதலாமாண்டு படிக்கும் போதே வேத கணிதத்தைப் பயிலத் தொடங்கி விட்டேன். அப்போதே மாணவர்களுக்குத் தனிப்பயிற்சியில் கற்பிக்கத் தொடங்கிவிட்டேன். அத்துடன் எங்கள் வீட்டிற்கு அருகிலிருந்த மெட்ரி குலேசன் பள்ளியில் பகுதி நேர ஆசிரியராகப் பணியாற்றினேன். பின்னர் வேறொரு பள்ளி யிலும், சில கல்லூரிகளிலும் சென்று கற்பித்தேன். அப்போது ஓய்வின்றி உழைத்துக் கொண்டிருந் தேன். வெளிநாட்டிற்குச் சென்றால், இன்னும் கொஞ்சம் புதிய அனுபவங்களைப் பெறலாம் என்று வெளிநாட்டு வேலைக்கு முயற்சி செய்து தேர்வானேன்.

கேள்வி : நம் நாட்டின் வேத கணிதத்தைக் கற்பிப் பதைப் போல, சீனாவின் கணித முறைகளில் என்னென்ன கற்பிக்கிறீர்கள்?

பதில் : நான் கற்பிப்பது சீன நாட்டுப் பாடத் திட்டத்தில் உள்ள கணிதம்தான். ஆனால், அதில் நம் நாட்டின் வேத கணித முறையை உள்ளே புகுத்தி எளிதாகவும், விரும்பும் வகையிலும் கணக்குகளைப் போடக் கற்பித்து வருகிறேன்.

கேள்வி : நீங்கள் பணியாற்றும் ஒரு பள்ளி அள வில்தான் உங்கள் வேத கணித முறைக் கற்பிப்பு உள்ளதா?

பதில் : அந்த ஒரு பள்ளியில்தான் முழு நேர ஆசிரியராகக் கற்பிக்கிறேன். ஆனால், பிற பள்ளி களிலும் வருகை ஆசிரியராகச் சென்று கற்பித்து வருகிறேன்.

கேள்வி : நீங்கள் சிறந்த ஆசிரியர் விருது பெற்ற அனுபவத்தைக் கூறுங்கள்..

பதில் : நான் 2015–இல் சீனாவில் பணியில் சேர்ந்தேன். முதலாண்டிலேயே மாணவர்களுக்கு வேத கணித முறையில் புதுப்புது வழிமுறைகளில் எளிதாகக் கணக்குகளைப் போடுவதற்குக் கற் பித்துக் கொண்டிருந்தேன். கணிதத்தில் 30, 40 என மிகக் குறைவான மதிப்பெண்கள் பெற்று வந்த மாணவர்களெல்லாம், இம்முறையில் கற்கத் தொடங்கியதிலிருந்து, 90, 95 என்று மிகுந்த மதிப்பெண்கள் பெறத் தொடங்கிவிட்டார்கள்.

இதனை அறிந்த பள்ளியின் முதல்வர் வியந்து போய் என்னை அழைத்து, 'வந்த முதலாமாண் டிலேயே மாணவர்களை மிகவும் சிறப்பாக மாற்றி யிருக்கிறீர்கள்' என்று பாராட்டி, இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று கேட்டார்.

நான், 'இது எங்கள் நாட்டின் வேத கணித முறை. இம்முறையில் கற்பித்த தால், மாணவர்கள் இந்த வெற்றியைப் பெற வைக்க முடிந்தது' என்று வேத கணிதத்தைப் பற்றி அவரிடம் விளக்கிக் கூறினேன்.

எனவே, என்னைப் பற்றி சீன நாட் டின் கல்வித்துறைக்கு அவர் கடிதம் எழுதினார். அங்கே கல்வித்துறையில் சிறந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்



குழுவினர் ஆண்டுதோறும் பள்ளிகளுக்கு நேரடியாக வந்து, வகுப்பறைகளில் ஆசிரியர்கள் கற்பிப்பதை ஆய்வு செய்வார்கள். அக்குழுவினர் எங்கள் பள்ளிக்கு வந்து, நான் கற்பிக்கும் முறையைப் பார்த்து மதிப்பீடு செய்து சென்றனர்.

அந்தக் குழுவினர் 2 வகையான தேர்வுகளைச் செய்கிறார்கள். ஒன்று, சீன நாட்டைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு. மற்றொன்று, வெளிநாடுகளிலிருந்து சீனாவிற்கு வந்து பணியாற்றும் ஆசிரியர்களுக்கு. வகுப்புகளில் வந்து பாடம் நடத்துவதைக் காணொளிக் காட்சியாக வீடியோவில் பதிவு செய்வார்கள்.

அந்த வகையில், 150 வெளிநாடுகளிலிருந்து வந்து பணியாற்றும் ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியராக நான் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்போட்டியில் நான் பெற்ற மதிப்பெண்கள் 97. இந்த அளவு மதிப்பெண்கள் இதுவரை யாரும் பெற்றதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விருதை வென்ற முதல் இந்தியர் என்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கிறது.

இது ஒரு பன்னாட்டு விருது. எனவே, இந்த விருது கிடைத்ததில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இதற்கென்று ஒரு விழாவினை ஏற்பாடு செய்து விருதினை வழங்கினார்கள். தமிழகத் தொலைக்காட்சிகளில் இச்செய்தியை ஒளிபரப்பினார்கள். தமிழகப் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு கே.ஏ. செங்கோட்டையன் அவர்களும் என்னை அழைத்துப் பாராட்டினார். என்னைப் பற்றி அறிந்து தென் அமெரிக்க நாட்டின் ஒரு பல்கலைக்கழகம் எனக்கு கவுரவ 'டாக்டர்' பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது. என்னை உருவாக்கியது இந்தத் தமிழகம் என்பதை நான் நன்றியோடு நினைவு கூர்கிறேன்.

கேள்வி : சீனர்களுக்குத் தாய்மொழிப்பற்று எந்த அளவுக்கு உள்ளது?

பதில் : சீனர்கள் தங்கள் தாய்மொழியின்மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்கள். தங்கள் மொழிக்குத்தான் முக்கியத்துவம் தருகிறார்கள். வேறு மொழியில் பேச மாட்டார்கள். எங்குச் சென்றாலும் சீன மொழியில்தான். நான் அங்கு நம் முறையில் 'வணக்கம்' சொல்லக் கற்றுக் கொடுத்து வருகிறேன்.

கேள்வி : உங்கள் மனைவி, உங்கள் ஆசிரியப் பணிக்கு உதவியாக இருக்கிறார்களா?

பதில் : மிகவும் உதவியாக இருக்கிறார்கள். அங்கே ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கச் செல்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே, கற்பிப்பதைப் பற்றி அனைத்தையும் பள்ளி நிர்வாகத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். கற்பிக்கச் செல்லும்போது மடிக்கணினி, பவர்பாயிண்ட், கல்வி உபகரணங்கள் முதலியவை கண்டிப்பாக இருக்க வேண்டும். நான் எப்போதும் வீட்டில் இரவில் அதிக நேரம் கண்விழித்துப் பவர் பாயிண்ட் மற்றும் பிற உபகரணங்களைத் தயார் செய்வேன்.



கோவையில் அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியைகளிடம் வேத கணிதம் பற்றி ஐசக் தேவகுமார் விளக்குகிறார்.

அப்போதெல்லாம் என் மனைவி மிகவும் உதவியாக இருக்கிறார்.

கேள்வி : பள்ளி வேலை நேரம் எப்போது?

பதில் : காலை 9 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை பள்ளி செயல்படும். காலை 7.30 மணிக்கே தனி வகுப்புகள் தொடங்கிவிடும். மாலை 5.30 மணிக்குப் பின்னர் 1 மணி நேரத்திற்குப் பின்னர் மாணவர்கள் மீண்டும் படிக்க வந்துவிடுவார்கள்.

கேள்வி : மதிப்பெண் முறையெல்லாம் எப்படி?

பதில் : அங்கெல்லாம் ஏ, ஏ+, பி என 'கிரேடு' முறைதான். இதில் தேர்வு என்பது 30 விழுக்காடு தான். மாணவர்களின் வருகைப் பதிவு, அவரது நடத்தைகள், வீட்டுப்பாடம் செய்தல் எல்லாவற்றிற்கும் சேர்ந்துதான் மதிப்பெண்கள் தரப்படும்.

கேள்வி : கல்விக் கட்டணம் எப்படி?

பதில் : அங்கே அனைவருக்கும் இலவசக் கல்விதான். உணவும் அரசே பள்ளியில் இலவசமாக வழங்கி விடுகிறது. கல்லூரிகளுக்குக் கட்டணம் உண்டு. ஆனால், அதுவும் மிகக் குறைவாகவே இருக்கும். அங்கே கல்லூரிகள் என்பன ஒவ்வொன்றும் பல்கலைக்கழகங்களாகவே இருக்கின்றன.

கேள்வி : சீனாவில் உங்களுக்கு ஊதியம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது?

பதில் : அங்கே படிப்பு, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் ஊதியம் வழங்கப்படுகிறது. வருமான வரி 15 சதவிகிதம் பிடித்தம் செய்து கொண்டு ஊதியம் வழங்கப்படும்.

கேள்வி : வேலை நேரம் எப்படி?

பதில் : ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதிரி அவரவர்களின் பணி நேரம் மாறுபடும். ஒரு நாளைக்கு அதிகாலை 7.30 மணிக்கே செல்ல வேண்டியிருக்கும். மறுநாள் நண்பகல் 2 மணிக்குச் செல்ல வேண்டியிருக்கும். ஆனால், பள்ளியில் செய்ய வேண்டிய வேலையைப் பள்ளியில்தான் செய்ய வேண்டும். வீட்டிற்கு எடுத்துச் சென்று செய்யக்கூடாது. வீட்டில் வீட்டு வேலைகளைத்தான் பார்க்க வேண்டும். அதற்காகவே, பள்ளியில் கற்பிக்கும் நேரம், வேலைகள் செய்யும் நேரம் என இரண்டு வகையாக நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன.

ஒரு வாரத்திற்குக் கற்பிக்க வேண்டிய பாடத் திட்டத்தைப் பாடவேளை நேரம் முதற்கொண்டு அனைத்துத் தகவல்களையும் விரிவாக அதற்கு முந்தைய வாரம் வியாழக்கிழமை மாலையே பள்ளி முதல்வரிடம் சமர்ப்பித்துவிட வேண்டும்.

கேள்வி : பள்ளி வேலை நாட்கள், விடுமுறை நாட்கள் எப்படி?

பதில் : வாரத்தில் திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை 5 நாட்கள் பள்ளி வேலை நாட்கள். சனி, ஞாயிறு வார விடுமுறை நாட்கள். அவை போக பண்டிகை நாட்கள் ஆண்டு முழுவதும் ஏராளமாக இருக்கும். ஒவ்வொரு பண்டிகைக்கும் 4 – 5 நாள்கள் விடுமுறை இருக்கும். புத்தாண்டிற்கு ஒன்றரை மாதத்திற்கு மேல் விடுமுறை விடுவார்கள். அவை போகக் கோடை விடுமுறையும் உண்டு.

கேள்வி : பள்ளியில் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டு நீங்கள் ஏதேனும் சிறப்புப் பணி செய்கிறீர்களா?

பதில் : சீன மாணவர்கள் மேற்படிப்பிற்கு அமெரிக்காவிற்குச் சென்று படிக்க வேண்டுமென்றால், அதற்காக Advance Placement Calculus Test என்ற ஒரு தேர்வை எழுத வேண்டும். இந்தத் தேர்வை எழுதித் தேர்ச்சி பெற்றவர்களுக்கு அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கல்விக் கட்டணச் சலுகை கிடைக்கிறது. அதற்கான பாடத் திட்டத்தைத் தயாரிக்கும் குழுவில் நானும் ஓர் உறுப்பினராக இருக்கிறேன்.

கேள்வி : பாடத்திட்டம் எப்படி உள்ளது?

பதில் : நாடு முழுவதும் ஒரே பாடத்திட்டம். அறிவியலில் இங்கு உள்ளதைப்போன்றே இயற்பியல், வேதியியல், தாவரவியல், உயிரியல் எனவும், கணிதமும் இருக்கின்றன. இவை போக, கலை, கைவினைப்பாடங்கள் நிறைய உள்ளன. மேலும் வானியல், கடலியல் எனப் பல வகையான பாடங்கள் உள்ளன. மொழிப்பாடங்களாகச் சீனமும், ஆங்கிலமும் உள்ளன. அரசுப் பள்ளிகளில் இலவசக் கல்விதான். தனியார் பள்ளிகளும் உண்டு. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை தேர்வுகள் நடக்கும். கல்லூரிக் கட்டணங்கள் மிகவும் குறைவாகவே இருக்கும்.

கேள்வி : உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

பதில் : நம் நாட்டிலும் கல்லூரிகளுக்கு வேத கணித முறையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி (Aptitude training) முன்பு அளித்துள்ளேன். சீனாவில் குறிப்பிட்ட காலம் இருந்துவிட்டு நம் நாட்டிற்குத் திரும்பிய பின் இதற்கென ஒரு பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் என்பதுதான் எனது எதிர்காலத்திட்டம்.

கேள்வி : கணிதம் பயிலும் மாணவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது?

பதில் : கணித மேதை ராமானுஜம் உட்பட எந்த ஒரு வெற்றியாளரும் பிறக்கும்போதே மேதையாகப் பிறப்பதில்லை. பிறந்த பின்தான் தங்கள் தகுதிகளை, திறமைகளை வளர்த்துக் கொண்டார்கள். கடவுள் எல்லோரையும் சமமான திறன்களோடுதான் படைக்கிறார். அவற்றை நாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதில்தான் நமது வெற்றி இருக்கிறது.

பேட்டி : **இரா. வேணுகோபாலகிருஷ்ணன்**

ஜெயம் மணியனின் "ரோமியோ ஜூலியட்" நாடக நூல் ஒரு பார்வை



ஜெயம் மணியன் அவர்களின் நூல்களில் எனக்கு மிகவும் பிடித்த நூல் 'ரோமியோ ஜூலியட்.' மிக அற்புதமான நாடக நூல். அந்த ரோமியோ ஜூலியட் நூல் வாயிலாகவே ஜெயராமன் (ஜெயம் மணியன்) அவர்கள் முத்தமிழ் வித்தகர் என்னும் இலக்கியப் பீடத்தை நோக்கித் தவழ்ந்து செல்கிறார். அவர் மிக அருமையாக வசனம் எழுதியிருக்கிறார்.


இந்நூலைப் படித்ததன் வாயிலாக, ரோமியோ ஜூலியட்டைப் பற்றிய ஒரு வரலாற்றுப் பின்னணி எனக்குத் தெரிந்தது. ஒரு காதலன், காதலி ஏதோ காதலித்தார்கள், எதிர்ப்பு வந்தது, விஷம் சாப்பிட்டார்கள், இறந்தார்கள் என்பது ஷேக்ஸ்பியரின் ஒரு டிராஜடி பிளே. ஆனால், இந்த ரோமியோ, ஜூலியட் என்ற கதையின் மூலக்கதை எங்கிருந்து வந்தது? எப்படி வந்தது? என்பதையெல்லாம் மிகவும் ஆராய்ந்து, பிறகு அவர்கள் இந்த நாடகத்தை அடாப்டேஷன் என்கிற முறையில் எழுதியிருக்கிறார்.

இந்த ரோமியோ ஜூலியட்டைப் படிக்கும்பொழுது, எனக்கு மிகவும் வியப்பான ஒரு செய்தி கிடைத்தது. ரோமியோ ஜூலியட்டைப் புகழ்ந்து ஷேக்ஸ்பியரைப் புகழ்ந்து அயல் நாடுகளில் எவரும் ஷேக்ஸ்பியரை முதல் முதலாகக் கௌரவித்தது கிடையாது. காரல் மார்க்ஸ், ரோமியோ, ஜூலியட் பற்றியும் ஷேக்ஸ்பியர் பற்றியும் தம் மாமனார் வாயிலாக ஜெர்மன் மொழியில் கற்றுத் தெரிந்தவர். இது என்னுடைய தாத்பர்யம்.

ரோமியோ ஜூலியட் பற்றியும், ஷேக்ஸ்பியர் பற்றியும் ஜெர்மன் மொழியில் 1864–லிலேயே வெளிவந்துவிட்டது. மிக அற்புதமான ஒரு பாராட்டு ஷேக்ஸ்பியருக்கு அவருடைய காலத்தில் இல்லாவிட்டாலும், பிறகு வந்த காலத்தில், ஜெர்மனியில்தான், ஷேக்ஸ்பியர் அவர் எம்மவர் என்று மார் தட்டிக் கொண்டார்கள்.

ஷேக்ஸ்பியருக்காக முதன்முதலாக 'ஷேக்ஸ்பியர் சொசைட்டி' என்கிற அமைப்பு ஜெர்மனியில் தான் தோன்றியது. அது 1864ஆம் ஆண்டு. காரல் மார்க்ஸ்தான் ஷேக்ஸ்பியரை முற்றிலுமாகப் படித்தவர். காரல்மார்க்ஸ் பற்றி 'இலக்கிய இதயம்' என்ற நூலை நான் 1983–இல் எழுதியிருக்கிறேன். அவர் தன்னுடைய 'மூலதனம்' முதலான அற்புதமான நூல்களில் ஷேக்ஸ்பியர் பற்றி மேற்கோள் காட்டியிருக்கிறார்.

அதேபோன்று மேல்நாட்டு இலக்



பெ.சு. மணி

கியங்களில் ஈடுபாடு கொண்ட சுவாமி விவேகானந்தர், ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களில் தேர்ச்சி கொண்டவர். சுவாமி விவேகானந்தர் தன்னுடைய உரையின்போது, பல இடங்களில் ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசுவது உண்டு. நமது தமிழகத்தில், பரமக்குடியில் பேசும்போது, 'ஹேம்லெட்'டிலிருந்து கருத்துக்களை எடுத்து மேற்கோள் காட்டியுள்ளார். அந்த அளவிற்குக் காரல் மார்க்ஸ் முதலான மேதைகளையெல்லாம் கவர்ந்த பெருமை ஷேக்ஸ்பியருக்கு அந்தக் காலத்தில் உண்டு.

திரு. டி.என். சேஷாசலம் அவர்கள் தமது 'கலாநிலையம்' இலக்கிய வார இதழில் ஷேக்ஸ்பியரின் கிட்டத்தட்ட 6–7 நாடகங்களை வெளியிட்டு வந்தார். தமிழ் மக்களுக்கு ஷேக்ஸ்பியரை அறிமுகப்படுத்திய பெருமை அவரையே சாரும். அவருடைய பிள்ளைதான் இப்போது இருக்கும் பரணிதரன். இவர் 'மெரினா' முதலிய நாடகங்களை எழுதியுள்ளார். அதேபோல் மாதவய்யா அவர்கள் ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோ' நாடகத்தை மொழிபெயர்த்தார். இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், தமிழில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை எல்லோரும் படித்து இன்புற வேண்டும் என்ற மகத்தான நோக்கு அந்தக்காலத்தில் படித்தவர்களுக்கு இருந்தது. அத்தகைய நோக்கில் எனது அருமை நண்பர் ஏ.என்.எஸ். மணியன் அவர்களுடைய இலக்கிய வாரிசாக இருக்கிற ஜெயராமன் அவர்கள் இந்த நூலை அற்புதமான முறையில் செய்துள்ளார்.

இந்த நூலைப்பற்றி நான் மீண்டும் சொல்ல விரும்புவது அடாப்டேஷன். அப்படிச் செய்யும் போது சில தவறுகள் ஏற்படலாம். ஜெயம் மணியனைக் கேட்டேன். "எதை அடிப்படையாக வைத்து இந்த நூலை எழுதினீர்கள்?" என்று. அவரும் சில நூல்களின் பெயர்களைச் சொன்னார். நான் ஷேக்ஸ்பியரின் மூலத்தை மட்டுமல்ல, அது தொடர்பானவற்றையும் படித்திருக்கிறேன். அப்படிப் பார்க்கும்போது, மூலக்கரு சேதமடையாமல் ஜெயம் மணியன் இந்த நூலைப் படைத்திருக்கிறார்.

ரோமியோ ஜூலியட் பற்றிப் பல விமர்சனங்கள் படித்திருக்கிறேன். பிறகு இந்த நூலினைப் படித்தேன். கதைக்களம் பார்த்தேன். வட இத்தாலியின் வெரோனா நகரத்தில் ஒரு பொது இடம். அப்போது கேப்புலெட் மற்றும் மாண்டாகு எனும் இரு பெரும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெருவினில் சண்டை இடுகிறார்கள். அவர்களின் பகை நீண்ட காலமானது. அந்த மாறுபட்ட சூழ்நிலையிலிருந்து வந்தவர்கள் ரோமியோ என்ற காதலனும், ஜூலியட் என்ற காதலியும். ஆக, இரு பெரும் பகை கொண்ட குடும்பங்கள் இடையே தோன்றி அவர்கள் காதல் நிறைவேறுமா, நிறைவேறாதா என்பதுதான் இந்தக் கதை. 'காதல் காதல் காதல், காதல் போயின் சாதல் சாதல் சாதல்.' இதுதான் இந்த நாடகத்தைப் பற்றிய கரு.

மிக அருமையாக ஜெயம் மணியன் அவர்கள் காதல் தத்துவத்தை, மிக இளைஞராக இருந்தும் கூட, அனுபவத்தின் வாயிலாகவோ, படித்ததன் வாயிலாகவோ மிக அருமையாகச் சித்தரித்திருக்கிறார்.

உங்களுக்குத் தெரியும், சங்கராச்சாரியாரைப் பற்றிய ஒரு கதை. அவரிடம் 'எல்லாம் படித்த உங்களுக்கு ஆண், பெண் உறவைப் பற்றித் தெரியுமா?' என்று கேட்டது. அது ஒரு கதைதான். நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். அதாவது, எதை எழுதினாலும், அனுபவ ரீதியாக அறிந்து கொள்ள வேண்டிய கடமை எழுத்தாளனுக்கு உண்டு.

ஜெயராமன் அவர்கள் இந்த நூலில் மிக அருமையாக, ரோமியோ ஜூலியட்டுடைய காதல் உரையாடல்களை, அது அந்தரங்கத்தில் நிகழ்ந்ததா அல்லது... என்ற கேள்வி வேறு. இந்த சிங்கார ரசம், நளினம் என்பதெல்லாம் அந்த வாகனங்களில் தெளிந்து தெளிந்து ஓடுகின்றன. நான் முழுவதும் படித்தேன். மிக அற்புதமாக அந்த வசனங்களை எழுதியுள்ளார்.

அந்தத் தெருச்சண்டையிலே கூட, அந்த ராஜா கூறுகிறான், "நீங்கள் அடுத்த முறை சண்டை போட்டீர்கள் என்றால், உங்களைத் தூக்கிலே போட்டுவிடுவேன்." அதாவது, தெருச் சண்டை போடுகின்ற அநீதியையெல்லாம் கூடக் கண்டு, கவலைப்பட்டிருக்கிறான் அந்தக் கால அரசன்.

ரோமியோ, ஜூலியட் கதை வாயிலாகக் காதலின் நுட்பங்கள், நெகிழ்வுகள், அதன் கூறுகளை எல்லாம் மிக அருமையாகப் படித்து, அதை உள்வாங்கிக் கொண்டு தன்னையும் சேதப் படுத்திக் கொள்ளாமல், எழுத்தையும் சேதப் படுத்திக் கொள்ளாமல், கதைக் கருவையும் சேதப் படுத்திக் கொள்ளாமல் ரோமியோ ஜூலியட்டை ஜெயம் மணியன் படைத்துள்ளார்.

ரோமியோ ஜூலியட் இருவருமே உண்மையாக நேசித்தார்கள். ஒரு விஷயம், ரோமியோ

ஜூலியட்டைப் பற்றி ஒரு விமர்சனம் உண்டு. உண்மையாக நேசித்த ரோமியோ ஜூலியட் ஏன் இறக்க வேண்டும் என்ற கேள்வி எழுப்பப்படு கிறது.

அதற்கு, அதன் பழைய நூலில் காரணம் வைத்துள்ளார்கள். அவர்களின் குடும்பச் சூழ் நிலை காரணமாக, ரோமியோவை மறந்துவிட்டு, வேறொருவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டிய கட்டாயம் ஜூலியட்டிற்கு ஏற்படுகிறது. அதை எப்படித் தவிர்ப்பது என்று ஜூலியட், அவருடைய கிறிஸ்தவப் பாதிரியார் தந்தையைக் கேட்டுள்ளார். அவர் ஒரு யோசனை சொல்கிறார்.

பாரிஸ் என்பவரைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து விடுகிறார் ஜூலியட். ஆனால், பாரிஸ் தன் செல்வாக்குக் காரணமாக, தன் தாய் தந்தையரின் செல்வாக்குக் காரணமாக, ஜூலி யட்டை அடையப் படாதபாடு படுகிறார். இந்த விபத்திலிருந்து காப்பாற்றுவதற்காக, அந்தப் பாதிரியார் ஒரு யோசனை சொல்கிறார்.

''நான் ஒரு மருந்தை ஒரு குடுவையில் கொடுக்கிறேன். அதை நீ சாப்பிட்டுவிடு. அதை நீ சாப்பிட்டுவிட்டால், 48 மணி நேரம் நீ சவமாக இருப்பது போல் காட்சி தருவாய். உன்னை ஒரு சவப்பெட்டியில் வைத்து விடுவார்கள். அதற்கு அப்புறம் நான் ரோமியோவை வரச்சொல்கிறேன். அவன் நல்லபடியாக வந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்வான்.'' அப்படியான ஒரு யோச னையை அந்தப் பாதிரியார் உபதேசிக்கிறார்.

அதேபோல் ஜூலியட்டும் குடுவையில் உள்ள மருந்தைச் சாப்பிட்டுவிட, புலன்கள் எல்லாம் ஒடுங்கி விடுகின்றன. அவளைச் சவப்பெட்டியில் போட்டு மூடிவிட்டார்கள். ஆனால், அதேநேரத்தில் மகத்தான ஒரு பிழையை ஏற்படுத்தி விட்டான் நாடக ஆசிரியன். பாதிரியார் இந்தத் தகவலை ரோமியோவிற்குச் சொல்லி அனுப்புகிறார். ஜூலியட் மருந்து சாப்பிட்டதையும், சவம் போல் கிடப்பதையும் சொல்லி அனுப்புகிறார். இதைக் கடிதத்தில் எழுதி, ஒரு நபர் மூலம் கொடுத்து அனுப்புகிறார்.

விதியின் விளையாட்டு இங்குதான் தெரி கிறது. யாரிடம் இந்தக் கடிதத்தைக் கொடுத்து அனுப்பினாரோ, அவன் எடுத்துச் செல்லும்போது, அந்த ஊரில் ஒரு தொற்று நோய் ஏற்படுகிறது. அந்தத் தொற்று நோய் காரணமாக, நகரத்தை விட்டு யாரும் செல்லக்கூடாது என ராஜா கட்டளை இட்டுவிட்டார். அந்த ஆணைக்குக் கட்டுப்பட்டு, ரோமியோவிற்குக் கடிதம் எடுத்துப் போகிற அவனும் போகாமல் இருந்துவிட்டான்.

ஆகவே, இந்தக் கடிதம் ரோமியோவிற்கு உரிய நேரத்தில் சேராதது காரணமாக, நாடக ஆசிரியர் இந்த அவல முடிவினை ஏற்படுத்து கிறார். அந்தக் கல்லறைக்கு எல்லோரும் வரு கிறார்கள். ரோமியோவும் தேடிக்கொண்டு வரு கிறான். செய்தியை அறியாத ரோமியோ, உண்மை யிலேயே ஜூலியட் இறந்து விட்டாள் என்று, விஷம் குடித்துத் தன் உயிரினைப் போக்கிக் கொள் கிறான். பின் நினைவு திரும்பிய ஜூலியட் நடந் ததை அறிந்து வேதனை அடைகிறாள்.

ரோமியோவின் வாயிலிருந்து விஷம் வழி கிறது. விஷம் குடிக்க நினைத்த ஜூலியட், குடு வையில் விஷம் இல்லாததைக் கண்டு, ரோமியோ வின் உதட்டில் வழியும் விஷத்தையே உட் கொள்ளுகிறாள். மேலும், ரோமியோவின் இடுப் பிலிருந்த குறுவாளை எடுத்துக்கொண்டு, தன்னையே குத்திக்கொண்டு தன் உயிரைப் போக்கிக் கொள்கிறாள்.

இந்தக் கதையின் செய்தி என்னவென்றால், அந்த இரு பெரும் குடும்பங்களும், தன் வீட்டுப் பிள்ளைகள், தங்களுடைய பகையினால் இறந்த தைக் கண்டு வேதனை அடைந்து, பின் பகையை விட்டுவிட்டு ஒன்று சேர்கிறார்கள். ஆனால், நமது ஜெயம் மணியன் அவர்கள், பொயடிக் சயின்ஸ் என்று சொல்வார்களே, அதைக் கையில் எடுத்துக் கொண்டு, அதைப் பயன்படுத்தி, அந்தப் பாதிரியார் ஒரு பெரிய லெக்சர் கொடுக்கிறார் கடைசியில். எங்கே? இத்தாலியின் கல்லறையில். 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்த தமிழ்' என்றெல்லாம் அங்கு பேசுவதாக எழுதுகிறார்.

ஆனால், அந்தப் பாதிரியார் வாயிலாக, குடும் பத்தில் இருக்கும் பகையைப் போக்க வல்லது காதலின் தியாகம் என்று குறிப்பாகச் சொல்கிறார். இரண்டாவதாக, இந்தக் கதையால், பண்பாடு காப்பாற்றப்படுகிறது. மொழி, பண்பாடு, பண்டைய சீர்திருத்தம், இன்றைய சீர்திருத்தம் என்று பெரிய லெக்சர் 6, 7 பக்கங்களுக்கு விளாசுகிறார்.

நான் அவரிடம் கேட்டேன், 'இத்தாலியில் எங்கப்பா இது எல்லாம்?' என்று. தமிழின்மீது கொண்ட ஆர்வத்தால், அனைவரும் அறியப் பல செய்திகளைக் கூறியதாகக் கூறினார்.

இந்த நாடகம் ஓர் அரும்புதான். இது மலர்ந்து மணம் வீசி, சுயமாகவே பல நாடகங்கள் படைத்து, அந்த முத்தமிழ் வித்தகர் என்ற இலக்கியப் பீடத்தை நோக்கி, மேலும், மேலும் பல நாடகங்களை எழுதி, அவர் முன்னுக்கு வரவேண்டும் என்று வாழ்த்து கிறேன். ●

4–ம் பக்கத் தொடர்ச்சி

துறையில் சிம்சன் தொழிற்சாலைகள், கார் தொழிற்சாலைகள் எனப் பல தொழிற்சாலைகள் உள்ளன.

கோவையில் அரசுத் தொழிற்சாலைகள் எவையும் இல்லை. எல்லாம் தனியார் முயற்சிகள் தான். ஒரு காலத்தில் நூற்பாலைகளின் எண் ணிக்கை இங்குதான் அதிகம். தொழிலாளர் களும், தொழிற்சங்கங்களும் அதிகமாகச் செயல் பட்டது கோவையில்தான். இங்குதான் 'சைமா' என்ற ஆலை அதிபர்கள் சங்கம் செயல்பட்டது.

சைமா போலத்தான் 'கொடீசியா' உள்ளது. இந்தக் குறுந்தொழிற்சாலைகளின் தொழிலதிபர் கள், தங்களுடைய தொழிற்சாலைகளை வணிக ரீதியில் மட்டுமே நடத்தி வருமானத்தைப் பெருக்க லாம். அதுதான் நியாயமும்கூட.

ஆனால், கோவை கொடீசியா தொழில் அதிபர்கள் ஏனோ வணிக ரீதியில் தங்கள் தொழிற்சாலைகளை நடத்தினாலும், வருங்காலச் சந்ததிக்கு ஏதாவது நல்லதைச் செய்ய வேண்டு மென்று ஏனோ நினைக்கத் தொடங்கினார்கள். அந்த நினைப்பு அவர்கள் நித்திரையைக் கலைத்தது.

கோடை காலத்தில் தண்ணீர்ப் பந்தல் வைக்கலாம், அன்னதானம் செய்யலாம், சில பள்ளிகளை நடத்தலாம், விளையாட்டுப் போட்டி களை நடத்தலாம். இப்படிப் பல வகையிலும் அவர்கள் சிந்தித்திருக்கலாம். ஆனால், இவற்றில் எதையுமே அச்சங்கம் சிந்திக்காமல், ஒன்றைச் செய்வதற்கு ஒற்றுமையாக ஒரே குரலில் எழுந்து நின்றது. அந்த ஒன்று என்ன?

வேறொன்றுமில்லை. வாசிப்பு என்ற ஒரு நற்பழக்கத்தை நமது சந்ததிகள் மனதில் எந்த வகையில் விதைக்கலாம் என்று அச்சங்கத்தினர் சிந்தித்தார்கள். அதன் தலைவராக இருந்த தொழி லதிபர் திரு. வேலுமணி அவர்கள் முழு உடல் ஆரோக்கியமில்லாவிட்டாலும் அவர் மூளை மூன்று பங்கு ஆரோக்கியத்தோடு இருந்தது.

அவரும் அவருக்கு முன்னோடியாகச் செயல் பட்ட, கொடீசியாவின் முதுகெலும்பாக நின்ற தொழிலதிபர் ஏ.வி. வரதராஜன் அவர்களும் மற் றும் சகாக்களான திரு. எஸ். சௌந்தர்ராஜன், திரு. டி. பாலசுந்தரம், திரு. ஈ.கே. பொன்னுசாமி, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. பி.எஸ். தேவராஜன், திரு. நந்தகுமார், திருமதி. வனிதா மோகன் ஆகி யோர் இணைந்து செய்த சிந்தனைதான் கொடீசி யாவின் சார்பில் புத்தகத் திருவிழாவை நடத்து வது என்பதாகும்.

ஏனெனில், வாசிப்பு என்றால் புத்தகத்தைத் தான் வாசிக்க முடியும். அதை வளரும் சமுதாயத் திற்கு அறிமுகப்படுத்த வேண்டுமானால் அதற்குத் தேவை புத்தகத் திருவிழா. 'புத்தகத் திருவிழா 2015' கொடீசியா வளாகத்தில் திட்டமிடப்பட்டு விமரிசையாக நடந்தது. இந்த ஆண்டு நான்கா வது ஆண்டு. ஒவ்வோராண்டும் புத்தகத் திரு விழாவில் அரங்குகளை வைத்து விற்பனை செய் கிற பதிப்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த ஆண்டு 265 பதிப்பகங்கள் கலந்து கொண்டன. ஜூலை 20 முதல் 29 முடிய 10 நாட்கள் விழா.

ஒவ்வொரு நாளும் விதவிதமான நிகழ்ச்சி கள். கவியரங்கம், இலக்கியக் கூடலின் மரபிலக் கியம், அறிவுக்கேணி, கதை சொல்லி நிகழ்வு, இலக்கியத்தில் மருத்துவம், இலக்கியச் சந்திப்பு, படைப்பாளர், பதிப்பாளர் கலந்துரையாடல் எனப் பல்வேறு விதமான நிகழ்ச்சிகள்.

தொடக்க நாளில் படைப்பாளிகளில் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' என்ற ஒன்றை ஒரு சிறந்த படைப்பாளிக்கு வழங்கி அவரைச் சிறப்பிப்பது என்ற மரபு உண்டாக்கப்பட்டது. இந்த ஆண்டு எழுத்தாளர் திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களுக்கு அந்த விருது வழங்கப்பட்டது. வழங்கியவர் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் திரு. டி. உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ். அவர்கள்.

இதேபோல நிறைவு விழாவில் படைப்பாளர் – பதிப்பாளர் சந்திப்பு நடந்தது. பதிப்பாளர்களை விசாரித்ததில் சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டு புத்தக விற்பனை மன நிறைவாக இருந்த தாகக் குறிப்பிட்டார்கள். அது, அடுத்த ஆண் டிற்கு இந்த விழாவை நகர்த்திக்கொண்டு செல்வ தற்கான உற்சாகத்தை அளித்தது.

கொடீசியா தொழிலதிபர்கள் புத்தக வாசிப் பைத் தங்களின் உபதொழிலாகவே கருதி இதைக் கொண்டாடுவதை உலகமே வியந்து பார்க்கிறது. அடுத்த ஆண்டு, கொடீசியாவின் புத்தகத் திரு விழாவிற்காகப் பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள், தொழிலாளிகள், மாணவர்கள், பெற்றோர்கள், மகளிர், ஆசிரியர்கள் அனைவரும் ஆவலோடு காத்திருக்கிறார்கள். இதைவிட, கோவைக்கு வேறு என்ன பரிமாணமும், பாராட்டும் தேவை?

– ந.நி.

கட்டுரை



சமய மத ஆசாரங்களைக் கடத்தல் :
வள்ளல் இராமலிங்க அடிகளார்

"சீர்கொண்ட தெய்வ வதனங்க ளாறுந்
திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத்
தாள்களும் ஓர்
சூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக்
கொடியும் அருட்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமும்
என் கண்ணுற்றதே"


என்று ஒன்பது வயதுச் சிறுவராக வள்ளற்பெருமான் இருந்தபோது, தனியறையில் காட்சியளித்த இந்தத் திருத்தணி முருகனுக்கும் வள்ளல்பெருமானுக்கும் அப்படிப்பட்ட ஓர் அபூர்வ ஈடுபாடு. அந்த நெருக்கம் 'பாலும் நீரும்' போல இணைந்தே காணப்பட்டதாய்ப் பெருமான் பிறிதோரிடத்தில்,

"நீயும் நானும் ஓர் பாலும் நீருமாய்
நிற்க வேண்டினேன் நீதி ஆகுமோ
சாயும் வன்பவம் தன்னை நீக்கிடும்
சாமியே திருத்தணிகை நாதனே..."

என்றும் பாடியுள்ளார். நம் பெருமான் சமய, மத ஆசாரங்களைக் கடந்து மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற்றது எப்படி? என்பதை நோக்கும் முன், சமயம் என்றால் என்ன? மதம் என்றால் என்ன? ஆசாரங்கள் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொண்டால்தான், வள்ளற்பெருமான் காட்டிய சுத்த சன்மார்க்க நெறியினைப் புரிந்துகொள்ள முடியும்.

அகராதிகள் பெரும்பாலும் சமயம், மதம் என்ற இரண்டுமே ஒரே தோற்றமுடையனவாய்க் கருதி, ஆங்கிலத்தில் 'Religion' என்ற ஒரே வார்த்தையில் பொருள் கூறிவிடுகின்றன. ஆனால் இரண்டிற்கும் வேறுபாடு உண்டு.

சமயம் என்பது அறுவகைச் சமயம் என்று சொல்லப்படுகின்ற காணாபத்யம், சாக்தம், கௌமாரம், சௌரம், வைணவம், சைவம் என்பனவற்றைக் குறிக்கும். பொதுவாகச் சமயங்கள் என்பவை காலத்தால் முற்பட்டவை. அதைத்



பின்னலூர்
மு. விவேகானந்தன்

தோற்றுவித்தவர் யார், எங்கே, எப்பொழுது என்ற வினாக்களுக்கெல்லாம் விடை காண்பது அரிது.

மதம் என்பது ஞானி ஒருவரின் போதனைகளையோ அல்லது கொள்கைகளையோ அடிப்படையாகக் கொண்டது. இதைத் தோற்றுவித்தவர் யார், எங்கு, எப்பொழுது என்பன வெல்லாம் வெளிப்படையாக அமைந்தவை. காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யம் என்னும் குற்ற வகைகளில் ஒன்று 'மதம்' என்றும் விளக்கப்படும்.

"ஆசாரம்" என்றால் சாத்திர முறை அல்லது குல முறைப்படி நடத்தல் (Following the dictates of one scriptures) என்பதாகும். சங்க இலக்கியங்களில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான பெருவாயின் முள்ளியார் யாத்த 'ஆசாரக்கோவை' என்னும் நூல் நாம் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க விதிகளை வலியுறுத்தும் நூலாகும்.

இந்த நூலில் ஆசாரம் கடைபிடிக்கத் தேவையில்லாதவரை ஆசாரமிலிகளாகக் கூறி, பிற தேசத்தார், தரித்திரர், மூத்தோர், சிறுவர், உயிரிழந்தார், பயமுற்றோர், உண்பார், மணாளன், அரசத் தொழிலை மேற்கொண்டோர் என ஒன்பது வகையினரைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமய, மதங்கள் கூறும் ஆசாரங்கள் இறைவன் தயவை விருத்தி செய்யத் தடையாக உள்ளவை. அத்தடைகளைத் தகர்த்து சுத்த சன்மார்க்க ஞான ஆசாரத்தைப் பெற வேண்டும் என்ற வள்ளல் பெருமான் (சுத்த சன்மார்க்க சத்திய ஞானசாரம்) உரைநடைப் பகுதியில், ஜாதி ஆசாரம், குல ஆசாரம், ஆசிரம ஆசாரம், லோக ஆசாரம், தேசாச்சாரம், கிரியா சாரம், சமயா சாரம், மதாச் சாரம், மரபு ஆசாரம், கலாசாரம், சாதனா சாரம், அந்தா சாரம், சாஸ்திர ஆசாரம் என்பவை ஒழிந்து சுத்த சன்மார்க்க ஆசாரம் தழைக்க வேண்டும் என்று உபதேசித்து, நித்திய கரும விதிகளையும், சன்மார்க்க சங்கத்தார் ஞானசபை வழிபாட்டு விதி, பழக்க விதி, ஒழுக்கக் கட்டளைகளையும் வகுத்தார்கள்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்ற கலைச் சரிதம் எல்லாம்
பிள்ளை விளையாட்டே"

என்று அருள்விளக்க மாலையில் பாடிய பெருமான்,

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென்றும்", "சாதியும் மதமும் சமயமும் காணா ஆதி அனாதியாம் அருட்பெருஞ்சோதி" எனக் கூறி, "நாத்திகம் பேசும் நாக்கு முடைநாக்கு" என்றும் சாடியுள்ளார்.

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும்" என்ற முப்பரிமாணங்களைச் சமுதாய நல்லிணக்கமாகப் பறைசாற்றிய பெருமான், வேதங்கள் (பதி) இறைச் சிந்தனையையும், ஆகமங்கள் (பசு) ஆன்மச் சிந்தனையையும், புராணங்கள் (பாசம்) உலகத்தளைகள் பற்றியும், இதிகாசங்கள் பக்தியையும், ஸ்மிருதிகள் கருமவிதிகள் பற்றியும் விளக்குவன என்ற கருத்தையும் தெரிவித்துள்ளார்கள்.

வேத, ஆகம, சாத்திய நூல்களை ஓதாதுணர்ந்த பெருமான் இவை கூறும் ஆசாரங்களில் மயக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை அருள்விளக்க மாலையில்,

"மதம் என்றும் சமயம் என்றும் சாத்திரங்கள் என்றும்
மன்னுகின்ற தேவர் என்றும் மற்றவர்கள் வாழும்
பதம் என்றும் பதம் அடைந்த பத்தர் அனுபவிக்கப்
பட்ட அனுபவங்கள் என்றும் பற்பல வாவிரித்த
விதம் ஒன்றும் தெரியாதே மயங்கினேன்"


என்றுரைப்பார்.

இந்த மயக்கம்கூட சமய, மத, சாத்திர நூல்களில் காணப்படும் பிழைகளால்கூட இருக்கக் கூடும். உரைநடையில் ஓரிடத்தில் (சமய நூல்களில் பிழை),

"சமய மத சாத்திர நூல்களில் அநேக இடங்களில் பிழைகளிருக்கின்றன. அதற்குக் காரணம் இவற்றை இயற்றியவர்கள் மாயையின் சம்பந்

தத்தை அடைந்திருந்தவர்கள். ஆகையால் முன்னுக்குப் பின் மறைப்புண்டு தப்புகள் நேரிட்டன. மாயையை வென்ற சுத்த ஞானிகளால் மட்டுமே பிழையற இயற்ற முடியும். அந்தப் பிழைகள் சுத்த சன்மார்க்கம் விளங்குகின்ற காலத்தில் வெளிப்படும்" என்று உறுதிபடக் கூறியுள்ளார் பெருமான்.

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக"ப்



வள்ளற்பெருமான்

பாடியதுடன்,

"சாதி குலம் சமயம் எலாம் தவிர்த்தெனை மேல் ஏற்றித்
தனித்த திரு அமுதளித்த தனித் தலைமைப் பொருளே"

என்றும் இறையின் பேருள்ளத்தைப் போற்றியுள்ளார்.

'அகவல் பாராயணம்' முடிந்ததும் சன்மார்க்க அன்பர்கள் உறுதி ஏற்க வேண்டிய "சுத்த சன்மார்க்க விண்ணப்பத்தில்", "எல்லாமுடைய அருட் பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி, எக்காலத்தும் சுத்த சன் மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என் பவற்றின் ஆசார சங்கற்ப, விகற்பங் களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாவண்ணம் அருள் செய்தல் வேண்டும்..." என்று தொடங் கும் பகுதியில்,

சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பனவற்றோடு, பிராமணன், சத்திரி யன், வைசியன், சூத்திரன் என்னும் நால் வருணமும், பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய ஆசி ரம ஆசாரங்களும் நம் மனத்தில் பற்றக் கூடாது என்பதைத் தெளிவுபட வள் ளல் பெருமான் உரைத்துள்ளார்கள்.

வள்ளல் பெருமானுக்குச் சிறு வயதிலிருந்து இத்தடைகளைப் பற்றிய சிந்தனை ஆழப் பதிந்துள்ளது என்பதை அவர் ஒன்பதாம் வயதில் பாடிய (தெய்வமணிமாலை). "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற" என் னும் பாடலில் "பெருநெறி பிடித் தொழுக வேண்டும். மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்ற வேண்டுதல் மூலமும்,

பின் ஏறக்குறைய 16–ஆம் அகவை யில், அருளிய 'மனுமுறை கண்ட வாசகத்தில், (மாதிருக்கும் பாதியனை மன்னன் புகழ்ந்தேற்றும் போது)

"யான் என்கின்ற ஆணவப் பேயும்
எனதென்கின்ற இராட்சதப் பேயும்
மாயை என்கின்ற வஞ்சகப் பேயும்
பெண்ணாசை என்கின்ற பெரும்பேயும்
மண்ணாசை என்கின்ற பொல்லாப் பேயும்
குரோதம் என்கின்ற கொள்ளிவாய்ப் பேயும்
உலோபம் என்கின்ற உதவாப் பேயும்
மோகம் என்கின்ற மூடப் பேயும்
மதம் என்கின்ற வலக்காரப் பேயும்
மாச்சர்யம் என்கின்ற மலட்டுப் பேயும்..."

என்னும் வரிகளை நோக்கும்போது, 'மதம்' என்ற சொல் குற்றப் பட்டியலில் வந்தாலும் சரி, அதை 'மதம்' என்னும் கோட்பாட்டுப் பட்டியலில் சேர்த் தாலும் சரி இவ்விரண்டிலுமே பெரு மானுக்குப் பற்றில்லை என்பது உறுதி. இதைப் பின்னாளில் 'சமரச சுத்தப் பெருவிண்ணப்பத்தில்' குறிப்

"இந்தச் சைவ மாநாட்டில் ஒரு கருத்தினைத் தெரிவிக்க விரும்புகிறேன். சைவ சமயச் சாத்திரங்களின் முதன்மை நூல் எனப் போற்றப்படும் மெய்கண்டாரின் சிவஞான போதத்திற்கு விரிவான விளக்க உரையான வழி நூலாம் அருணந்தி சிவாச்சாரியாரின் 'சிவஞான சித்தியார்' நூலின் முதற் பகுதியான 'பரபக்கத்தில்' இந்தியச் சமயங்களின் பொருந்தாக் கொள்கைகள் எடுத்துரைக்கப்பட்டு, சைவத்தின் மேன்மை 'சுபக்கத்தில்' விரித்துரைக்கப்பட்டுள்ளது.

உமாபதி சிவாச்சாரியாரின் 'சங்கற்ப நிராகரணத்தில்' மாயாவாதியாகிய புறச் சமயமும், அகச் சமயங்களும் மறுக்கப்பட்டுள்ளன. சைவ சித்தாந்த வாதிகள் சமய, மத ஆசாரங்களில் பொருந்தாதவற்றை மறுத்துரைத்தார்கள். ஆனால், நம் வள்ளல் பிரான் அவற்றையெல்லாம் மறுத்து ஒதுக்கிவிட்டு, நாம் எளிதில் ஒழுகும் புதிய விதிகளை வகுத்துப் புதுநெறியைக் காட்டிய ஞான வள்ளலாவார்."

– பின்னலூர் மு. விவேகானந்தன்

பிடும்போது,

"அச்சிறு பருவத்திற்றானே ஜாதியாசாரம்,
ஆசிரம ஆசாரம்
என்னும் பொய்யுலகாசாரத்தைப் பொய்
என்று அறிவித்து
அவைகளை அனுட்டியாமல் தடைசெய்வித்து
அப்பருவம் ஏறுந்தோறும்
ஏறுந்தோறும் எனதறிவை விளங்கச் செய்து
மேனிலையில் ஏற்றி
ஏற்றி நிலைக்க வைத்தீர்..."

"வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம், தத்துவ சித்திக் கற்பனைக் கலைகள் என்று அறிவித்து அச்சமய ஆசாரங்களை அனுட்டியாமல் செய்வித்தருளீர்" என்ற பெருமான் பிறிதோரிடத்தில் இதைக் 'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போக" என்றது, பெருமானுக்குச் சிறுவயதிலிருந்தே இத்தடைகளைத் தகர்க்க வேண்டும் என்ற முனைப்பு இருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

"ஓதாதுணர்ந்திட ஒளியளித்தெனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ்சோதி"

"அறியாத பருவத்தே என்னை வலிந்து அழைத்தே
ஆடல்செயும் திருவடிக்கே பாடல் செயப்
பணித்த"து

எதற்காக என்றால்,

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித்திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்
திடுவதற்கு என்றே, எனை, இந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன், அருளைப் பெற்றேனே!"

என்பார் பெருமான்.

சரியை (தாச மார்க்கம்), கிரியை (சத்புத்ர மார்க்கம்), யோகம் (சக மார்க்கம்), ஞானம் (சன்மார்க்கம்) ஆகிய நிலைகளை எய்தியதைப் பெருமான் மிகவும் எளிமையாக இரண்டே வரிகளில் உணர்த்துகிறார் (மெய்யருள் வியப்பு).

"அடியனாக்கிப் பிள்ளையாக்கி நேயனாக்கி
அடிகளாக்கிக் கொண்டாய் என்னை
அவலம் நீக்கியே"

இத்தகைய ஞானநிலையில் நிறுத்திய இறைவனை (அச்சோப் பதிகம்)

"சாதியை நீள் சமயத்தை மதத்தையெல்லாம்
விடுவித்து என் தன்னை ஞான
நீதியிலே சுத்த சிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தினானை"

வியந்து "நானுரைக்கும் வார்த்தை எல்லாம் நாயகன் தன் வார்த்தை" என்று, சன்மார்க்க மென்பது என்ன என்பதற்கு விளக்கம் தந்துள்ளார்.

சன்மார்க்க மென்பது சமய சன் மார்க்கம், மத சன்மார்க்கம், சுத்த சன் மார்க்கம் என மூன்று வகைப்படும்.

சமய சன்மார்க்கமாவது சத்துவ குண சம்பந்தமுடையது. சத்துவ சம்பந்தமுடைய சேர்க்கையெல்லாம் சன்மார்க்கம். சத்துவகுண இயல்பாவது கொல்லாமை, பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஜீவ காருண்யம். சத்துவ குணத்தில் வாச் சியத்தை லட்சியம் செய்வதே சன் மார்க்கம்.

சுத்த சன்மார்க்கம் என்பது இவற்றினின்றும் மாறுபட்டது. "தாயு மானவர் முதலானவர்கள் சுத்த சன் மார்க்கிகள் அல்லர். ஒருவாறு மத சன் மார்க்கிகள் என்று சொல்லலாம். அவர்களின் மார்க்கத்தில் நித்திய தேகம் கிடையாது. நாளைய (நித்திய தேகம்) சுத்த சன்மார்க்கம் இதனை வழங்கும் போது இவர்கள் யாவரும் உயிர்பெற்று மீளவருவார்கள்" என்பது வள்ளற் பெருமான் கருத்து. இதற்குத் தன் னையே உதாரணமாகக் கூறுகிறார். சுத்த சன்மார்க்கம் என்பது மரண மில்லாப் பெருவாழ்வு. சாகாதவனே சன்மார்க்கி ஆகின்றான்.

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்து அலைந்து வீணேநீர் அழிதல்
அழகலவே"

எனப் புனித குலம் பெறுமாறு புகன்ற வள்ளற்பெருமான், தாம் கண்ட சன் மார்க்க நெறி தழைக்க, சன்மார்க்க சங்கம் (1865), சத்திய தருமச்சாலை (1867) சத்தியஞான சபை (1871) ஆகிய வற்றை நிறுவினார். சத்தியஞான சபையைத் தன்னுள் கண்ட பெருமான்,

"சாதிசமயச் சழக்கெல்லாம் அற்றது
சன்மார்க்க 'ஞானசபை' நிலைபெற்றது"

என்று பாடினார்.

சுத்த சன்மார்க்கப் பெருநெறி ஒழுக்கங்களாகப் பரோபகாரமும், சத்விசாரமும் வகுக்கப்பட்டன.

1) இந்திரிய ஒழுக்கம் (புலன்), 2) கரண ஒழுக்கம் (மனம்), 3) ஜீவ ஒழுக்கம் (உயிர்நேயம்), 4) ஆன்ம ஒழுக்கம் (எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க) எனப் பரோபகாரத்தில் அடங்கும்.

"அருட்பெருஞ்சோதி, அருட்பெருஞ் சோதி, தனிப்பெருங்கருணை அருட் பெருஞ்சோதி" என்னும் மூலமந்திரம் வாயிலாக ஆன்ம விழிப்பிற்கு மரண மில்லாப் பெருவாழ்வை உபதேசிப்பது சத்விசாரமாகும்.

"சுத்த சன்மார்க்க நன்நீதி" விளங்க, இது "நல்ல தருணம்" என்று உரைத்த வள்ளற்பெருமான்,

"மதித்த சமய மத வழக்கெல்லாம் மாய்ந்தது
வருணாச் சிரமம் என்னும் மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக் கொழிப்பெல்லாம்
ஒழிந்தது
கொலையும் களவு மற்றும் புலையும் அழிந்தது
குறித்த வேதாகமக் காய்ச்சலும் அடங்கிற்கு..."


இப்படியாகப் பாடிச் சன்மார்க்க நெறிக்கு வலிமை சேர்த்தார்கள்.

"சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்து வம்மின் இங்கே
பிறந்த பிறப்பு இதில்தானே நித்திய மெய்வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே"

என்று சாகாக் கல்வியின் தரமெல்லாம் உணர்த்தி, சாகாவரம் பெற்ற உத்தம னாக வள்ளல் பெருமான் ஓங்கி நின்றா ரென்றால் அதற்கு அவர் சமய, மத, ஆசாரங்களை அனுட்டியாமல், எல்லா உயிர்களும் இன்புற்று வாழ விழைந்த கருணை மனமே காரணமாகும்.

(23.6.2018 அன்று திருத்தணியில் நடைபெற்ற சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் 113-ஆம் ஆண்டுவிழா மாநாட்டில் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூர் ஆதீனம் இளையபட்டம் தவத்திரு மருதாசல அடிகளார் தலைமையில் பின்னலூர் மு. விவேகானந்தன் ஆற்றிய உரை). ●

கட்டுரை


தேவநேயப் பாவாணர்

'முனைவர்' என்னும் சொல் சரியா?

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் வானிலே சுடர்விட்டவர் பலர். அவர்களிலே விரல்விடத் தக்கவர்கள் 'தமிழ்த் தென்றல்' திரு. வி.க., 'மும்மொழிப் புலவர்' மறைமலை அடிகள், 'தமிழ் ஞாயிறு' தேவநேயப் பாவாணர், அறிஞர் அண்ணா, அறிஞர் மு. வரதராசனார் ஆகியோர். இவர்களெல்லாம் "டாக்டர்" பட்டம் பெற்றபோதும் அப்போது 'முனைவர்' பட்டம் தோன்றவில்லை.

துறைதோறும் வல்லுநர் ஆவோருக்குப் பல்கலைக்கழகம் "டாக்டர்" பட்டம் வழங்குகிறது. பொதுவாக 'டாக்டர்' என்னும் சொல் ஒரு துறையில் ஆராய்ந்த 'வல்லுநர்' என்னும் பொருளையே தரும்.

தேவநேயப் பாவாணர் 'டாக்டர்' என்னும் சொல்லுக்குப் 'பண்டாரகர்' என்று பொருத்தமாக மொழியாக்கம் செய்தார்; இச்சொல்லைத் தமிழ்ப் பற்றுக்கொண்ட பேராசிரியர்கள் போற்றிக் கொண்டு தாங்கள் பெற்ற டாக்டருக்குப் 'பண்டாரகர்' என்றே பட்டம் சூட்டி மகிழ்ந் தனர்.

பாவாணர் ஆழமாகச் சிந்தித்தே 'பண்டாரகர்' என்பதை ஆட்சி செய்தார்.

திருவாசகத்தில் வரும், "மூலப் பண்டாரம் வழங்குகின்றார் / வந்து முந்துமினே!" என்னும் தொடரையும், "அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே!" என்னும் தொடரையும் பொருளுணரும் மரபோடு ஆராய்ந்தார்.


'பண்டாரம்' என்னும் சொல்லானது செல்வக் கருவூலம் (களஞ்சியம்), அறிவுக் கருவூலம், அருட் கருவூலம் என்னும் பொருட் களைத் தெளிவாக்கும். 'அருள்நிதி' என்னும் சொல்லும் பொருளும் அதுவேயாகும்.

சென்ற நூற்றாண்டில் 'டாக்டர்' பட்டத்திற்கு "முனைவர்" என்னும் சொல்லை ஆக்கம் செய்து வழங்கத் தொடங்கிவிட்டனர்.

பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் இப்போது 'முனைவர்' பட்டம் பொலபொல என்றும் கலகலவென்றும் பல்கிப் பெருகிவிட்டன!


இக்காலத்தில் இலக்கியத்திலோ, இலக்கணத்திலோ சில பக்கங்களில் ஆய்வேடு எழுதிக் கொடுத்துவிட்டால், 'முனைவர்' மிக எளிதிலே கைக்கு வந்து விடுகிறது.


முனைவர் என்னும் சொல் "டாக்டருக்கு எப்படிப் பொருந்தும்? ஆய்வு செய்ய வேண்டிய நிலையில்தான் இருக்கின்றோம்.



'முனைவன்' என்னும் சொல் இறைவனையே குறிக்கும். இவன் அக்காலத்திலே தமிழ்ப் புலவனாய் அமர்ந்து புகழ்


டாக்டர் மு.வ.


திரு.வி.க.


மறைமலை அடிகள்

படைத்திருக்கின்றான்!

இறைவனால் படைக்கப்பட்ட அக இலக்கிய நூல் "இறையனார் களவியல்" என்னும் நூலாகும். இது இன்னும் அழியாமல் இருக்கின்றது.

இலக்கண நூலார் நூல் மரபு கிளர்ந்து கூறும் நிலையில் 'முதல் நூல், வழி நூல், சார்பு நூல்' என மூன்றைத் தெளிவுபடுத்தினர். அக்காலத்தே முதல் நூலை இறைவனே படைத்தான்' என்றனர். இதோ நூற்பா :–

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்

முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

இந்த நூற்பா சொல்லும் முனைவன் என்னும் மிக உயரிய பொருள் இக்காலத்தில் வழங்கும் "முனைவர்" பட்டத்திற்கு எப்படிப் பொருந்தும்? இவர்கள் வழங்குவது தமிழ் இலக்கண மரபுக்கு மாறானதன்றோ?

பேரறிவுடைமையும் பேரருளுடைமையும் முனைவனாகிய இறைவனுக்குத்தானே உண்டு! செத்துப் பிறக்கும் மனிதருக்கு உண்டோ?

இலக்கணச் சொல்லமைதியிலும் பார்க்கலாம்.

முனைவர் என்பது முன்னே விரைந்து செல்பவர் என்றும் செயலில் திறம்பட முனைந்து செய்பவர் என்றும் பொருள் தரும்.

முனைதல் – முனை, முனைவு, முனைப்பு இவை வினைச் சொற்களாகும்.

முனைவோர் – வினையாலணையும் பெயர்.

இக்காலச் சொல் வழக்கில் முனைவோர் என்பது அறிவு முனைப்பைக் குறிப்பதில்லை; தொழில் முனைவோர் என்பது போலச் செயற் பணிகளையே சுட்டுகின்றது.

முனைவன் என்னும் இறைவனை உணர்த்தும் போது, முனை என்பது காலமுன்னைக் குறிக்கும். "முன்னவன் காண்" என்னும் தேவாரத்தை நினைவுகூரச் செய்யும்.

எனவே "முனை" என்பது காலப் பழமையையும் செயலையும் குறிக்க வல்லதாகும்.

புலவர் அடியன். மணிவாசகன்

"முன்னைப் பழம் பொருட்கும்

முன்னைப் பரம் பொருளே"

என்னும் திருவாசகத்தைத் தெளிக!

ஆகவே, மனித நிலை கடந்து தெய்வப் பெருநிலையான வினையின் நீங்கிய விளங்கிய (மாசற்ற) அறிவுடைய இறைவனுக்கே 'முனைவன்' என்னும் பெயரும் முனைவர் பெயரும் பொருந்துமென அறிவோம்.


எனவே, பல்கலைக்கழகம் தருகின்ற முனைவர் பட்டம் என்னும் சொல்லுக்கு வேறாக "வல்லுநர்" என்ற சொல்லோ "பண்டாரகர்" என்ற சொல்லோதான் பொருந்தும் எனக் கொள்ளலாம். அறிஞர் ஆய்வு செய்வீர்!

•

கட்டுரை

அரசியல் கட்சிகளுக்கு
ஆத்ம பரிசோதனைக்கான காலம்!

டாக்டர் க. பழனித்துரை



நம் அரசியல் கட்சிகளுக்கு ஆத்ம பரிசோதனை செய்யும் நேரம் வந்துவிட்டது. ஒரு தேசியக் கட்சியின் தலைவருக்கு ஒரு கட்டுரை மூலம் ஒரு தமிழ்ப் பத்திரிகை ஒரு கோரிக்கை வைக்கிறது. 'தீர்மானியுங்கள்! உங்கள் கட்சியா, நாடா எதைக் காப்பாற்றப் போகிறீர்கள்' என்று.

ஒரு தேசத்துக்குள்தான் கட்சி இருக்கிறது. தேசம் நாசமாகும்போது கட்சி என்ன ஆகப்போகிறது என்று சிந்தித்து, கட்சியைவிட நாடு முக்கியம் என்பதை மனதில் வைத்துச் செயல்படுங்கள் என அந்தக் கட்டுரையில் அந்த ஆசிரியர் கேட்டிருந்தார். அதே கேள்வியைப் பல கோணங்களில் கேட்டு ஆங்கிலப் பத்திரிகைகளில் அதே சமயத்தில் பல கட்டுரைகள் வெளிவந்திருந்தன.

இது ஜனநாயக நாடாக இருக்க வேண்டும், அனைவருக்குமான நாடாக இருக்க வேண்டும், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும், மக்களாட்சி அமைப்புக்கள் காக்கப்பட வேண்டும், மக்களாட்சிப் பண்புகள் காக்கப்பட வேண்டும், மக்களாட்சி நிறுவனங்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்.



எனவே, இதற்காக நம் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இதில் நம் கட்சிக்குத் தேர்தலில் எத்தனை சீட் கிடைக்கும் என்று எண்ணி வேலை செய்தால், நீங்கள் அனைவரும் நுனி மரத்தில் உட்கார்ந்துகொண்டு அடிமரத்தை வெட்டுவதற்குச் சமமாகும் என்று கட்சித் தலைவர்களுக்கு அந்தக் கட்டுரையாளர்கள் அனைவரும் வேண்டுதல் விடுத்துள்ளனர்.

இதே கருத்தாக்கத்தை வைத்து ஓர் ஆங்கிலத் தொலைக்காட்சியில் மிகப் பெரிய விவாதம் நடத்தப்பட்டது. கட்சியா – நாடா, கட்சியா – மக்களா, கட்சியா – ஏழையா, என் தலைமையா – நாடா என்ற கோணத்தில் இந்தத் தலைவர்கள் சிந்திக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. சற்று தாமதித்தால்கூட நீங்கள் காணாமல் போய்விடுவீர்கள் என்று கருத்தாளர்கள் எச்சரித்தனர்.

இந்தக் கருத்தாக்கத்தின் விவாதத்திற்குக் கர்நாடக மாநில அரசியலில் நடந்த திருப்பத்தின் மூலம் விடை கிடைத்ததாக நாம் உணர முடியும். ஆனால் அந்தக் கருத்தாக்கத்தை மேலே எடுத்துச் செல்வதற்குப் புது அணுகுமுறை ஒன்று வேண்டும். அதை உருவாக்குவதில்தான் இதன் வெற்றி இருக்கிறது, இல்லை என்றால் 2019–ஆம் ஆண்டு தேர்தலில் யார் பிரதமர் என்ற கேள்வியில் வந்து முடிந்து அனைவரும்

காணாமல் போய்விடு வார்கள் என்பதைத் தொடர்ந்து கருத்தாளர்கள் பொதுத்தளங்களில் வலியுறுத்தி வருகின்றனர். இது இந்தியச் சூழல்.

இனி, தமிழகத்திற்கு வருவோம். தமிழகத்தில் இன்று 'நம் கட்சியும் கட்சிக்காரர்களும்' என்று கட்சியின் கண்ணோட்டத்தில் பார்வையைவிட்டு நம் தமிழக அரசியல் கட்சிகள் தமிழ்நாடும், நம் மக்களும், நம் மக்களின் எதிர்காலமும் எனக் கட்சியைக் கடந்து செயல்படும் காலம் வந்து நீண்ட நாட்களாகிவிட்டன.

ஆனால் நம் தலைவர்களுக்கு அது இன்னும் புலப்படவில்லை. ஜல்லிக்கட்டுப் போராட்டத்தில் தொடங்கி, கதிராமங்கலம், நெடுவாசல், தூத்துக் குடி எனப் பொதுமக்கள் போராட்டங்கள் தமிழகத் தில் வெடித்துத் தூத்துக்குடியில் பதிமூன்று உயிர்களைப் பலி வாங்கி இருக்கின்றது.

இந்த எல்லாப் போராட்டங்களுமே சூழலைக் காப்பாற்றவும், வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் நடத்தப்பட்ட போராட்டங்கள். இந்தப் போராட்டங் களில் 'அரசியல் கட்சிகளே நீங்கள் சற்று விலகி நில்லுங்கள்' என்று கூறியதை நம் அரசியல் கட்சிகள் சற்று நிதானமாகத் தங்களை ஆத்ம பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். அரசியல் கட்சிகளின் மேல் மக்கள் நம்பிக்கையை இழந் திருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்துகொண்டு எதார்த்த நிலையில் உண்மையை நோக்கிப் பயணம் செய்ய முயற்சிக்க வேண்டும்.

இன்று தமிழகத்தில் நடந்து கொண்டிருப்பது இயற்கைக்கு எதிரான ஒரு மாபெரும் போர். இது எதன் அடிப்படையில் நடக்கிறது என்றால் வளர்ச்சி, முன்னேற்றம் என்ற முழக்கத்தின் பின்ன ணியில் நடைபெற்ற பொருளாதாரச் செயல் பாடுகளின் தாக்கங்கள் கிராமங்களை அழித்து, கிராமங்களை அனாதைகளாக்கிவிட்டன. இதிலிருந்து மீள்வதற்காகத் தன்னெழுச்சியாக மக்கள் போராட முன்வந்துள்ளனர்.

அது கிராம சுயாட்சியை நோக்கி நகர்கிறது. இதை நம் அரசியல் கட்சிகள் புரிந்துகொள்ளத் தவறுகின்றன. வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பற்றி இதுவரை முடிந்த முடிவான ஒரு வரைய றையை எவரும் தரவில்லை. இதற்குப் பொரு ளாதார வளர்ச்சி என ஒரு குறுகிய விளக்கத்தைத் தந்துவிட்டு இந்தப் போரை சந்தையும், அரசும் மக்கள் மீது நடத்துகின்றன. இது யாருக்கு வளர்ச்சி, யாருக்கு மேம்பாடு என்பதை இந்த உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை உண்மையைத் தோலுரித்துக் காட்டிவிட்டது.

1987–ஆம் ஆண்டு பிரண்ட்லேண்ட் ஆணை யத்தின் 'நம் பொது எதிர்காலம்' என்ற அறிக்கை என்னவெல்லாம் எதிர்காலத்தில் உலகத்தில், சூழலில் நடக்கப் போகின்றன; இந்த வளர்ச்சி முழக்கச் செயல்பாடுகளால் என்று எச்சரித்தார் களோ அவையெல்லாம்தான் இன்று நடந்து வரு கின்றன. அதன் வெளிப்பாடுதான் இன்றைய அரசுக்கு எதிரான போராட்டங்கள்.

இதைத்தான் காந்தியப் பொருளாதார வல்லுநர் 80 ஆண்டுகளுக்கு முன் 'அகிம்சைப் பொரு ளாதாரம்' என்ற பதத்தைப் பயன்படுத்தி, அதைக் கிராமங்களில் கொண்டுவந்தாலன்றிக் கிராமங் களை யாரும் காப்பாற்ற முடியாது; மேற்கத்தியப் பொருளாதார வளர்ச்சி அணுகுமுறையால் என்பதை விளக்கினார்.

1972–ஆம் ஆண்டு முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி ஐ.நா. மன்றத்தில் சூழலியல் பற்றி அற்புதமான ஓர் உரையாற்றி உலகத்தின் கவனத்தை ஈர்த்தார். அவர் வைத்த கருத்து, 'உலகத்தில் வளர்ச்சிக்கான மேற்கத்தியத் திட்டச் செயல்பாடுகள் மிகப்பெரிய இயற்கைச் சீரழிவை உருவாக்கும். அது ஏழைகளின் வாழ்வைச் சீரழிக் கும். இந்தக் கருத்தை நாங்கள் தெரிந்திருந்தே, மேற்கத்திய வளர்ச்சி முறையைத்தான் பின் பற்றுகிறோம்' என்று கூறினார். அத்துடன், 'இதை நாங்கள் ஏன் பின்பற்றுகிறோம் என்றால் ஏழ் மையை விரைவாக விரட்ட வேறு வழிகள் எமக்குப் புலப்படவில்லை என்ற காரணத்தால்' என்று விளக்கமளித்தார். அதற்கு மேலும் அவர்

அபூர்வ முருகன்...

தர்மபுரி மல்லிகார்ச்சு னேசுவரர் ஆலயத்தில் முருகப் பெருமான் திருவுருவம் ஐயப்பன் போல் குந்தளமிட்ட நிலையில் காணப்படுகின்றது. மயிலின் அலகில் பாம்பொன்று காணப்படுகிறது. மற்றுமொரு பாம்பு படமெடுத்த நிலையில் முருகனுக்கு ஆதாரப் பீடமாக அமைந்துள்ளது.

– நெ. இராமன்



ஒரு விளக்கத்தினை அந்த மன்றத்தில் வைத்தார்.

'எங்கள் வேதங்கள் வளர்ச்சி, முன்னேற்றம் பற்றி விளக்குகின்றன. அவை இயற்கைக்கும், மானுடத்திற்கும் உள்ள உறவுமுறையை விளக்கி அதன் அடிப்படையில்தான் நிலைத்த மேம் பாட்டைச் சமூகம் பெறமுடியும்' என்று கூறி யுள்ளன. இருந்தும் நாங்கள் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் மேற்கத்திய முறையைப் பின் பற்றுவதற்குக் காரணம், விரைவில் எங்கள் மக்களின் வறுமையைப் போக்க வழி இன்றித்தான் செய்கின்றோம்' என்று கூறினார்.

இன்றைக்குத் தமிழகத்தில் வளர்ச்சி என்ற பெயரில் நடந்த செயல்பாடுகளில் மிகப்பெரிய தாக்கத்தை இயற்கைச் சூழலில் இன்று நம்மால் பார்க்க முடிகிறது.

தொடர்ந்து கனிம வளங்கள் சூறையாடப் படுவது மிகப்பெரிய பாதிப்பை ஏழைகளுக்கும் கிராமங்களுக்கும்தான் ஏற்படுத்துகிறது. இந்தப் பிரச்சனைகளைக் கையாள்வதில்தான் நம் அரசியல் கட்சிகள் சிக்கிக் கொண்டுள்ளன. ஆண்ட கட்சிகளை வசைபாடி ஓர் அரசியல் நடக்கிறது. தொடர்ந்து இந்தப் பிரச்சனைகளை மையப்படுத்தி அரசியல் நடத்தும் கட்சிகளின் எண்ணிக்கை கூடி வருவதும் நாம் பார்க்கும் எதார்த்தம்.

பொதுமக்கள் அதுவும் குறிப்பாகக் கிராம மக்களின் சூழல் பற்றிய விழிப்புணர்வு உயர்ந்து வருவதும் நாம் இன்று பார்க்கும் உண்மைச் சூழல். இந்த அரசியலில் விஞ்ஞானம் எந்த அளவிற்கு உதவியது; உண்மையைக் கொண்டுவருவதற்கு என்பதுதான் நாம் சந்திக்கும் இன்னொரு பிரச் சனை. ஏனென்றால், மக்கள் மனோபாவத்திற்கு நாடகமாடி அரசியல் நடத்தும் சூழலுக்கு நம் கட்சிகளும் தலைவர்களும் வந்துவிட்டார்கள்.

நம் தலைவர்களுக்கு ஆத்ம சக்தி குறைந்த காரணத்தால் மக்கள் போக்கில் போகப் பழகிக் கொண்டுவிட்டார்கள். மக்களுக்கு வழிகாட்டும் தலைவர்களாக விளங்குவதற்குப் பதில் இந்த நிகழ்வில் நம் கட்சிக்கு எவ்வளவு ஆதரவைப் பெறலாம் என்று அரசியல் நடத்தும் சூழலுக்கு வந்துவிட்டனர்.

தமிழகத்தைக் காப்பாற்ற இனிமேலும் நம் கட்சி அரசியலால் முடியாது. கட்சிகளைக் கடந்து மக்களை நோக்கிப் பயணம் செய்ய நம் தலைவர் கள் தயாராக வேண்டும். ஆட்சியில் இருந்த கட்சிகள் செய்த தவறுகளை ஒப்புக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. இந்த இயற்கை வளம் தான் இன்று கட்சிகாரர்களுக்கு வளம் சேர்க்கும் ஒரு வழிப்பாதை.

எனவே நம் கட்சி, கட்சிக்காரர்கள் என்பதி லிருந்து இந்த நாடு, நம் மக்கள், நம் மண் என்ற உணர்வில் அனைவரும் கைகோர்த்து மக்கள் அரசியலுக்கு வரவேண்டும். இதில் விஞ்ஞானம், உண்மை, நேர்மை இவற்றை மையப்படுத்தி ஒரு புதிய வளர்ச்சிக்கான அணுகுமுறையைக் கொண்டுவர முனைய வேண்டுமேயல்லாமல் என் கட்சி ஆள வேண்டும், நான்தான் முதல்வராக வேண்டும், குறிப்பிட்ட சில தலைவர்களையும், கட்சிகளையும் வெளியேற்றுவதுதான் என் அரசியல் என்று நம் கட்சிகள் செயல்பட்டால் நம் தமிழகத்தைப் பாலைவனமாகவும், சுடுகாடாகவும் தான் நம் எதிர்காலச் சந்ததியினரிடம் ஒப் படைக்கப் போகிறோம்.

●

சிறுகதை

கதையல்ல... வாழ்க்கை!



ஜன்னலுக்கு வெளியே தெரிந்த கட்டடத்தின் மேல் விளிம்பில் இரண்டு புறாக்கள் 'க்ருஊ, க்ருஊ' என்று கத்திய வாறே உட்கார்வதும், பத்துப் பதி னைந்து அடி உயரம் சிறகடித்துக் கொண்டே எழுந்து வானில் பறப்பது மாய் இருந்தன. கட்டடத்திற்குப் பின் னால் உயரமாய்த் தெரிந்த தென்னை மரங்களின் கீற்றுகள் அடர் பச்சையில் தலையை விரித்த வண்ணம் காற்றில் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தன.

நாற்பது நாட்கள் இடைவெளிக்குப் பின் பார்த்துக் கொண்டிருக்கும் இந்தக் காட்சி, புதியதொரு பரவசத்தை ஏற்படுத்திக் கொண்டிருந் தது. இந்த இடை வெளியில் எத்தனை காரியங் கள் கடந்து போய் விட்டன. திரும்ப வும் இந்த அறை யில் வந்தமர்ந்து இப்படியொரு காட்சியைக் காண்பேனா என்றல்லவா இருந்தது.

ராம்நாராயண் மனதில் ஆச்சரிய மும் குதூகலமும் ஒன்று சேர்ந்திருந்தது. வயது எழுபதுக்கு மேல் ஆகிவிட்ட நிலையில், குடிபுகுந்த பிணியை விரட்டி யடித்துவிட்ட விடுதிக் காப்பாளர் தெய்வமாகத் தெரிந்தார்.

புத்தகங்கள் படிப்பதும், தன் வயதினை ஒத்த தன்னைப்போல் உள்ள வர்களோடு மனம் விட்டுப் பேசுவதும், விரும்பிய உணவை உண்டு மகிழ்வது மாய் எத்தனை எத்தனை தருணங்கள்... 'சௌபர்ணிகா' முதியோர் இல்லத்திற்கு வந்து ஒரு வருடம் முடிந்திருந்தது.

திடீரென்று ஒரு நாள் இடதுபுற மார்பில் தாங்க முடியாத வலி. அவ் வளவுதான்.

மூன்று பிள்ளைகள் இருந்தும்... ராம்நாராயணனுக்கு அளவிடற்கரிய வருத்தம். ஒரு பிள்ளைதான் வீட்டை விட்டு ஓடிப்போய் விட்டானே! அதற் குத் தானும் உடந்தையாய் விட்டதாய் ராம்நாராயண் நினைத்து நினைத்து நொந்து கொண்டு இருக்கிறார். நாட்கள் கடக்கக் கடக்க அவன்மீது பொங்கி வந்த பாசம்.

பத்து மாதம் பெத்த வயிறு பற்றி எரி கிறதே என்று தன் மகன் ராதா கிருஷ்ணன் போனதிலிருந்து வருந்தி வருந்தி ஒரு நாள் செத்துப் போய் விட்டாள் மனைவி ராஜலட்சுமி. ராம் நாராயணனுக்குத் தன் மகன் ராதா கிருஷ்ணனையும், மனைவி ராஜ லட்சுமியை நினைக்கும்போதெல்லாம் மனத்தவிப்பு.

சுப்புராசும், வெங்கடாசலமும் நல்ல பிள்ளையாகத்தான் இருந்தார்கள். வாழ்க்கைப்பட்டு வந்த மருமகள்கள் என்ன தூபம் போட்டார்களோ, சொத் தைப் பிரித்துக் கொடுக்க வேண்டுமாம். சரிபாதியாய் இரண்டு பங்காக இருக்க வேண்டுமாம். எல்லாம் தான் சம்பா தித்த சொத்து.

சைக்கிளில் சென்று பாத்திரங்களை விற்றுப் படிப்படியாய் முன்னேறி, பணி மனை வைத்து நிர்வாகம் செய்கிற அள விற்கு ஆன பின்தான் பிரச்சனைகள்

முளைத்திருக்கின்றன. மூன்று மகன்களும் படித்தவர்கள்தான். எதிலும் குறை வைக்கவில்லை. வயது முதிர்ச்சியாய் உடல் தளர்ந்து கொண்டிருக்கிற நேரத்தில், "அப்பா, உங்களுக்கென்ன வேண்டும்... மாமா என்ன சாப்பிடுகிறீர்கள்... மாத்திரை போட்டுக் கொண்டீர்களா?" என்றெல்லாம் கேட்டுத் தன்னைப் பாசப்பெருக்கில் மிதக்க வைப்பார்கள் என்றல்லவா நினைத்திருந்தார். எல்லாம் மாறிப் போய் விட்டதே!

இரண்டு பங்காய்ப் பிரிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, தங்களுக்கு முன்பாய்ப் பிறந்தவன் இருந்தானே, அவனுக்கும் சேர்த்தல்லவா பிரிக்க வேண்டும் மூன்று பங்காய். ராம் நாராயணின் மனது நினைக்கும்போதெல்லாம் நைந்து போகும்.


தன் பெயரில் தான் சம்பாதித்த சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கும் அதிகாரம் தன் கையில் இருந்தும், தன்னைத் துன்புறுத்துகிறார்கள்.

'ராதாகிருஷ்ணன் வீட்டைவிட்டுப் போய் எத்தனை ஆண்டுகளாகி விட்டன. வரவா போகிறான்... அவன் போனபின்தான் உயிருக்குயிரான அம்மா துக்கம் தாளாமல் செத்துப் போனாள். இதையெல்லாம் நினைச்சுப் பார்க்காமல் அவனுக்கும் பங்கு வேண்டுமாம். என்ன மனுசன்' என்று தன் தந்தையை நினைக்கும் போதெல்லாம் சுப்புராசுவிற்கும் வெங்கடாசலத்திற்கும் கோபம் பீரிட்டு வரும்.

கோபம் மறையாமல் வீட்டுக்கு வரும் போதெல்லாம் மேலும் சினம் கொள்ள வைக்கிறாற்போல அல்லவா அவர்களின் மனைவிமார்களின் பேச்சும்.

ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டேயிருந்தார் ராம்நாராயண். கட்டட உச்சியில் இருந்த புறாக்கள் எங்கேயோ காணாமல் போயிருந்தன. தென்னை மரக் கீற்றுகளின் சலசலப்பு நின்றபாடில்லை. வழக்கம்போல் தலைகளை ஆட்டிக் கொண்டிருந்தன.

ஆட்டனத்தி



அறையை நோட்டம் விட்டார். டேபிளின் மேல் வரிசை கட்டிக் கொண்டிருந்த மருந்து பாட்டில்கள், மாத்திரைகள்.

ஒருநாள்கூடத் தன்னைப் பெற்றவன் எங்கே இருக்கிறான் என்று தேடி வராத பிள்ளைகள். அது எப்படி வருவார்கள்?

பணிமனையே சொர்க்கம் என்று தன் மனைவி ராஜலட்சுமி போனபிறகு தங்கி விட்டிருந்ததை மறுபடியும் நினைத்துப் பார்த்தார் ராம்நாராயண். வசதியாய்க் கட்டி வைத்த தன் வீட்டில் தனக்கான தன் அறையில் சுகமாய்த் தூங்கிக் கொண்டிராமல் இவர்கள் சுகமாய் இருக்கட்டும் என்று வசதி குறைவான, சுற்றிலும் இரும்புச் சாமான்களும், பாத்திரங்களும் அங்கங்கே கிடக்கும் வசதியே இல்லாத இடத்தில் அல்லவா தூங்கிக் கழிக்கிறார்.

ஒரு நாள் இப்படித்தான்... அரைத் தூக்கத்தில் இருந்தபோது யாரோ இருவர் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஓயரைப் படுத்திருக்கிற கட்டிலில் இணைச்சுக் கரண்ட்டைக் கொடுத்துட்டாப் போதும். அப்படியே கரண்ட் பாஸாகி, தூங்கத் தூங்கச் செத்துப் போவான்."

"ஆமாம்! காலைல நேரத்தில வந்து பார்த்துக் கட்டில்ல இணைச்சிருக்கிற ஓயரை எடுத்துட்டோம்னா எப்படிச் செத்தான்னு யாரும் கண்டுபிடிக்க முடியாது. மாரடைப்பு வந்து செத்துப் போயிட்டார்னு சொல்லிக்கலாம். சொத்து உன் பேரிலிருக்கிறதால்தானே இத்தனை ஆட்டம் போடறே. இனி நீ இருந்து எங்களுக்கு என்ன பிரயோஜனம். காணாமல் போன ஓடுகாலி அண்ணன்... அண்ணனாம் அண்ணன். அவன் செத்தானோ, பொழைச்சானோ... அவனோடயே இவனும் போகட்டும்."

அவர்கள் இருவரும் பேசுவது

தெளிவாகக் கேட்டது. ராம்நாராயண் உடலெங்கும் குப்பென்று வியர்வை பூத்துக் கொண்டது. 'பேசுவது தன் மகன்களா? ஆ...!' என்று நினைக்க நினைக்க மார்பே அடைத்து விடும் போல் இருந்தது. மறுபடியும் காதைத் தீட்டிக் கொண்டிருந்தார்.

"அந்த மனுஷன் படுத்திருக்கிற இடத் துக்கும், சுவிட்ச் பாக்ஸ் இருக்கிற இடத் துக்கும் ஒயர் பத்தாது போல் இருக்கே... வீட்டில் நான் போய் எடுத்துட்டு வரு கிறேன். நீ இங்கேயே இரு. அரை மணி நேரத்தில் வந்து விடுகிறேன். இருக்கிற ஒயரைக் கட்டிலில் இணைச்சிடு" சுப்பு ராசு சொன்னான்.

"இல்லையில்லை, நானும் வரு கிறேன். உனக்கு ஒயர் இருக்குமிடம் தெரியாது. சரியாக மூணு மணிக்குத் தான் இந்த மனுஷன் அசந்து தூங்கு வான். இன்னும் ஒரு மணி நேரம் இருக் குதே. இப்போது போய்க் கட்டிலில் ஒயரைக் கட்டினோம்னா தெரிஞ்சு போய் முழிச்சாலும் முழிச்சிருவான். வா போகலாம். முழு நீளமான ஒயரை எடுத்து வந்துடலாம். வேற யாருக்கும் தெரியக்கூடாது. ம்ம்..." என்று அவ சரப்படுத்தினான் வெங்கடாசலம்.

"கேட்டை நன்றாக இழுத்துச் சாத்திப் பூட்டை நல்லாப் பூட்டு" என்று சுப்புராசு சொல்ல, பூட்டைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

ராம்நாராயணனுக்கு நெஞ்சு பட படத்துக்கொண்டு இருந்தது. அவர்கள் வருவதற்குள் ஓடிவிட வேண்டும். எப் படித்தான் அவ்வளவு பயம் வந்ததோ, ஆறடி உயரம் உள்ள கம்பி வலைகளாய் இருந்த கேட்டைப் பிடித்துப் பிடித்து ஏறி ஓட்டம் எடுத்தார். அவர்கள் வந்து பார்க்கும்போது, தான் இல்லை என்று தெரிந்ததும் ஆக்ரோஷம் கொண்டு ஓடி வருவார்கள் என்று மனசில் ஒரு மின் னல். அன்றாடம் போய் வருகிற வழி களை எல்லாம் விட்டுவிட்டுப் புதிதாக ஓரிடத்தில் தடம் போட்டுக்கொண்டு ஓடலானார்.

ஜன்னல் வழியே மறுபடியும் பார் வையைச் செலுத்தினார். காற்று மித மாய்... தென்னங்கீற்றின் சலசலப்பு மிகமிக மெதுவாய்.

தனக்கான உடைமைகளை அந்தப் பதற்றமான சூழ்நிலையிலும் எடுத்து வந்ததை நினைத்துப் பார்த்தார். தன் னைக் கொல்ல நினைத்த மகன்களா, தன்னை வந்து பார்க்கப் போகிறார்கள்? நல்ல வேளை. தன் முன்னால் வந்து திட்டம் தீட்டிக் கொண்டிராமல், திடீரென்று செயலில் ஈடுபட்டிருந்தால், தான் அன்றே போய்ச் சேர்ந்திருக்க வேண்டியவன்.

இன்றைக்குக்கூட நெஞ்சு வலி வந்து தாங்க முடியாமல் இருந்தபோது மருத் துவமனைக்குக் கூட்டிச்சென்றார் விடுதிக் காப்பாளர். அடேயப்பா, இன் றைக்கு உயிரோடு இங்கே வந்து நல்ல படியாய் சுகமானதொரு நிலையில் அமர்ந்திருக்கிறேனே... ஏதோ ஒரு வகை யில் தன் ஆயுள் நீண்டு கொண்டல் லவா இருக்கிறது...!

தன் மூத்த மகன் ராதாகிருஷ்ணனை யும் பார்த்துவிட்டுத்தான் போவேனோ... யார் கண்டார்கள்...

மின்சாரம் பாய்ச்ச நினைத்தவர்கள் வெற்றி கண்டிருந்தால் அன்றே போய்ச் சேர்ந்திருக்க வேண்டியது. ஆனால் இன்றைக்கு...

"ஆஞ்சியோகிராம் எடுத்ததில் நான்கு அடைப்பு இருக்கிறது என்றும், உடனே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும், இல்லையேல் உயிருக்கு ஆபத்து என்றும் சொன்னபோது... அவ்வளவுதான் இதில் நான் தப்பிக்க மாட்டேன். என்னிடம் அவ்வளவு வசதி யில்லையே. இருந்த பணத்தில் முதி யோர் இல்லத்திற்கு மாதக் கட்டணம் செலுத்துவதற்குத்தானே சரியாக இருக்கிறது. ஐந்து லட்சம் செலவு ஆகும் என்றல்லவா சொன்னார்கள் என்று நினைத்தார்.

ஆனால், அத்தனையையும் சந்தித்து அவரைப் பூரண குணம் அடையச் செய்து மீண்டும் இந்த இல்லத்திற்கே அழைத்து வந்திருக்கிறாரே விடுதிக் காப் பாளர். அவர் தெய்வமாகத்தானே தெரி வார். அவருக்கு நடந்த சம்பவங்களை ஒவ்வொன்றாய்க் கேட்டறிந்ததாலே

தான் அவரை இந்த விடுதியில் சேர்த்துக்கொண்டார்.

கடந்த காலங்களில் தன்னைச் சேர்ந்தவர்கள் யாரும் தன்னைப் பார்க்க வரவில்லை என்பதும், தன்மீது மிகுந்த அனுதாபம் கொண்டு இத்தனை பெரிய உதவிகள் செய்து தன்னைக் காப்பாற்றியிருக்கும் விடுதிக் காப்பாளர் கண்கண்ட தெய்வம்தானே!

கீழே குனிந்து தன் மார்பைப் பார்த்தார். இரண்டாகப் பிளந்து இதயத்தில் அறுவைச் சிகிச்சை செய்து, பின் மூடித் தைத்திருந்ததைப் பார்த்தபோது மேலும் நெஞ்சு விம்மியது. மறுபிறவி!

திடீரென்று விடுதிக் காப்பாளர் அழைப்பதாய் வந்து சொல்லிவிட்டுப் போகிறார்களே, என்னவாக இருக்கும்? மருத்துவச் செலவு பற்றித் தன்னிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறார். அதைக் கேட்பார்தானே. தன்னிடம் இருக்கும் சொத்தில் ஒரு பகுதியை விற்றுக் கொடுத்துவிட வேண்டும். இன்னும் உடம்பு பூரணமாய்க் குணமடையட்டும். செய்துவிடத்தானே இருக்கிறேன். அவர் சொல்லும் பட்சத்தில் இப்போதே சொல்லிவிடலாம். நினைத்தவாறே நடக்கிறார்.



“கடந்த காலங்களில் தன்னைச் சேர்ந்தவர்கள் யாரும் தன்னைப் பார்க்க வரவில்லை என்பதும், தன்மீது மிகுந்த அனுதாபம் கொண்டு இத்தனை பெரிய உதவிகள் செய்து தன்னைக் காப்பாற்றியிருக்கும் விடுதிக் காப்பாளர் கண்கண்ட தெய்வம்தானே!”

“நான் நினைத்துக் கொண்டிருந்தேன் ஐயா. எனக்கான மருத்துவச் செலவை...” ராம்நாராயண் சொல்லி முடிப்பதற்குள் விடுதிக் காப்பாளர், “மருத்துவச் செலவை ஒருவர் கட்டிவிட்டார். நீங்க பயப்பட வேண்டியதில்லை” என்று சொன்னவாறே ஒரு கடிதத்தை எடுத்து அவர் முன்னால் போட்டார்.

“உங்கள் பெயரில்தானே வந்திருக்கிறது... இதை என்னிடம்...” என்று நெற்றி சுருங்க விடுதிக் காப்பாளரைப் பார்த்தார் ராம் நாராயண்.

ராதா எம்.ஏ., பி.எல். அரசு வழக்குரைஞர். ஆமாம்! ராதாகிருஷ்ணன் – ராதாவாக மாறிப்போனவன்.

வீட்டை விட்டு ஓடியபோது சுமித்ராதான் கை கொடுத்தார். தன்னைப்போலத் திருநங்கையானவர்களுக்கெல்லாம் அடைக்கலம் கொடுத்தவர். ஏற்கனவே பட்டம் பெற்றிருந்த ராதாகிருஷ்ணனின் நிலையைக் கேட்ட சுமித்திரா, “ஆமாம். நம்மை இந்தச் சமுதாயம் ஏற்காமல்தான் இருக்கிறது. படித்துப் பட்டம் பெற்றிருக்கிறாய். மேலும் படி என்று சட்டம் படிக்கத் துணை புரிந்தவர். இன்று எம்.ஏ., பி.எல். என்று கல்வித் தகுதி மட்டுமல்ல, அரசு வழக்குரைஞராகவும் ஆகிவிட்டதாக அந்தக் கடிதத்தைப் படித்தபோது, இப்போதே தன் மகனைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. இங்கே இருப்பது எப்படித் தெரிந்தது என்ற வினாவும் எழுந்து மறைந்தது.

யாரும் பார்த்துவிடக் கூடாது என்று சுமித்ரா அவர்களின் துணையோடு காரில் சென்று விசாரித்ததாகவும், எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதாகவும் தன் அப்பா முதியோர் இல்லத்தில்தான் தங்கியிருப்பார் என்று நினைத்து, ஒவ்வொரு முதியோர் இல்லமாய் விசாரித்தபோது...

கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் விடுதிக் காப்பாளர் தொடர்ந்தார்...

“அப்போதான் உங்களுக்கு நெஞ்சு வலி இருந்ததாச் சொல்லியிருந்தீங்க. இதைக் கேட்ட உங்க மகன் ராதாகிருஷ்ணன் எவ்வளவு செலவானாலும் நான் இருக்கிறேன், பாருங்கன்னு சொல்லி என் வங்கிக் கணக்கில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பணம் போட்டு வந்தார். அதை உங்களிடம் சொல்ல வேண்டாம் என்று சொல்லி வந்தார்.”

வானில் உயரே உயரே பறப்பது போல் இருந்தது ராம்நாராயணனுக்கு.



இப்போது அவன் எங்கிருக்கிறான்? இப்போதே காண வேண்டும் என்று மனம் துடித்தது. மீண்டும் தொடர்ந்தார் விடுதிக் காப்பாளர்.

"உங்க மகன் இங்கே வருவதற்கு விரும்பலெ. அவர் இருக்குமிடத்தையும் தெரிவிக்க விரும்பலே. ஆனா, நான் வற்புறுத்திச் சொன்னேன். வருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்."

தன் நெஞ்சில் பாலை வார்த்தது போல் உணர்ந்தார் ராம்நாராயண்.

ராதா எம்.ஏ., பி.எல். என்ற அரசு வழக்குரைஞரின் வருகைக்காக அந்த முதியோர் இல்லம் காத்துக் கொண்டிருந்தது.

ஆமாம்... ஜன்னல் வழியே வீசியடிக்கும் காற்றையும், சுவர் மீது வந்தமர்ந்த புறாக்களையும் மகிழ்ச்சியோடு தன் மகன் திருநங்கை ராதாவின் வருகையை எண்ணியவாறே பார்த்துக்கொண்டிருக்கிறார்.

விவாதம்

உத்தரப்பிரதேசத்தில் பிப்ரவரி மாதம் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் இந்தியாவுடன் 1045 தொழில் நிறுவனங்களின் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. பிறகு ஜூலை 30–ஆம் தேதி உ.பி.



பாரதப் பிரதமர் நரேந்திர மோடி

வாங்கியதில் பிரதமர் மோடி கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறார்.

மத்தியில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது, இதே விமானங்களை வாங்குவதற்கு அன்றைய ராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி அவர்களால் ஒரு விமானம் ரூ. 560

தீண்டத்தகாதவர்களா தொழிலதிபர்கள்?

தலைநகரான லக்னோவில் அரசு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு ரூ. 60 ஆயிரம் கோடி மதிப்புடைய 81 திட்டங்களை உ.பி.–யில் தொடங்கிவைத்தார். இதனால் சுமார் 2 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க உள்ளது.

அதே நிகழ்ச்சியில் பிரதமர் மோடியுடன் மேடையில் மாநில, மத்திய அமைச்சர்கள் என்று வழக்கமாக இல்லாமல், வித்தியாசமானவர்கள் இருந்தார்கள்.

ஆதித்ய பிர்லா தொழில் குழுமத்தின் தலைவர் குமார்மங்கலம் பிர்லா, அதானி தொழில் குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி, எஸ்.எல். தொழில் குழுமத்தின் தலைவர் சுபாஷ் சந்திரா, பிரபல ஐ.டி.சி. தொழில் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் சஞ்சீவ் பூரி ஆகியோர்தான். மேலும் 80–க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களும் கலந்து கொண்டனர்.

சமீப காலமாக பிரான்சு ரபேல் விமானத்தை இந்திய ராணுவத்திற்கு கோடி என்று ஒப்பந்தம் போடப்பட்டது. இப்போது அதே விமானத்தை மோடி ஆட்சியில் ராணுவ அமைச்சர் நிர்மலா சீதாராமன் ரூ. 1560 கோடிக்கு வாங்குவதாக ஒப்பந்தம் செய்துள்ளாராம்.

39 விமானங்களை அதிக விலைக்கு வாங்கியதனால் ரூ. 39 ஆயிரம் கோடி மோடி ஆட்சியின் ஊழல் என்பது ராகுலின் குற்றச்சாட்டு.

பிரதமர் மோடியின் தரப்பிலிருந்து தரப்பட்ட இதற்கான விளக்கம், இந்த ஒப்பந்தம் ராணுவ ஒப்பந்தம். அதனால் இது ரகசியமானது. அதை வெளியிடுமாறு கேட்பதே தவறு. நிச்சயமாக இதில் ஊழல் நிகழவில்லை. இதைப் பற்றி மேலதிகமாக எந்தத் தகவலும் எதிர்க்கட்சியினருக்குத் தரப்பட மாட்டாது என்பதுதான் மத்திய அரசின் விளக்கம்.

ரபேல் விமானம் பற்றி அனில் அம்பானி ராகுலுக்கு பதில் தருமாறு கூறியுள்ளவை அதிர்ச்சி அளிக்கிறது. ரிலையன்ஸ் ராணுவத் தொழிற்


சாலையும் பிரான்ஸ் டசால்ட் நிறுவனமும் கூட்டாக ரபேல் ஜெட் விமானங்களை உற்பத்தி செய்ய வில்லை. வாங்கப்பட்ட 39 ஜெட்டு களும் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. இதில் ரிலையன்ஸ் எந்திர பாகம் ஒன்றுகூட இல்லை. நமது ராணுவ அமைச்சர் எந்த ஒப்பந்தமும் ரிலையன்ஸுக்குத் தரவில்லை. இந் நிலையில், ரிலையன்ஸ் நிறுவனம் கொள்ளையடிப்பதாக ராகுல் காந்தி கூறியதில் ஆதாரமே இல்லை. வெறும் கற்பனைதான். எதிர்காலத்தில் விமா னத்தைத் தயாரிப்பதில் பாரத் எலக்ட் ரானிக், ராணுவத்தின் ஆய்வுப் பிரிவு, நடுத்தர – குறு – சிறு – தொழிற்சாலை கள்தான் ஈடுபட உள்ளன.

உண்மையில், ரபேல் விமான ஒப்பந்தத்திற்கு ஓராண்டுக்கு முன்பே 2014–இல் ரிலையன்ஸ் கம்பெனி ராணுவப் பிரிவைத் தொடங்கியது. அப் போது காங்கிரஸ் ஆட்சி. இவ்வாறு அனில் அம்பானி கூறியுள்ளது நினைவு கூரத் தக்கது.

இதற்கிடையில், அரசின் கொள்கை முடிவு இன்னொன்று வெளியிடப் பட்டது. ராணுவத்திற்குத் தேவையான தளவாடங்களை உள்நாட்டிலேயே உற் பத்தி செய்யத் திட்டமிடும் கொள்கை முடிவுதான் அது.

அம்முடிவு அறிவிக்கப்பட்டபோது, கோவையிலுள்ள கொடீசியா தொழிற் சாலைகளுக்கும் தள வாட உற்பத்தி வாய்ப்பு கள் கிடைக்கும். ரூ. 1000 – 2000 கோடி அளவிற்கு முதலீடுகள் இதில் இடம்பெறும். இதனால் வேலை வாய்ப்புகளும் பெருகும் என்று நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

இந்த அறிவிப்பு வந்த உடனே மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி, ராணுவத் தளவாட உற்பத்தியில் தனியாரை ஈடுபடுத்து


ராகுல் காந்தி

வது நமது பாதுகாப்பிற்கு ஏற்றதல்ல என்றது. மற்ற எதிர்க்கட்சிகள் தனியார் களாக உள்ள தொழிலதிபர்களுடன் தளவாட உற்பத்தி ஒப்பந்தங்கள் செய் தால், மத்திய அரசு ஊழல் செய்வதற்கு வாய்ப்புள்ளது என்றன.

ரூ. 10,000 – 20,000 கோடி செல வழித்து ராணுவத் தளவாடங்களை வெளிநாடுகளிலிருந்து இந்தியா வாங்கி னால், வெளிநாடுகளுக்குத்தான் லாபம். இந்தியாவே அவற்றைத் தயாரிக்குமா னால், உள்நாட்டில் வேலை வாய்ப்புக் களை நமது படித்த இளைஞர்களுக்கு உருவாக்கித் தர முடியும். இந்தக் கோணத்தில் பார்க்காமல் விமர் சிக்கக் கூடாது என்றும் கூறப்பட்டது.

இந்தப் பின்னணிகளையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் பிரதமர் மோடி, லக்னோ மாநகர மேடையில் தொழிலதிபர்களோடு அமர்ந்திருந்த அந்தக் காட்சியையும், அதில் அவர் கூறிய கருத்தையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிரதமர் என்ன கூறினார் என்றால், இந்த நாட்டின் தொழிலதிபர்களை இடதுசாரி அரசியல்வாதிகள் தீண்டத் தகாதவர்களாகப் பிரச்சாரம் செய் கிறார்கள். தொழிலதிபர்களோடு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது அநேக மாக இந்தியாவில் இயல்பானதாக இல்லை.

இதை மனதில் கொண்டுதான் பிரத மர் மோடி மேடையில் அமர்ந்திருக்கிற தொழி லதிபர்களைச் சுட்டிக் காட்டி, மத்திய அரசின் பிரதமராக இருக்கிற தான், இத்தொழிலதிபர்க ளோடு மேடையில் ஒன்றாக அமர்ந்திருப் பதற்கு அச்சப்பட வில்லை, கூச்சப்பட வில்லை என்று கூறினார்.

ஏனெனில், அவர் களோடு மேடையில்

அமர்ந்திருப்பதே இந்தியப் பொதுத் தளத்தில் பிரதமருக்கும், தொழிலதிபர்களுக்கும் ஏதோ பிரத்யேகமான ஓர் உறவு இருக்கிறது என்று சுட்டிக் காட்டுவதற்கு இந்தச் சம்பவம் பயன்படலாம். அதைப் பாமர மக்களிடத்தில் விஷமத் தனமாகச் சொன்னால் அவர்களும் நம்புவார்கள். ஏனெனில், பாமர மக்களுடைய வறுமைக்கு அவர்களைத் தொழிலதிபர்கள் சுரண்டுவதுதான் காரணம் என்று ஒருவித விஷமக் கருத்தைக் கடந்த 70 ஆண்டுகளாகவே நாம் விதைத்திருக்கிறோம்.



ஐரோப்பிய நாடுகளில் 18–ஆம் நூற்றாண்டில் தொழிற்புரட்சி ஏற்பட்டபோது, தொழிலாளர்களை முதலாளிகள் அதிகமாக வேலை வாங்கி, குறைவாகச் சம்பளம் கொடுத்தார்கள். இதுதான் சுரண்டல். அதன்பிறகு, இந்த 200 ஆண்டுக்காலத்தில் முதலாளிகள் வளர்ச்சியடைய வேண்டுமானால், தொழிலாளிகளும் வசதியாக இருந்தால்தான் சாத்தியம் என்ற புரிதல் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில், தொழிலாளர்களுக்கான சட்டங்கள், தொழிலாளர் நீதிமன்றங்கள், தொழிற்சங்கங்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் எனப் பல்வேறு விதமான வளர்ச்சி ஏற்பட்டுத் தொழிலாளர்கள் 18–ஆம் நூற்றாண்டில் போல இன்றைக்குச் சுரண்டப்படுபவர்களாக இல்லை என்பது உண்மை.

மூலதனம் (Capital) இருந்தால்தான் தொழிற்சாலையை உருவாக்க முடியும். மூலதனமோ முதலாளிகளிடத்தில் உள்ளது. தொழிற்சாலைகளை நடத்தத் தொழிலாளிகள் வேண்டும். இவ்வாறு தொழிலாளர்கள், முதலாளிகள், மூலதனம் இந்த மூன்றையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு மேலாண்மை நிர்வாகம் இருந்தால்தான் உற்பத்திகளைச் செய்ய முடியும்.

தொழிலாளர்களைச் சார்ந்துதான் தொழிலதிபர்கள் தொழிலை நடத்த முடியும். தொழிற்சாலைகளின் உற்பத்தி சந்தைப்படுத்தப் பட்டால்தான் தொழிற்சாலைக்கு லாபம் வரும். தொழிற்சாலைக்கு லாபம் வந்தால்தான் அரசுக்கு வரி வருமானம் வரும். வரி வருமானத்தை வைத்துத்தான் அரசு நலத்திட்டங்களைச் செய்ய முடியும்.

அதனால், தொழிலதிபர்கள் தீண்டத்தகாதவர் என்ற ஓர் அபத்தமான கற்பிதத்திலிருந்து இந்தியாவை நாம் மீட்டாக வேண்டும். அப்படி மீட்டால்தான் தொழிலதிபர்களும், தொழிலாளர்களும் வளர்வார்கள். சம்பளம், பணியிடத்தில் வசதிகள், சீருடைகள், ஆரோக்கியமான உணவு, மருத்துவம், கல்வி முதலிய அனைத்தையும் இன்றைக்கு ஒருங்கிணைத்துத்தான் தொழிலாளர்கள் பணி உள்ளது.

இவற்றைப் பற்றியெல்லாம் எந்த ஞானமும் இல்லாமல் தொழிலதிபர்கள் என்றாலே திருடர்கள், கொள்ளைக்காரர்கள், மோசடிக்காரர்கள் அபகரிப்பவர்கள் என்று அரசியல்வாதிகள் பொது மேடைகளில் பொத்தாம் பொதுவாகப் பேசுவது வாடிக்கையாகி விட்டது.

பிரதமர் மோடி 130 கோடி மக்களுக்குரிய பிரதமர் அல்ல, 30 தொழிலதிபர்களுக்கே அவர் பிரதமர் என்று திரு. ராகுல்காந்தி தொடர்ந்து குறைகூறி வருகிறார்.

தொழிலதிபர்கள் என்றாலே அவர்கள் மீது களங்கம் கற்பிக்கப்படுவதால், அவர்களுடன் கைகுலுக்குவதையோ, தோளோடு தோளாகச் சேர்ந்து நிற்பதையோ அரசியல்வாதிகள் தங்களுக்கு ஆபத்து என்று தவிர்த்து விடுகிறார்கள். அத்தொழிலதிபர்களை ரகசியமாகச் சந்தித்துப் பலன் பெறுகிற அரசியல்வாதிகள் இல்லையெனக் கூற முடியாது.

இவற்றையெல்லாம் மனதில்

கொண்டுதான் பிரதமர் மோடி, லக்னோவில் நடந்த அக்கூட்டத்தில் தொழிலதிபர்களோடு தாம் மேடையில் இருப்பதற்குப் பயப்படவில்லை என்றும், தான் அவர்களை ரகசியமாகச் சந்திப்பவன் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

மனசாட்சி மட்டும் சரியாக இருக்குமானால், நாம் யாரோடும் இருக்கலாம். யாருக்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை என்றார்.

மகாத்மா காந்தி பிர்லா மாளிகையில்தான் தங்கினார். பிர்லா ஏழையல்ல, தொழிலதிபர். பிர்லா மாளிகையில் தங்கிய மகாத்மா காந்தியை அன்றைக்கிருந்த யாரும் சந்தேகப்படவில்லை. காரணம், மகாத்மா காந்தியின் மனசாட்சி மீது மக்களுக்கு நம்பிக்கை இருந்தது. அதே கண்ணோட்டத்தில் தான் இந்த மேடையில் பிரதமராகிய தான் இந்தத் தொழிலதிபர்களோடு அமர்ந்திருப்பதாகக் கூறினார்.

புத்ததேவ் பட்டாச்சாரியா மேற்கு வங்க முதல்வராக இருந்தபோது தொழிலதிபர் டாடாவை ‘நானோ கார்’ தொழிற்சாலை தொடங்க அழைத்தார். டாடா தொழிற்சாலைக்கு விவசாயப் பூமிகளைக் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலில் விவசாயிகள் தூண்டிவிடப்பட்டனர். கம்யூனிஸ்டின் தொழிலாளி ஆட்சி, முதலாளி டாடாவை ஆதரித்தது.

தொழிலதிபர்களைக் கொள்ளைக்காரர்கள் என்று பிரச்சாரம் செய்து, தொழிலதிபர்கள் இந்த நாட்டை மேம்படுத்த விடாமல் நாம் செய்து வருகிறோம். அவர்களுக்குரிய முழுப் பணியையும் செய்யவிட்டால்தான் தொழில்கள் பெருகும், தொழிலாளர்கள் அதிகமாவார்கள், உற்பத்தி பெருகும், ஏற்றுமதி அதிகமாகும், இறக்குமதி குறையும், பணவீக்கம் மறையும், தேசம் முன்னுக்கு வரும்.

தொழிலதிபர்கள் அரசை ஏமாற்றிக் கருப்புப்பணத்தை உற்பத்தி செய்கிறார்கள் என்பது ஒரு குற்றச்சாட்டு. கருப்புப்பணம் எனப்படுவது பாகிஸ்தானில் அச்சடிக்கப்படுகிற கள்ளப் பணம் அல்ல. கருப்புப் பணம் வருமான வரி கட்டாமல், அரசை ஏமாற்றிய பணம்.

அந்தக் கருப்புப்பண உற்பத்தியைத் தடுப்பது முழுமையாகச் சாத்தியமில்லை. குறைக்கலாம். அதற்குத்தான் அமலாக்கப்பிரிவு அடிக்கடி வருமான வரிச் சோதனைகளை மேற்கொள்கின்றது. பிடிக்கப்படுகிற கருப்புப் பணத்திற்கு வரி விதிக்கப்படுகிறது. வரிப்பணம் அரசாங்கத்திற்கு வரியாகிறது. தொழிலதிபர்களின் வரி விதிக்கப்பட்ட தொகை கணக்கில் கொண்டு வரப்படுகிறது. அது மூலதனமாக மாறுகிறது. அந்த மூலதனம் முதலீடாக மாறுகிறது. அந்த முதலீடு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்குகின்றது. இது ஒரு சுழலும் சக்கரம்.

தொழிலதிபர்களைக் கண்காணிப்பில் வைக்க வேண்டும். தொழிலாளர்களை ஆரோக்கியமுள்ளவர்களாக்க வேண்டும். உற்பத்தியை ஊக்குவிக்கவும், வரி ஏய்ப்பு இல்லாமலும் செய்ய வேண்டும். மத்திய அரசு இதில் வெற்றி பெறுமானால், மகத்தான மாறுதல்கள் நம் கண் முன்பே நடக்கும். இந்தப் பின்னணியில்தான் பிரதமர் மோடி தொழிலதிபர்களோடு இருப்பதற்குத் தான் அஞ்சவில்லை என்று கூறினார்.

தேசத்தின் அபிவிருத்தியில் விவசாயிகள், வங்கித் துறையினர், அரசுப் பணியினர், தொழிலாளர்கள் போலவே தொழிலதிபர்களுக்கும் உரிய பங்களிப்புகள் உண்டு என்றார் பிரதமர் மோடி.

தொழிலதிபர்களிலும் கருப்பு ஆடுகள் இல்லாமல் இல்லை. தொழிலதிபர்கள் பொருளாதாரக் குற்றம் செய்துவிட்டுத் தைரியமாக இப்போது இந்தியாவில் இருக்க முடியாது. ஒன்று நாட்டைவிட்டே நழுவி ஓடினால்தான் தப்பிக்க முடியும். உள்நாட்டில் இருப்பார்களேயானால், சிறைச்சாலைகளில் தான் இருக்க முடியும். சென்ற 4 ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி ஆட்சியில் தான் அப்படி இருந்து வருகிறது.

வாசகர்களாகிய நீங்கள், பிரதமர் மோடி தொழிலதிபர்களைப் பற்றிச் சொன்னது சரியா, தவறா? என்று என்ன நினைக்கிறீர்களோ அதை எழுதுங்கள் செப்டம்பர் 12–க்குள்.

– பி.சி.

வெட்டுத் துணி

சாகித்ய விருதாளர் பொன்னீலன் சாராம்சத்தில் மார்க்சியப் பார்வையுள்ளவர். கலை என வரும்போது அவருக்குக் "கற்பிக்கப்பட்ட" கம்யூனிசத்தை மீறி, அவர் கனிவதற்குக் காரணமாக இருந்தவற்றைப் படைப்புகளாகத் தருவதற்கு அவர் பின் தங்குவதே இல்லை. சென்ற மே மாத 'ஓம் சக்தி'யில் வெளியான 'மார்க்சியம் நாத்திகமா?' என்ற அவருடைய கட்டுரையே அதற்குச் சாட்சி.

அவருடைய கல்வி அலுவல்களில் ஏற்பட்ட அனுபவங்கள் இனி இங்கே வரும்.

– இ. ஆர்.

பீடி சுப்பிரமணியன் 1

மாலை நேரம். பஸ் நிலையத்தில சரியான கூட்டம். என் ஊருக்கான பஸ்ஸை எதிர்பார்த்துக் காத்து நின்னுக்கிட்டிருந்தேன். தற்செயலாகப் பக்கத்தில் நின்ன ஒருத்தனக் கவனிச்சேன். என்னையே உறுத்துப் பார்த்துக்கிட்டு நின்னான். இருபத்தஞ்சி வயசு இருக்கலாம். மொரட்டு ஆளு. அட்ட கருப்பு. பெரிய மீசைய மேலே பார்க்கத் திருகி விட்டிருந்தான். இது என்னடா இப்பிடி நம்மளயே வெறிச்சிப் பாத்துக்கிட்டு நிக்கானே, திடுக்கிட்டுப் போனேன். கண்ணு ரெண்டும் கலங்குன மாதிரி. உதடு துடிக்கிற மாதிரி... என்னைய அடிக்கத் தயாராகுறானா?

ஒரே குழப்பம் எனக்கு. ரெண்டு நாளுக்கு முன்னதான் பொது இட மாறுதல் ஆணைகள்ல கையெழுத்துப் போட்டிருந்தேன். இவனும் வாத்தி யாரோ. பிடிக்காத ஊருக்கு இவன மாத்திப்புட்டனோ? நான் அப்போ முதன்மைக் கல்வி அதிகாரி. அப்பிடின்னாலும் எனக்குக் கீழே வேலை செய்யிற ஒரு ஆசிரியர் என்னையப் பாத்து இப்பிடி வெறிப்பானா? ஒண்ணும் புரியல்லியே!

நான் இப்பிடி நினைச்சிக் குழம்பிக்கிட்டிருக்கும் போதே, திடீர்னு ஆவேசத்தோட அந்த இளைஞன் பாய்ஞ்சு வந்து என்னையக் கட்டிப் பிடிச்சி, என் தோள்ல முகம் புதைச்சி விம்மி விம்மி அழத் தொடங்கினான்.

இது என்னடா புது மாயம்? அடிக்க வாரான்னு நெனச்சேன். இவன் தோள்ல விழுந்து அழுறானே? குழம்பிப் போனேன்.

யார் இவன்? முகத்தைப் பார்க்கிறதுக்காக என் கைகளால் அவன் தோள்களப் பிடிச்சி முன்னே தள்ளினேன்.

"தம்பி, தம்பி நீங்க யாரு? ஏன் என்னையக் கட்டிப்பிடிச்சி இப்பிடி அழுறீங்க?"

கன்னங்கரேர்னு முகம் முழுதும் கண்ணீர்ல நனஞ்சி மின்ன, கருப்பு உதடுக சிவந்து என்னைய விழுங்குறாப்ல துடிக்க, முன்ன மாதிரியே வெறிச்சிப் பாக்குறான் இளைஞன்.

பொன்னீலன்



எதோ சொல்ல உதடு துடிக்கிது. முடியாமத் திரும்பவும் என் தோள்ல விழுந்து என்னைக் கட்டிப்பிடிச்சி அழத் தொடங்கினான்.

பஸ்சுக்குக் காத்து நின்னவங்க, எங்களைச் சுத்திக் கூடிட்டாங்க. யாரும் எதுவும் பேசல்ல.

வலுக்கட்டாயமா அவனைப் பிடிச்சிக் கொஞ்சம் என் முன்னே நிறுத்தி, அவன் முகத்தப் பாத்து அதட்டலாகக் கேட்டேன்.

"என்ன தம்பி, ஏன் அழுறீங்க? சொல்லுங்க, நீங்க யாரு?"

உணர்ச்சி வசப்பட்டுச் சிவந்து போயிருந்த அவன் கருப்பு உதட்டுல லேசா முறுவல் பூத்த மாதிரி இருந்தது.

"சார்... ஒங்க பீடி சுப்பிரமணியன மறந்தே போனியளா? சொல்லிட்டுத் திரும்பவும் என் தோள்ல விழுந்து விம்மத் தொடங்கினான்.

"எலே, தடியா, நீயா! அதுக்காக எதுக்குடா இப்படித் திடீர்னு அழுது என்னயப் பயங்காட்டிட்ட? ராஜா, என் தங்கமே, சொல்லுடா, ஏன் இப்பிடி அழுற?" ஆறுதலுக்காக அவன் முதுகைத் தட்டிக் கொடுத்தேன்.

"சார், இன்னிக்கி நான் ஹெல்த் இன்ஸ்பெக்டரா, நல்ல நிலையில இருக்கேன். இதுக்குக் காரணம் என்ன? ஞாபகம் இருக்கா, சார்?"


"ஹெல்த் இன்ஸ்பெக்டரா? அட என் பீடித் தம்பி ஹெல்த் இன்ஸ்பெக்டரா? ரொம்ப மகிழ்ச்சி. சொல்லு, ஏன் அழுற?"

"பரிச்ச நேரத்தில படிக்கல்லன்னு என் வீட்டு முன்னால், பாறையில என்னையப் பூவரசம் மிளாறால அலற அலற ஒருநாள் அடிச்சியளே, ஞாபகம் இருக்கா?"

"எப்படி ராஜா மறக்க முடியும்?" அவனைக் கட்டி அணைச்சி, அவன் கருப்புக் கன்னத்தில அழுத்தி முத்தம் வச்சேன்.

அப்போ நான் இளம் ஆசிரியன். வயசு இருபத்திமூணு. கலியாணம் ஆகல்ல. பள்ளிக்குப் பக்கத்திலேயே வீடெடுத்துத் தங்கியிருந்தேன்.

பசங்க எப்படி எப்படி நடந்துக்கணும்னு, பள்ளிப் பாராளுமன்றத்தில விவாதிச்சி முடிவு செய்வோம். அதப் பின்பற்றுறானுகளா, இல்லையான்னு பாத்துவர அப்பப்ப போவேன்.



"சினிமா பாக்கச் சனிக்கிழமை மட்டுந்தான் அனுமதி. மற்ற நாள்கள்ல மாலை ஏழுல இருந்து ஒன்பது வரைக்கும் அவரவரும் பாடங்களப் படிக்கணும்."

இந்த விதியத்தான் பல பயலுக மீறுவானுக. யார் யார் மீறுவான்னு எனக்குத் தெரியும். சாயங்காலமா யிட்டா அந்த வீடுகளுக்குப் போவேன். அதில ஒண்ணு சுப்பிர மணியன் வீடு. பள்ளிக்கூடத்துக்குப் பின்பக்கம் பாறை மேல் இருந்தது அவன்; குடிசை. இவன் சட்டைப் பையில் எப்போதும் பீடி இருக்கிறத னால, இவனுக்குப் பேரு பீடி சுப்பிர



மணியன் என்னு பேரு. தெருக்கூட்டும் தொழிலாளர் தம்பதியோட ஒரே பிள்ளை. பாறை உச்சியில தெரு விளக்குக்கு அடியிலதான் சுப்பிரமணி யன் படிக்கணும்.

நான் அவன் வீட்டுக்குப் போனப்ப, மணி எட்டு. நாலஞ்சு பொடிப் பயலுக வட்டமா உக்கார்ந் திருக்க, நடுவுல இவன் நின்னுக்கிட்டு, ஏதோ ஒரு திரைப்படக் காட்சியத் தத்ரூபமா நடிச்சிக் காட்டிக்கிட்டி ருந்தான்.

பக்கத்தில நின்ன பூவரச மரத்தில ஒரு கிளைய ஒடிச்சி, சுப்பிரமணி யனை வாங்கு வாங்குன்னு வாங்கி னேன்.

“கண்ணு ரெண்டையும் விட் டுட்டு, மொத்தத் தோலயும் உரிச் சிருங்க சாரு. அப்பதான் உருப்படு வான்!” கொஞ்சம் தள்ளி, கூடை பின்னிக்கிட்டு உக்காந்திருந்த அவன் தாயார் என்னையப் பார்த்துச் சந்தோ சமாக் கத்தினார்.

“ராஸ்கல். ஏழுல இருந்து ஒன்பது வர ஒழுங்காப் படிக்கல்ல, கொன்னே போடுவேன்” ஒடிஞ்சிபோன குச்சியத் தூர வீசிட்டுப் பாறையைவிட்டு இறங்கினேன்.

அந்தப் பீடி சுப்பிரமணியனா இவ்வளவுக்கு வளர்ந்து முழு ஆளாகி, என்னையக் கட்டிப்பிடிச்சி அழுறான்! கொஞ்சந் தள்ளி திருமண மெருகு குலையாம மிரண்டபடி நின்னுக்கிட் டிருந்த இளம் பெண்ணக் கவனிச் சேன்.

“இவ என் பெஞ்சாதி, சார். மாவட்ட ஹெல்த் ஆபிஸ்ல கிளர்க்கா இருக்கா. இப்பதான் எங்களுக்குக் கல்யாணம் ஆச்சி.”

“அப்பிடியா, நல்லது.”


“சார், என் வளர்ச்சிக்கே அடிப் படை, அன்னிக்கிப் பாறையில என்னய உருட்டி உருட்டி அடிச் சீயளே, அந்த அடிதான் சார்! திரும்ப வும் என்னைக் கட்டிப்பிடிச்சி விம்மத் தொடங்கினான் சுப்பிரமணியன். அவன் முதுகைத் தடவி, ஆசுவாசப் படுத்தி, கணவனையும் மனைவியை யும் அருகருகே நிறுத்தி, பக்கத்து மாம் பழக் கடையில இருந்து நல்ல மாம் பழங்க ரெண்டு வாங்கிக் கொடுத்து, “நல்லா இருங்க!”ன்னு மனநிறை வோடு வாழ்த்தினேன்.

என் கண்ணைவிட்டு மறையும் வரை, அவங்க ரெண்டு பேரோட அன்புப் பார்வையும் என்னைவிட்டு விலகல்ல. ●

அறச்சீற்றம்

திருக்குறளையா தாழ்த்திப் பேசுவது?

பேரா. இரா. மதிவாணன்



திருக்குறள் – வடமொழி தரும சாத்திரங்களின் சுருக்கமா? : தமிழ் வேறெந்த மொழியின் தாக்கமும் இன்றித் தனக்கே உரிய தனித் தன்மை யோடு தனித்து இயங்கும் உயர்தனிச் செம்மொழி. மூன்று தமிழ்க் கழகங்கள் வைத்து முத்தமிழ் வளர்த்த மொழி. தமிழ் முன்னோர்களின் அற நூல்களே மிகுந்திருந்த சூழலில் வடமொழி நூல் களிலிருந்து கடன் வாங்கும் நிலை தமிழுக்கு ஏற்பட்டதில்லை.

அறிவுரை கூறியும் அதைக் கேட் காவிடில் என்ன தீங்கு நேரும் எனச் சுட்டிக்காட்டிக் கண்டிப்பது ஒரு பட்டிக்காட்டான் கூடப் பயன்படுத்தும் உத்தி. இதற்குப் போய் வடமொழி மூலத்தை எவரும் தேட மாட்டார்கள். எனவே, வட மொழியிலுள்ள உபதேச ஆதேச உத்தி களை மேற்கோள் காட்டுவது நகைப்புக்குரியது.


பிராமணர்களின் அச்சராப் பியாசம், பிரம்மசரியம், கிரகஸ்தம், வான பிரஸ்தம் முதலியவை தமிழர் களுக்கு உரியவை அல்ல. குருகுல முறை தமிழ் நாட்டில் தமிழரிடையில்

சென்ற இதழ் தொடர்ச்சி

எக்காலத்திலும் இருந்ததில்லை. திண் ணைப் பள்ளிக் கூடங்களே எங்கள் கல்வி முறை.

குறிப்பிட்ட தனித் துறையில் மேற் படிப்புக்குப் போகும்போது திருமணம் ஆன பின்னும் மூன்று ஆண்டுகள் பிரிந்து செல்லலாம் என்று தொல் காப்பியர் கூறுகிறார். குருகுல முறைப் படி, எல்லாத் துறை சார்ந்த கல்வி களையும் ஒரே ஆசிரியரிடம் கற்றுக் கொள்ள முடியாது. குருகுலம் வேத பாராயணம் செய்ய மட்டும்தான் பயன்பட்டது.

கோ என்பது மாடு. கோத்திரம் என்பது குருவின் மாட்டுப் பட்டி. வசிட்ட கோத்திரத்தான் என்றால் வசிட்ட முனிவனின் மாட்டுப்பட்டியில் வேதம் ஓதச் சென்ற மாணவன் என்று பொருள். அவர்கள் தன் தந்தைப் பெயரைப் போட்டுக் கொள்ளாமல், குருவின் பெயரையே தன் குலப் பெய ராக ஏற்றதால் வசிட்ட கோத்திரம், பிருகு கோத்திரம் என்றெல்லாம் சொல்லிக் கொள்வார்கள். எனவே தமிழ் மரபும், வேத மரபும் முற்றிலும் எதிரானவை. பிட்சாவந்தனத்துக்கும் வான்சிறப்புக்கும் முடிச்சுப் போட எப் படித்தான் மனம் வந்ததோ



திரு. நாகசாமி

தெரியவில்லை. பிச்சை எடுப்பதை வன்மையாகக் கண்டித்தவர் திருவள்ளுவர்.

பிராமணர் போற்றும் தேவர்களைக் கயவர் எனக் கீழ்மக்கள் பட்டியலில் சேர்த்தவர் திருவள்ளுவர். பிராமணனைத் தவிர எவரும் வேதம் ஓதக்கூடாது என மறைக்கப்பட்ட வடமொழிச் சூழலில் தரும சாத்திரங்களைப் பிராமணரால் பஞ்சமராகக் கருதப்படும் வள்ளுவர் குடியினர் வடமொழியில் படித்திருக்க வாய்ப்பே இல்லை. தரும சாத்திரம், அர்த்த சாத்திரம், நாட்டிய சாத்திரம், காம சூத்திரம் முதலியவை மிகப் பிற்காலத்தில் மொழி பெயர்ப்பு நூல்களாக வடமொழியில் சேர்க்கப்பட்டவை.

இருக்கு வேதம் ஒன்பதாம் மண்டலம் முழுவதும் சோம பானம் என்னும் மதுவைப் பற்றியே கூறுகிறது. கள்ளுண்ணாமையைக் கடுமையாக வலியுறுத்தும் திருக்குறளைப் படித்த யாரும் வடமொழிக்கும் திருக்குறளுக்கும் ஒப்புமை காட்ட முன்வர மாட்டார்கள்.

அந்தணர் யார் என்பது நாகசாமிக்கு அறவே தெரியவில்லை. அந்தணர் என்பது பார்ப்பனரைக் குறிப்பதாயின், இந்தியாவில் எல்லா மொழிகளிலும் பரவியிருக்க வேண்டுமல்லவா? மக்களைப் பெற்று மனையறம் காத்து மிக்க காம வேட்கை தீர்ந்தபின், தலைவனும் தலைவியும் தம் பதி நீங்கி, தொலைவில் சுற்றமொடு துறவறம் காப்பது வழக்கம் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

நூல் என்னும் ஏட்டுச் சுவடியும் கரகம் என்னும் தண்ணீர்க் குடுவையும் தவம் செய்யும்போது ஊன்றிக் கொள்வதற்கான முக்கோலும் உட்கார்ந்து கொள்வதற்காக மணையும் உடன் எடுத்துச் செல்லும் தவநிலைத் தமிழ் அந்தணர்களைத்தான் திருவள்ளுவரும் குறிப்பிட்டார்.

ஆரிய பிராமணர்களுக்கும் தமிழ் அந்தணர்க்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. பார்ப்பனரைக் குடுமித் தலையர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது. சங்க காலத்தில் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் மட்டும் தன்னை வெளிப்பட 'பார்ப்பான்' என ஒப்புக் கொண்டான். அவனைப் பின்பற்றி எல்லா பிராமணர்களும் ஏன் தம்மைப் பார்ப்பான் என்று சொல்லிக் கொள்ளவில்லை?

அந்தணர் நூல் அறு தொழிலோர் நூல் என்பதும் தவம் செய்யும் தமிழ் அறவோர் நூல்களையே குறிக்கும். 1920–இல் ஆறுமுக நயினார்பிள்ளை எழுதி வெளியிட்ட 'நற்குடி வேளாளர் வரலாறு' என்னும் இருங்கோவேள் (வடநாட்டில் இச்சுவாகு) பாண்டியர் வரலாற்று நூலில் அறுதொழிலோர் தமிழ் அந்தணர்களே எனத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். அறுவகைப்பட்ட குரவர் பக்கம் என்பதைத் தொல்காப்பியத்தில் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்று வேண்டுமென்றே திரித்து விட்டார்கள்.

பிராமணர் என்னும் பெயர் பார்ப்பனருக்கு எப்படி வந்தது என்று இன்றைய பிராமணர்களுக்குத் தெரியாது. புத்தரின் அறநூலாகிய தம்ம (தருமம்) பதத்தின் ஒன்பதாவது பிரிவுக்குப் 'பாமண வக்க' (பிராமண வர்க்க) என்று பெயர். பௌத்த முனிவர்களுக்குப் பம்மண (பிராமணர்) என்று பெயர் உண்டு. இச்சொல் பரமன் – உயர்ந்தவன் – மேலான சிந்தனையாளன் என்னும் பொருள் உடையது. சமணர்கள் இச்சொல்லைப் பரமேட்டி என்று மாற்றிக் கொண்டார்கள். பரம் – உயர்வு. பரமன் – உயர்ந்த புத்த முனிவன். இது பரமணன் என்றும், பாமன என்றும், பம்மனெ என்றும் பாலி மொழியில் திரிந்தது.

இதை ஆரியர்கள் 'பிராமண' எனத் திரித்துத் தம் சாதிப் பெயர்

ஆக்கிக் கொண்டார்கள். பிரம்மாவிட மிருந்து தோன்றியவர்கள் பிராமணர் கள் என்றால், பிரம்மாவின் உடம்பி லிருந்துதான் மற்ற வருணத்தாரும் பிறந்தனர். அதனால் எல்லோரையும் பிராமணர் என்று அழைத்திருக்க வேண்டும். இதிலிருந்து பௌத்த முனி வர்க்குரிய பெயரையே பிராமணர் எனத் தம் சாதிப் பெயர் ஆக்கிக் கொண்டார்கள் எனத் தெரிகிறது.

சொல் ஒலிப்பில் ஒற்றுமை இருப்ப தால் புத்த முனிவர்களுக்குரிய பாமண, பிராமண என்னும் சொற் களைத் தமக்குரிய சாதிப் பெயர் களாக பிராமணர்கள் மாற்றிக் கொண்ட உண்மையை நாகசாமி தலைகீழாக மாற்றுகிறார். வேத பிராமணர்கள் மீது பகைமை கொண் டிருந்த புத்தரை பிராமணர் மீது அன்பு கொண்டவர் என்று தலைகீழ் தகிடுதத்தம் செய்கிறார்.

புத்தர் வரலாறுகளில் வேத பிராமணர் ஒருவர் புத்தரை ஒருமை யில் பேசி சத்திரியர்களைவிட வேத பிராமணர்கள் உயர்ந்தவர்கள் என் றார். புத்தரும் அந்த வேத பிராம ணரை ஒருமையில் பேசி, வேத பிரா மணர்களைவிட சத்திரியர்கள்தான் உயர்ந்தவர்கள் என வாதம் செய்தார். இந்த உண்மைகளையெல்லாம் மூடி மறைக்கப் பௌத்த முனிவர்களுக்கு உரிய பிராமணர் பெயரைத் தம் சாதிப் பெயராக வேத ஆரியர்கள் மாற்றிக் கொண்டனர்.

எவன் எந்த உயிரையும் கொல் வதில்லையோ அல்லது கொல்விப்ப தில்லையோ அவன்தான் பாமண என்னும் பௌத்த முனிவன் என்று தம்ம பதத்தில் புத்தர் கூறியிருக்கிறார். வேத ஆரியர்கள் ஆடு, மாடு, குதிரை முதலியவற்றை வேள்வித் தீயிலிட்டு உயிர்க்கொலை செய்வது தவறு என்ப தைத்தான் தம்ம பதத்திலுள்ள ஒன்ப தாம் பிரிவாகிய பாமண வக்கம் குறிப் பிடுகிறது. இதைத் தலைகீழாக மாற் றித் தம் மனச்சான்றைத் தொலைத்து விட்டு, உண்மை வரலாற்றை இருட் டடிப்புச் செய்யும் பணியில் நாகசாமி ஈடுபட்டிருக்கிறார்,

பார்ப்பனருக்குப் பலசாதிப் பெயர்கள் இருப்பது ஏன்? : இந்தியா முழுவதிலும் ஒரு சாதிக்கு ஒரு பெயர் தான் இருக்கிறது. தச்சனும் கொல் லனும் தமக்கு வெவ்வேறு சாதிப் பெயர்களை வைத்துக் கொள்வ தில்லை. இந்தியா முழுவதிலுமுள்ள பார்ப்பனர்கள் ஏன் ஒரே சாதிப் பெயரை வைத்துக் கொள்ளவில்லை?

எந்தெந்த மாநிலத்தில் யார்யார் சற்று உயர்நிலையில் இருக்கிறார் களோ அந்தச் சாதிப் பெயரையே தமக்குரிய சாதிப் பெயராக ஏற்றுக் கொள்வது ஏன்? சர்மா, சாஸ்திரி, சட்டர்ஜி போன்று பலவகைப் பெயர் களை வடநாட்டில் வைத்துக் கொண் டிருக்கிறார்கள். இவற்றுள் உசேன் பிராமணர் என்பதும் ஒன்று.

இலங்கைக்குச் சென்ற பார்ப்பனர் கள் தம்மை முதலிகள் என்றனர். திருநெல்வேலிக்கு வந்த போது தம் மைப் பிள்ளைமார் என்றனர். பெரிய வாச்சான் பிள்ளை என்பவர் பார்ப் பனர் என்று எல்லோருக்கும் தெரியும்.

சமணர்க்கே உரிய ஐயர் என்ற பெயரையும் இதன் தெலுங்குத் திரி பான ஐயா+அவர் ஐயவாரு, ஐயங்கார் என்னும் பெயரையும் தவ நெறி மேற்கொண்ட தமிழர்க்கே உரிய அந்தணர் பெயரையும் தமக்குரிய சாதிப் பெயர்களாக மாற்றிக் கொண் டனர். தென்னாட்டில் மட்டும் நான்கு திராவிட மொழிகளிலும் வேத நெறி யாளர்களைப் பார்ப்பனர் என்னும் ஒரே பெயரால் குறிப்பிட்டனர்.

ஆரியப் பார்ப்பனரும் வேளா பார்ப்பனரும் : வேத ஆரியர் பிறப் பால் உயர்ந்தவர்களாகக் காட்டுவதற் குத் தம்மை இருபிறப்பாளர் – த்விஜ என அழைத்துக் கொண்டனர். ஆரி யப் பிறப்பும் பூணூல் அணிந்தபின் செவி வழி வேதப் படிப்பும் அவர் களை இரு பிறப்பாளர் ஆக்கியது. இந்த இரண்டோடு எழுத்தறிவும் கல்வியும் கூடுதலாகப் பெற்றிருந்த திராவிடர்கள், ஆரியரைவிட உயர்ந்த

முப்பிறப்பாளர்கள் என்று சொல்லிக் கொண்டால் அதில் தவறில்லை.

ஆனால் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றும் அனைத்து மக்களும் உயர்திணை என்றும் உயர்ந்த சிந்தனையை உலகில் வளர்த்துக் கொண்ட இனம் தமிழினம் ஒன்றே. அதனால் தம்மை முப்பிறப்பாளர் எனச் சொல்லிக் கொள்ள வாய்ப்பிருந்தும், அவ்வாறு தம்மை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை.

ஆரியர்களுக்கு உரியது வெள்ளை நிறம். காவி நிறத் தலைமுடி, நீலநிறக் கண்கள், பழுப்பு நிறப் பற்கள். இவை இன்றைய பார்ப்பனர்களில் நூற்றில் தொண்ணூற்றைந்து பேர்களிடம் இல்லாமல் போனது ஏன்? இனக் கலப்பு என்கின்றனர்.

வேத ஆரியர்களில் இனக் கலப்புள்ளவர்கள் விராத்திய பிராமணர்கள் எனப்பட்டனர். வடமொழி ஓதும் வாய்ப்புக் கிடைத்தாலும் வேள்வி செய்யும் தகுதி இவர்களுக்கு இல்லை. இவர்களைத் தமிழிலக்கியம் வேளாப் பார்ப்பனர் (வேள்வி செய்யாதவர்) என்று அழைத்தது. இரண்டாம் தரப் பார்ப்பனர்களாக ஒதுக்கப்பட்ட இவர்கள் வணிகர்களோடு இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சென்றார்கள். அதனால் த்விஜ என்பதோடு 'விப்பிரர்' என்னும் சாதிப் பெயரும் இவர்களுக்கு உரியதாயிற்று.

'விப்ரே' என்னும் சொல்லுக்குப் பல இடங்களுக்குப் பிரிந்து செல்பவர் என்று பொருள். உடல் தோற்றத்தாலும் பேசும் தாய்மொழியாலும் ஆரியப் பாங்குகள் முற்றிலும் மறைந்துவிட்டன. என்றாலும் தம் முன்னோர் மொழி வேத மொழி என்பதால் அதைப் போற்றி வருகின்றனர். தம்மை வங்காளியர், தெலுங்கர் என மொழியாலும் அடையாளப்படுத்திக் கொள்ள முடியவில்லை. சைவர், வைணவர் என மதத்தாலும் அடையாளப் படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஆற்றில் ஒரு காலும் சேற்றில் ஒரு காலும் வைத்திருப்பது போல் வேத நெறியில் ஒரு பக்கமும் வாழும் மாநிலத்துப் பண்பாட்டில் ஒரு பக்கமும் என இரு பக்கங்களிலும் சாய்ந்தாடி வருகின்றனர். தேசிய நீரோட்டத்தில் சேராமல் பூணூல் அணிந்து தம்மை மற்ற இந்துக்களைவிட, தனித்த பிரிவாகக் காட்டிக் கொள்வது நாட்டின் ஒருமைப் பாட்டுக்கும் வலுவான ஒற்றுமைக்கும் வழிகோலுமா என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விருந்தோம்பும் பண்பு கொண்ட தமிழர்கள் வந்தவர்களை வாழ்விக்கும் நோக்கம் உடையவர்கள். வேள்வி மூலம் வாழ்க்கை தொடங்கி, அது அனைவர்க்கும் முழுமையான சம வாய்ப்புத் தராத நிலையில் கோட்டை கட்டும் நாகரிகம் உடைய தமிழர்களைக் கோயில் கட்டும் நாகரிகம் உடையவர்களாக மாற்றினார்கள். இதனால் என்றும் நிலைத்த, எப்பொழுதும் அற்றுப் போகாத நிலையான வருமானமும் அருமையான இன்ப வாழ்வும் அவர்களுக்குக் கிடைத்தன.

போர்க்களத்தில் குருதி சிந்தி உயிர் கொடுத்த தமிழ்ப் போர்வீரனுக்கு கள்ளி, முள்ளி, காட்டாமணக்குச் செடிகள் நிறைந்த மேட்டு நிலத்தை உதிரப்பட்டி என்னும் பெயரில் தென்னாட்டு மன்னர்கள் கொடை அளித்தார்கள். ஆனால் பார்ப்பனர்க்கு மட்டும் நாடெங்கும் உள்ள ஆற்றோரங்களில் நெல்லும் கரும்பும் விளையும் ஆயிரக் கணக்கான நிலங்களை அள்ளிக் கொடுத்தார்கள். இது கடவுளுக்கே பொறுக்கவில்லை. வந்தவர்களை வாழ வைத்துச் சொந்த மக்களை வாட வைத்த கொடுமைக்காகத் தென்னாட்டு அரச மரபுகள் அடியோடு பூண்டற்றுப் போயின.

தமக்கு நிலையான நல்வாழ் வளித்த தமிழர்களுக்கும், தமிழுக்கும் நன்றி செலுத்தப் பார்ப்பனர் அனைவரும் கடமைப் பட்டிருக்கிறார்கள். இந்நிலையில், நாகசாமி ஒருவர் மட்டும் தமிழுக்கு நன்றி கெட்டவராக மாறலாமா? அமைதிப் பூங்காவான இந்தியாவில் சாதி மேம்பாட்டு நச்சு விதைகளைத் தூவலாமா?

(மீதி அடுத்த இதழில்)

அறச்சீற்றம்

கண்ணிரண்டும் விற்று...




முனைவர்
சொ. சாந்தலிங்கம்

1. முன்னுரையில் அவர் கூறுவது, திருவள்ளுவர் புதிய புரட்சிகரமான கோணத்தில் தர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ் திரம், நாட்டிய சாஸ்திரம், காம சாஸ்திரம் ஆகிய இந்து வேத மரபின் நூல் களை மேற்கோள் காட்டி ஆய்வு செய்யப்படுகிறார்.

2. வள்ளுவர் தனது நூலை நால் வருண முறையை அடிப்படையாக வைத்துப் போற்றுகிறார்.

3. பிராமணர்களை வள்ளுவர் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றுகிறார்.



நமது விடை : திருவள்ளுவரை திரு. நாகசாமி அவர்கள் புரட்சிகரமான கோணத்தில் அணுகுகிறாராம். இந்து வேத மரபின் நூல் களான தர்மசாஸ் திரம், அர்த்த சாஸ்திரம், நாட்டிய சாஸ் திரம், காம சாஸ்திரம் ஆகிய நூல்களை மேற்கோள் காட்டி ஆராய்கிறாராம். வள்ளுவர் தனது நூலை நால் வருண முறையை அடிப்படையாக வைத்தே எழுதியுள்ளார் என்பது நாகசாமியின் முன்னுரையிலேயே சொல்லப்பட் டுள்ளது. இந்தக் கருத்துக்கு நாம் அதிகமான சிரமம் எடுத்து விடை யளிக்க வேண்டிய தேவையே இல்லை.

“வள்ளுவர் செய் திருக்குறளை மருவற
நன்குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி”

என்று மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை கூறுகிறார்.

இதன் மூலம் இப்பாடலை எழுதிய ஆசிரியர் வள்ளுவரை மனு வின் நூல் வழி எழுதியவராகக் கருத வில்லை என்பது வெளிப்படை. மனுவின் நூல் மனித குலத்திற்கு உட் பட்ட பொதுவான நூல் அல்ல. ஒரு குலத்திற்கு ஒரு நீதியைக் கற்பிக்கும் பாரபட்சமான நூல் என்பது விளங் கும். இதன் மூலம் நாகசாமி குறளை மருவற உணரவில்லை என்பது விளங்கும்.

வள்ளுவர் நால் வருண முறையை ஏற்றுக் கொண்டவர், வேத நெறி முறைப்படி நூல் எழுதியவர் என்றால், ரிக் வேதத்தின் ஒரு பகுதியான புருச

சூக்தத்தில்தானே நால்வருணம் பேசப் படுகிறது. பிரம்மனின் முகம், மார்பு, தொடை, கால் வழியாக பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் பிறந் தனர் என்கிறது. இதனைத் திரு வள்ளுவர் ஏற்றுக்கொண்டா நூல் எழுதினார்? இந்த உங்கள் சொத்தை வாதத்திற்கு ஒற்றைக் குறளில் திரு வள்ளுவர் சம்மட்டி அடி கொடுத் துள்ளார்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்"

(குறள் 972).

இந்த ஒரு குறள் போதும், உங்கள் நூல் நீங்கள் முட்டி மோதித் திணிக்க நினைக்கும் கருத்துக்கு வள்ளுவர் கொடுத்த விடை. ஆனால், எத் தனையோ குறட்பாக்களை உங்கள் நூலில் எடுத்தாண்டுள்ள உங்களுக்கு இந்தக் குறள் மட்டும் கண்ணில் பட வில்லையா? பட்டிருக்கும். அதைப் பயன்படுத்தினால் இந்த நூலுக்கு வேலை இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, அந்தக் குறளை எடுத்தாளவில்லை. அது உங்களுக்கே உள்ள தந்திரம். எப்போதுமே உங்கள் ஆய்வில் நேர்மை இராது என்பது தமிழ்நாட்டார் அனைவரும் அறிந் ததே. அதே நிலையைத்தான் இந்த நூலிலும் காண்கிறோம்.

மற்றொரு குறிப்பு, வள்ளுவர் வேத மரபை அப்படியே மெய்யாக ஏற்றுக் கொண்டவர் என்பதாகும் (பக். 26). அவ்வாறெனில் வேத வழிப்பட்ட சடங்குகளை, உங்கள் கூற்றுப்படியே யாகங்களை ஏற்றுக் கொண்டவர் என் றால், நீங்களே உங்கள் நூல் எடுத் தாண்டுள்ள இன்னொரு குறள் இதோ...

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டல் ஒன்றன்

உயிர்செகுத்து உண்ணாமை நன்று

(குறள் 259).

இக்குறளின் பொருள் என்ன? வேள்விகளை வள்ளுவர் ஏற்றுக் கொண்டவரா, நிராகரித்தவரா? இது இந்து மதக் கருத்தா, சமண மதக் கருத்தா? திருக்குறள் சமண நூல் என் பதற்கு எவ்விதச் சான்றும் இல்லை (ப. 204) என்று கூறும் தங்கள் ஆய் வில் மேற்சுட்டிய குறள் பட வில்லையா? அல்லது கொல்லாமை என்னும் ஓர் அதிகாரத்தையே மறந்து விட்டீர்களா?

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா உயிரும் தொழும்"

(குறள் 260)

என்றாரே வள்ளுவர், இது சமணக் கொள்கை இல்லையா? ஆயிரக் கணக்கான ஆடுகளையும் மாடுகளை யும் வேத வேள்வியில் கொன்று குவித்த அந்த ஐந்து அறத்தை, நெறியை, யாக மரபை வள்ளுவர் ஏற்றுக் கொண்டாரா?

வள்ளுவரின் முதல் குறள்,

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு"

என்பது. இதுகூடத் தொல்காப்பியரி டமிருந்து வள்ளுவர் எடுத்தாண்டது எனக் கருதலாம். அவர்தான் 'எழுத் தெனப்படுவ அகர முதல' என்றார். ஆனால், தொல்காப்பியமே உங்கள் கூற்றுப்படி வடமொழியின் வழி நூலாகி விட்டதே. ஆனால், ஒரு விளக்கம் கொடுத்துள்ளீர்களே, மகா அற்புதம்!

'அகர முதல' என்பது வட மொழியில் 'அக்சராப்யாசமாம்'. எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பு!

தொல்காப்பியம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்கள் பரதரின் நாட்டிய சாஸ்திரத்திலிருந்து வந்தவை. திருக் குறளும் இவ்வகையில் வடமொழியின் வழிநூலே. திருவள்ளுவரின் காலத்தை

கி.மு. முதல் நூற்றாண்டு அல்லது கி.பி. 2–ஆம் நூற்றாண்டுக் காலத் திற்குள் அடக்கலாம் (ப. 25). ஆனால், வேத உபநிசத்துக்கள் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. மனுவின் நூல் காலத்தால் மிக முற் பட்டது. வேதகாலத்திற்குச் சம மானது (ப. 28).

நமது விடை : தொல்லியல் அறிஞர் உரிய சான்றுகளோடு எழுது வார் என்று நினைத்தோம். ஆனால், எல்லாம் யூகத்திலேயே எழுதுகிறார். 5000 ஆண்டுகளுக்கு முன் வேதங்கள் எந்த மொழியில் பாடப்பட்டன?

அப்போது சமஸ்கிருதம் இருந் ததா? சமஸ்கிருதம் எப்போது உரு வானது? எங்கிருந்து அதற்குரிய எழுத் துக்களைப் பெற்றது?

ஐந்தாயிரம் ஆண்டுகளாக ஒலிக் குறிப்புகளையே பரம்பரையாக ஓதி வந்தவர்கள் திடீரென்று சமஸ்கிருதச் சொற்களுக்கு எப்போது, எப்படி மாறினர்?

பிராகிருதம், பாலி, அர்த்தமாகதி முதலிய பல மொழிகள் எங்கிருந்து எழுத்துகளைப் பெற்றன? அவற் றிற்குப் பிந்தியதா, முந்தியதா சமஸ் கிருதம்? இவற்றுக்கெல்லாம் விடை யிருக்கிறதா உங்களிடம்?

மனு ஆதியானவர் என்கிறீர்கள். ஆனால், தமிழக வரலாற்றறிஞர் கே.கே. பிள்ளை, 14 மனுக்கள் வாழ்ந்த தாகவும், அதில் கடைசியானவர் கி.பி. 2–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்றும் கூறுகிறாரே? உங்கள் கருத்து என்ன? நீங்கள் சொல்லும் மனுதர்ம சாஸ்திரத்தின் காலம் என்ன? அதை வள்ளுவர் எவ்வாறு வடமொழியில் படித்தார்?

இவ்வாறு கேட்டால் நீங்கள் வள்ளுவரின் தந்தை ஒரு பிராமணன் என்பீர்கள். ஐயா, அது வெறும் பழங் கதை. வரலாறு எழுதுவதற்குப் பழங்கதை பயன்படாது என்பது உங் களுக்குத் தெரியும். அறிவியல் பூர்வ மான ஆய்வியல் அணுகுமுறையை நீங்கள் கையாண்டால் வருணப் பிறப்பையே கேலிக்குரியதாக நீங்கள் கொள்வீர்கள்.

அந்தணர் யார்? பிராமணர் யார்?

அறவாழி அந்தணன் என்னும் சொல் சக்கரம் ஏந்திய விஷ்ணுவைக் குறிக்கும். இவ்வந்தணன் என்பவன் பிராமணனே. அவன் கால் அடைக் கலம் ஆவதே பிறவிக் கடலைக் கடக்கும் வழி என்று கூறுகிறீர்கள் (ப. 9). சக்கரம் ஏந்தியவன் எல்லாம் விஷ்ணு அல்ல. அசோகன், புத்தரின் தர்மச் சக்கரத்தையே வடித்து வைத் தான். இன்னொரு புதுமையான வாதம், அந்தணன் என்றால் பிரா மணன் என்பது. எல்லா அந்தணர் களும் பிராமணர்கள் அல்ல என்பது திருவள்ளுவரின் கூற்று. அதனால் தான்,

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்”

(குறள் 30)

என்றார் வள்ளுவர்.

பிராமணர் என்றாலும், அந்தணர் என்றாலும் ஒன்றுதான். இவர்கள் இரு பிரிவினரும் இந்துக்கள்தான் என்பது நாகசாமியின் கருத்து. மேலும், சமஸ் கிருதம் பேசுபவர்கள் எல்லாம் இந்துக் கள். பிராமணர்கள் சமண, பௌத்த, ஆசிவக சமயத்தினர். வேதநெறிப் படியே வாழ்ந்தனர் (ப. 26). இப்படி எல்லோரையும் பொதுமைப்படுத்தி அனைவரும் பிராமணர்களே, இந்துக் களே என்பது அவரது கருத்து.

அது எப்படிப் பொருந்தும்? இன்றும் லட்சக்கணக்கான சமண சமூகத்தினர் சமஸ்கிருத மொழியில் தங்கள் மதச் சடங்குகளைச் செய் கின்றனர். அவர்களுடைய புரோகி

தர்களை உபாத்யாயர் என்கின்றனர். அவர்கள் எல்லாம் இந்துக்களா? அவர்களுக்கென்று தனி வாழ்க்கை நெறியைக் கொண்டிருக்கிறார்களா? அதற்கு என்ன பொருள்?

எத்தனையோ பிராமணர்கள் இந்து மதத்தின் மொழி, இன மேலாதிக்கத்தை உடைத்து வெளியே வந்துள்ளார்களே. நீங்கள் அறியாததா? 12–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வாழ்ந்த 'பசவண்ணா' என்னும் பிராமணன் உங்கள் இந்து தர்மத்தின் அதர்மங்களைக் கண்டு வெகுண்டு மக்கள் மொழியில் பேசு, சாமான்யனைச் சகோதரனாகக் கருது, பெண்களுக்கு முக்கிய இடம் கொடு என்று போர்க்குரல் கொடுத்து வீர சைவம் என்னும் புதிய மார்க்கம் கண்டானே, மறக்க முடியுமா?

அதே காலத்தில் உங்கள் இராமானுஜர் சாத்தாத வைணவர் என்று உழைக்கும் மக்களைக் கோயில் பணிக்கு ஈடுபடுத்திப் புரட்சி செய்து உங்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டவர்தானே? இவர்களுக்கெல்லாம் முன்பாகவே இந்து தர்மத்தை, சாஸ்திரத்தை, வேத வேள்வியை எதிர்த்துக் கலகம் செய்தவர் திருவள்ளுவர்.

மனுவின் நூல் விருப்பு வெறுப் பற்ற நியாயமான நூல். ஆனால், கொள்கையற்ற அரசியல்வாதிகளால் அது திரித்துக் கூறப்படுகிறது (ப. 32). சாதிய அமைப்பு தற்காலத்தில் பலர் குற்றம் சாட்டுவதுபோல் பிராமணர்களால் உருவாக்கப்பட்டதல்ல. தொழில் அடிப்படையில் நெடுங் காலத்திற்கு முன்னரே ஏற்பட்டதே சாதிய முறை (ப. 33).

நமது விடை : இதை ஏற்படுத்தியவர்கள் யார் என்பதைத்தான் நாங்கள் கேட்கிறோம். மனுவின் நூல்தானே பிராமணன் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவன் என்றது. ஓதலும் ஓதுவித்தலும் அவனது தொழில் என்றது. சூத்திரனும் பெண்களும் வேத ஒலிகளைக் கேட்டால் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றச் சொன்னது? நாலாம் வர்ணத்தவனைச் சூத்திரன் என்றும், பஞ்சமன் என்றும் பாகுபடுத்தியது யார்?

ஆனால், மனு வகுத்த பிராமணர்க்குரிய நியதிகளைப் பிராமணர்கள் என்று கூறிக்கொண்ட வைதீக பிராமணர்களே பின்பற்றவில்லையே? வரலாறு நெடுகிலும் பிராமண வாழ்வியல் முறை முறியடிக்கப்பட்டுள்ளதே. தெரியாதா? சத்திய வேலை முறை என்று உங்களால் பாகுபடுத்தப்பட்ட போர் முறையில் பிராமணர்கள் நுழைந்தது எப்படி? கேட்டால், அது தனுர் வேதம் என்பீர்கள்.

துரோணர் கேவலமான வழியில் பாரத்வாசனுக்குப் பிறந்தவர் (சான்று : பல்லவர் செப்பேடு). போர்க்கலை கற்று மனுவின் நீதியை முறியடித்தவர். பிரம்மச் சத்திரியர் என்று கலப்புப் பெயர் வேறு. அதே வழியில் பல்லவன் முதலாம் நரசிம்மன் காலத்தில் போர்ப்படைத் தளபதி சிறுத்தொண்டன் என்ற பரஞ்சோதி ஒரு பிராமணன்தானே.

இராசராசனின் தளபதி கிருஷ்ணன் ராமனான மும்முடிச் சோழ பிரம்மராயன் இவர்களெல்லாம் மனு நெறிப்படி வாழ்ந்து பிராமணியத்தைக் காப்பாற்றியவர்களா?

திருச்சுழியிலே பாண்டியர் காலத்தில் ஒரு பிராமணன் வணிகம் செய்துள்ளதாகச் சான்று உள்ளது. மனுவும், அவன் சாஸ்திரமும், நியதியும் என்றோ பிராமணர்களாலேயே அழித்தொழிக்கப்பட்டு விட்டதே.

(புதிய செப்பேடு – சித்திரை 2018.

மீதி அடுத்த இதழில்)

முனைவர் நாகசாமி கட்டுரை



எஸ். ஸ்ரீதுரை

அறச்சீற்றத்திற்கு எதிர்ச்சீற்றம்...

'ஓம் சக்தி' ஆகஸ்ட் இதழில், தொல்லியல் துறை முன்னாள் இயக்குனர் முனைவர் இரா. நாகசாமியின் கூற்றுக்கு ஆற்றப்பட்டுள்ள எதிர் வினைகளைக் கண்டேன்.

எடுத்த எடுப்பிலேயே, திரு. நாகசாமி அவர்கள் தமிழுக்குத் துரோகத்தையும், தமிழினத்திற்கு வஞ்சகத்தையும், தமிழ்ப் பண்பாட்டிற்கு இழிவையும் ஏற்படுத்தி விட்டதாக 'ஓம் சக்தி' இணையாசிரியரே முரசறைந்துவிட்ட நிலையில், முன்னோரின் வழியே மூன்று பின்னோர்களும் சென்றிருக்கின்றன.

வடமொழி வேதத்தின் மீதுள்ள வெறுப்பு, பிராமணர்களிடம் (சென்ற நூற்றாண்டில் விதைக்கப்பட்ட) காழ்ப்புணர்வு ஆகியவற்றின் பின்புலத்தில் ஆற்றப்பட்ட எதிர்வினைகள் எதிர்பார்க்கக் கூடிய தடத்திலேயே பயணித்திருக்கின்றன.

அப்படியொன்றும் பிராமணர்கள் மீது வெறுப்பில்லை என்பதைக் காட்டிக் கொள்வதற்காக சூரியநாராயண சாஸ்திரியாரும், சேஷ ஐயங்காரும் தொட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

பிராமணர்கள் காலம் காலமாக ஏய்த்துப் பிழைத்தவர்கள், அண்டிக்கெடுத்தவர்கள் என்று கடந்த நூற்றாண்டில் தங்கள் சிந்தனையில் ஏற்றி வைக்கப்பட்ட சுமையை இன்றுவரை இறக்கிவைக்க மறுப்பவர்களிடம் வேறு எதையும் எதிர்பார்க்க இயலாதுதான்.

திரு. நாகசாமி அப்படி என்னதான் சொல்லி விட்டார்...?

திருக்குறள் ஒரு நூலே அன்று; திருவள்ளுவருக்குத் தமிழ் தெரியாது; திருக்குறள் மக்களுக்குத் தவறான வழிகாட்டுகிறது. இப்படி எதையாவது சொல்லிவிட்டாரா? அல்லது, திரு. தெய்வநாயகம் என்ற கிறிஸ்தவர் பரப்புரை செய்ததைப் போன்று, இயேசுவின் சீடர் புனித தோமையார் தமிழகம் வந்தபோது, திருவள்ளுவர் அவருக்குச் சீடராகி, இயேசுவின் உபதேசங்களைக் கற்றுணர்ந்து, அதன் வழியிலேயே திருக்குறளை இயற்றினார் என்று சாதித்தாரா...? (திருவள்ளுவர் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கும் முன்பே அவதரித்தவர் என்பது உண்மை தானே).

வேதத்தின் சாரத்தைத் திருக்குறள் தன்னகத்தே கொண்டிருக்கின்றது என்று கூறுவதில் திருக்குறளுக்கு என்ன இழிவு வந்துவிடப் போகிறது?

திருக்குறளைச் சைவ நூல் என்றும், வைணவ நூல் என்றும், சமண நூல் என்றும், பௌத்த நூல் என்றும் அந்தந்த மதத்தினர் கொண்டாடுகின்றனர். (மேலே பார்த்தபடி) கிறிஸ்தவமும்கூடச் சொந்தம் கொண்டாடுகின்றது. இவற்றில் சைவமும், வைணவமும் வேதத்தை ஏற்றுக் கொண்ட வைதிக மதங்கள். சமணமும் பௌத்தமும் (வேதத்தை ஏற்காத) அவைதிக மதங்கள்.

இவற்றில் எந்த மதமும் மனிதனைக் கெட்டுச் சீரழிந்து போகச் சொல்லவில்லையே?

ஸத்யம் வத, தர்மம் சர! (உண்மையைப் பேசு, அறவழியில் நட) என்ற வேதக் கட்டளைகள் தீயவற்றையா கற்றுக் கொடுக்கின்றன?

இதைப் போன்ற நன்னெறிகளின் சாரம் திருக்குறளில் இருக்கிறது என்றால் அது திருக்குறளுக்குப் பெருமைதானே.

கடவுள் வாழ்த்து அதிகாரம் ஒன்று போதுமே... திருக்குறளில் வேதத்தின் சாரம் இருக்கிறது என்பதற்கு.

"கோளில் பொறியில் குணமிலவே
எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (திரு.9)

என்ற குறட்பாவில் உள்ள எண்குணங்கள் சிவாகமத்தில் கூறப்பட்டிருக்கும் எண்வகைச் சித்திகளாகும் என்று உரை பகர்ந்த பரிமேலழகரை

இவர்கள் எப்படி மறுக்கப் போகின்றார்கள்...? (திருக்குறள் பாயிரவியல் பரிமேலழகர் உரை பக்கம் 15)

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்

நின்றது மன்னவன் கோல்" (திரு.543)

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்

காவலன் காவான் எனின்" (திரு. 560)

என்ற இரண்டு குறட்பாக்களும் வேதத்தினை விதந்தோதவில்லையா?

"மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்

தாளுளாள் தாமரையி னாள்" (திரு. 617)

என்ற திருக்குறள், ஸ்ரீசூக்தத்தில் வழிபடப்படும் ஸ்ரீமஹாலட்சுமியைப் போற்றவில்லையா?

ரிக்வேதத்தில் உள்ள ஹிரண்யகர்ப்ப சூக்தம் (ரிக்வேதம் 10.8.121), ''இறைவனே முதலில் இருந்தார், அவ்வண்ணம் முதலில் தோன்றியவராகிய அந்த இறைவனே உயிர்களின் தலைவராக உள்ளார்'' என்று கூறுகின்றது. இக்கருத்து, ''ஆதி பகவன் முதற்றே உலகு'' என்பதில் இருக்கிறதா இல்லையா?

இந்நிலையில், வைதிக மதங்களாகிய சைவமும் வைணவமும் திருக்குறள் தங்களது நெறிகளின் சாரத்தை உள்ளடக்கியிருக்கிறது என்று சொல்வதற்குத் திருக்குறள் ஆர்வலர்கள் பெருமை அல்லவா பட வேண்டும்.

வால்மீகி ராமாயணத்தைத் தழுவியது என்ற காரணத்தினால் கம்பராமாயணத்தின் பெருமைக்கு ஏதேனும் குறைவு இருக்கிறதா? கம்பருக்குக் கம்பநாட்டாழ்வார் என்று மரியாதை அல்லவோ செய்கிறது ஆன்மீக உலகு?

ஓர் உயர்ந்த நூல் என்பது பல்வகையான உயர்ந்த கருத்துகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும். பல்வேறு உயர்ந்த நூல்களின் கருத்தை அந்த நூல் பிரதிபலிக்கும்; அவ்வாறே அந்நூலிலுள்ள கருத்துக்களைப் பிற்காலத்தில் வேறு சில நல்ல நூல்கள் பிரதிபலிக்கும்.

உயர்ந்தோரின் சிந்தனை ஒரே மாதிரி இருக்கும் (Great men think alike) என்ற பழமொழியினைச் சற்று உள்ளுணர்ந்து பார்த்தால், வேதத்தின் சாரம் திருக்குறளில் உள்ளது என்பது திருவள்ளுவருக்கு எத்தகைய பெருமையைச் சேர்க்கும் விஷயம் என்பது புரிந்துவிடும்.

வேதங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமார் ஐந்நூறு வேத வாக்கியங்களைக் கொண்டே பிரும்ம சூத்திரம் உருவாக்கப்பட்டது.

இருப்பதோ ஒரே ஒரு பிரும்ம சூத்திரம். அதிலிருந்துதான் பேத சுருதி (துவைதம்), அபேத சுருதி (அத்துவைதம்), கடக சுருதி (விசிஷ்டாத்துவைதம்) ஆகிய முப்பெரும் தத்துவங்கள் மத்வர், ஆதிசங்கரர், இராமானுஜர் ஆகிய முப்பெரும் குருமார்களால் கடைந்தெடுக்கப்பட்டன. இதனால், பிரும்ம சூத்திரத்திற்குப் பெருமைதானே யன்றிச் சிறுமை ஏதும் இல்லை.

அதே போலவே, திருக்குறளில் இந்துமதம் பின்பற்றும் வேதத்தின் சாரம் மட்டுமின்றி, சமணம் மற்றும் பௌத்த மதங்களின் தத்துவங்களும் பொதிந்திருக்கின்றன என்று கூறும்போது அதைத் திருக்குறளின் பெருமையைக் கூறுவதாக எடுத்துக் கொள்ளாமல், வெகுண்டெழுவது எந்த விதத்தில் நியாயம்.

"குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்

மிகைநாடி மிக்க கொளல்" (திரு.504)

என்பது திருவள்ளுவரின் கூற்று.

திரு. நாகசாமி அவர்கள் கூறியதைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து ஏற்புடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளலே நல்லது.

திரு. நாகசாமி அவர்களின் கூற்று குறித்த மின்னணு ஊடக வினையாடல்கள் சிலவற்றை நான் படித்தவரையில், தாம் நிறுவ முயன்றதை ருசுப்படுத்தும் உற்சாகத்தில், அன்னார் சில வரையறைகளைத் தாண்டியும் சென்றிருக்கிறார் என்பதை அறிய முடிகின்றது. அத்தகைய முயற்சிகள் எதிர்மறைப் பயனையே கொடுக்கும் என்பதையும் கூறத்தான் வேண்டும்.

நான் பார்த்த வரையில், திரு. நாகசாமி அவர்களுக்கு மின்னணு ஊடகத்தில் எதிர்வினையாற்றியவர்களில், தேவப்பிரியா என்பவர் காய்தல் உவத்தல் இன்றி செயல்பட்டிருப்பதை உணர முடிகின்றது. அவரது விளக்கத்தைக் கணினியில் http://thamilkalanjiyam.blogspot.com/2018/02/blog-post_39.html என்ற தளத்தில் படிக்கலாம்.

'ஓம் சக்தி' இதழில் வந்துள்ள எதிர்வினைகளைப் பொறுத்த வரையில், பேரா. இரா.

மதிவாணன் அவர்கள் பிராமண இனத்தை நடு வீதிக்குக் கொண்டு வருவதில் பெரிதும் முனைந் திருக்கிறார். இவரது எதிர்வினையில் ('ஓம் சக்தி' ஆகஸ்ட் 2018, பக்கம் 45) வேத ஆரியர் வரலாறு வேதம் வந்தது எப்படி? என்ற கேள்விக்கான விடையாக வரும் பத்தியின் இறுதியில் இதுவே வேள்வியாக மாறியது. இதனை ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் மேனாட்டு அம்மையார் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார் என்று எழுதியிருப்பதை அறிவுலகத்தினர் எப்படி ஏற்பார்கள் என்பது அன் னாருக்கே வெளிச்சம். முகவரியில்லாத ஒரு மேற்கோளைக் காட்டுவது அந்தணர்கள் மற்றும் வேதத்தின் மேற்கொண்ட காழ்ப்புணர்ச்சியையே வெளிப்படுத்தும் என்று பேராசிரியருக்குப் புரியா மல் போனது எவ்வாறு?

முனைவர் சொ. சாந்தலிங்கம் அவர்கள் அடுத்த இதழிலும் ஏதோ கூற இருக்கிறார்.

நாடறிந்த தமிழறிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்கள் இரண்டு குறட் பாக்களைக் கூறி இவை வேதத்தினின்று வந்தனவா என்று கேட்டிருக்கிறார். அவை வேதத்தினின்று வராமலிருக்கலாம். ஆனால், இதே கட்டுரையில் மேற்கோளாகக் கொடுக்கப் பட்டிருக்கும் குறட்பாக்கள் வேறு எதனை அடிப் படையாகக் கொண்டவை என்று அன்னார் கூறட்டும்.

நான் ஒரு தமிழ் பேசும் அந்தணன். தமிழ் எனது தாய்மொழி என்ற உரிமையில் ஓர் உண்மை யைக் கூறுகின்றேன்.

தமிழ் பேசும் அந்தண குலத்தோரிடையே ஏதோ தமிழ் விரோதப் போக்கு இருப்பதாகக் கருதுவோருக்கு எனது அழுத்தந்திருத்தமான பதில் அப்படி எதுவும் இல்லை! என்பதே. தமிழ் ஒரு நீச பாஷை என்று எந்தத் தலைமுறையில் யார் சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது. அப்படி ஏதாவது ஒரு முந்தைய தலைமுறையினர் கூறியிருந்தால், அந்தப் பழியை இந்தத் தலைமுறையைச் சேர்ந்த தமிழ் விரும்பிகளாகிய எங்கள் மேல் இன்னமும் திணிக்காதீர்கள்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று முழங்குவதைவிட, அதை அனுபவத் தில் நடைமுறைப்படுத்தவே நாங்கள் விரும்பு கின்றோம்.

வடமொழியையும் (கவனியுங்கள் : உம்) ஆதரிக்கின்றோம் என்பதற்குத் தமிழ்மொழியை வெறுக்கிறோம் என்று நீங்களாகப் பொருள் காண வேண்டாம். வாழ்வு, தாழ்வு ஆகிய எல்லா வற்றிலும் தமிழும் தமிழ்ப் பாசுரங்களும் எங்க ளோடு உலா வருகின்றன. அதை நாங்கள் தம் பட்டம் அடித்துக் கொள்வதில்லை. அவ்வளவே.

இறுதியாக, தனிப்பட்ட ஒரு நாகசாமியாலும், சிறிய எண்ணிக்கையே உள்ள ஓர் (பிராமணர்) இனத்தவராலும் திருக்குறள் சிறுமைப்பட்டுவிடும் என்றோ, தமிழ்மொழி அழிந்துவிடும் என்றோ நினைப்பவர்கள் திருக்குறளின் மகத்துவத்தையும், தாய்த்தமிழின் அஸ்திவாரபலத்தையும் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் பொருள்கொள்ள வேண்டியிருக்கிறது. ●

முனைவர் நாகசாமியின் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு

"அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது."

"It means that unless one takes refuge in the feet of the **Antanan**, who wields the chakra, it is difficult to get over the birth. Here, it may also be interpreted as unless one takes refuge in the feet of the **Brahmana** men who hold the chakra of dharma, it is difficult to cross the world, as the word, **Antanan** stands for a **Brahmin**."

- ('Tirukkural An Abridgement of Sastras'
by Dr. R. Nagaswamy - page : 9)

இதற்கான நமது தமிழாக்கம் : பிறவிச் சக்கரத்தை இயக்கும் அந்தணன் பாதங்களைச் சரணடைந்தால் தவிர, பிறவியை ஒழிக்க முடியாது.

இதனை இன்னொரு விதமாகவும் விளக்க லாம். தர்மச் சக்கரத்தை வைத்துள்ள பிராமணர் களின் பாதங்களில் அடைக்கலம் ஆகாதவர்கள் பிறவியைக் கடப்பது கஷ்டம். இங்கே **அந்தணன்** என்பது **பிராமணன்** ஆகும்.

அறச்சீற்றம்

திருக்குறளின் பெருமை என்றும் நின்று நிலவும்

முனைவர் இரா. நாகசாமி எழுதிய "திருக்குறள் சாத்திரங்களின் தொகுப்பு" என்னும் நூலைப் படித்தேன். ஆய்வு என்ற பெயரால் முறைகேடான செயல்களில் ஈடுபட்டு வாய்மைக்கு மாறாகக் கருத்துரை வழங்கியுள்ளார். ஓதற்கு எளிதாகவும், உணர்தற்கு அரிதாகவும் விளங்கும் திருக்குறளை, வடமொழிச் சாத்திரங்களின் சுருக்கம் என்றும், முப்பாலும் வடமொழி நூல்களின் தொகுப்பு என்றும் துணிந்து கூறியுள்ளார். "இலக்கணமும் இலக்கியமும் அறியாதான் ஏடெழுதுதல் கேடு நல்கும்" என்னும் பாவேந்தரின் கூற்றுக்குச் சான்றாக நாகசாமியின் நூல் அமைந்துள்ளது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் : ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சாதி, சமயச் சார்பற்றவராகத் திருவள்ளுவர் திருக்குறளை யாத்தார். பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரனார், "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி" என்று கடாவியுள்ளார். "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" என்று திருவள்ளுவர் தெளிவுறுத்தியுள்ளார்.

சமயம் சாராத பொது நூல் : திருவள்ளுவர் அருளிய திருக்குறள் சமயம் சாராத ஒரு பெருநூல் என்பர். 'திருவள்ளுவமாலை'யுள் (ப.9) கல்லாடர் பெயரால் அமைந்துள்ள பாட்டு சிந்திக்கத்தக்கது. எல்லோரும் ஏற்றுப் போற்றும் ஆற்றல் வாய்ந்தது திருக்குறள். "சமயக் கணக்கர் மதிவழிச் செல்லாது உலகியல் கூறிப் பொருளிது என்ற வள்ளுவர்" என்பது தொன்னூலான கல்லாடம் (பா.14) கூறும் செய்தி சிந்திக்கத்தக்கது.

பழமை வாய்ந்த பெருமைக்கு உரியது திருக்குறள் : திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியது. 1921–ஆம் ஆண்டு பச்சையப்பர் கல்லூரியில் ஐந்நூறு புலவர் பெருமக்கள் கூடி முடிவெடுத்தமையால், திருவள்ளுவ ராண்டு கி.மு. 31 முதல் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டது. தமிழக அரசு 1971 முதல் உரிய அரசாணை வெளியிட்டுள்ளது. இப்போது (2018 + 31 = 2049) இரண்டாயிரத்து நாற்பத்து ஒன்பதாம் ஆண்டு நிகழ்கிறது. தை மாதமே தமிழ் ஆண்டின் முதல் மாதம் ஆகும். 'காம சூத்திரம்' வாத்சாயனரால் 3–ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. சாணக்கியரால் 4–ஆம் நூற்றாண்டில் 'அருத்த சாத்திரம்' என்னும் கௌடலீயம் உருவாயிற்று. 'மனுசுமிருதி' 8–ஆம் நூற்றாண்டில் தோன்றியது. 'சுக்கிரநீதி' 10–ஆம் நூற்றாண்டில் வழக்காறு பெற்றது!

பாயிரவியல் தொல்காப்பியம் கூறியவாறே அமைந்தது : திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களைப் 'பாயிரவியல்' என்பர். பாயிரம் என்பது முன்னுரை அல்லது முகவுரை ஆகும். கடவுள் வாழ்த்தோடு சேர்ந்து வருபவை மூன்று என்பார் தொல்காப்பியர். "கொடிநிலை கந்தழி வள்ளி என்ற வடுநீங்கு சிறப்பின் முதலான மூன்றும் கடவுள் வாழ்த்தொடும் கண்ணிய வருமே" (தொல். 1084). கொடிநிலையாக வான் சிறப்பும், கந்தழியாக நீத்தார் பெருமையும், வள்ளியாக அறன் வலியுறுத்தலும் திருக்குறளில் அமைந்துள்ளன என்பது கருதத்தக்கது.

அறுதொழிலோர் நூல் மறப்பர் : முப்பாலாம் திருக்குறளில் வரும் அறுதொழிலோர் என்பது உழவு, நெசவு, ஓவியம், கட்டடம், வாணிகம், கல்வி ஆகியவற்றை மேற்கொள்ளும் சான்றோரைக் குறிக்கும். ஆட்சியாளர் செம்மையாகப் பேணிப்போற்ற வேண்டிய அறுவகைத் தொழில்புரிவோர் இங்கே குறிக்கப்பெற்றுள்ளனர்.

முதுமுனைவர்
பா. வளன் அரசு


பாரதியார்


சுவாமி விபுலாநந்தர்


பாரதிதாசன்

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர்

நூல்மறப்பர்

காவலன் காவான் எனின்"

(திருக்குறள் 560).

திருக்குறளில் சாதி வேற்றுமைக்கு இட மில்லை : உலக நோக்குடன் எழுதப்பட்ட திருக்குறளில் சாதி வேற்றுமைக்கு எள்ளளவும் இட மில்லை. உலகத் திருக்குறள் மைய நிறுவனத் தலைவர் முனைவர் கு. மோகனராசு கூறுவது போன்று,

"சாதியொரு சாபக் கேடு

சமூகச்சீர் அழிவுக் கோடு

சூதுமதி கொண்ட தீயோர்

சூழ்ச்சியினால் விளைந்த தீட்டு"

(திருக்குறள் மாமுனிவரின் படைப்புகள், ப. 94)

சாதியின் கொடுமைகளை அடையாளம் காட்டி, அதனை அகற்றவும் அழித்தொழிக்கவும் குரல் கொடுப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலியத் தமிழ் ஏந்தல் வீரமாமுனிவர் : திருக்குறளை 1730–ஆம் ஆண்டு இலத்தீன் மொழியில் வழங்கியவர் வீரமாமுனிவர். 2018–ஆம் ஆண்டு வரை திருக்குறள் 140 மொழிபெயர்ப்புக் களைப் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் மட்டும் 58 பேர் மொழி பெயர்த்துள்ளனர் என்பது தனிச் சிறப்பு. தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக் கண நூலில் வீரமாமுனிவர் விளம்புவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. ''வேதநூல் முதல் எவ்வகை நூலும் கல்லாது உணரவும் சொல்லாது உணர்த் தவும் வல்லவராகி, மெய்ஞ்ஞானத் திருக்கட லாகிய ஒரு மெய்க்கடவுள் தன் திருவடி மலரே தலைக்கு அணி எனக் கொண்டேத்தி, இருளிரா விடத்து விளங்கிய ஒரு மீன் போலவும், பாலைச் சுரத்து அரிது அலர்ந்த பதுமம் போலவும், மெய்யாம் சுருதி விளக்காது இருளே மொய்த்த நாட்டின் கண்ணும் கடவுள் ஏற்றிய ஞானத் திருவிளக்கு எரிப்பத் தெளிந்துணர்ந்து எங்கும் ஒரு விளக்கென நின்றுயர்ந்தவர் திருவள்ளுவர்'' (தொன்னூல் விளக்கம், நூற்பா 149 உரை விளக்கம்) 140–ஆவது மொழி பெயர்ப்பான திருக்குறள் கொரிய மொழிபெயர்ப்பு உலகத் தமிழராய்ச்சி நிறுவன வெளியீடாக ஒளியுடன் மிளிர்கிறது.

யாழ்நூல் ஆசிரியர் விபுலாநந்தர் பாராட்டு : இலங்கைப் பேறறிஞரான யாழ்நூல் ஆசிரியர் விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசானாகத் திகழ்ந்தவர். அவரது பாராட்டு குறிப்பிடத்தக்க சிறப்புமிக்கது. ''அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருளையும் ஓரிடத்தே இணையச் சேர்த்து, விரிக்கற்பாலதை விரித்தும், சுருக்கற்பாலதைச் சுருக்கியும் அரும்பெரும் மணிகளை ஒரு சிறு பேழையினகத்துப் பொற்புற வைத்தாங்குக் கவின் பெற மிளிரும் இவ்வருமைத் திருக்குறள் போன்ற ஒரு நூலினை எம்மொழியிலும் காண்பது அரிது. எப்பாலவர்க்கும் எவ்வெக் காலத்தும் உயிர்க்கு உறுதி பயப்பனவாய் பொருள்களை இன்புற விளக்கி அவரை உய்விப்பதே இத்தொன்னூலின் மாட்சி.''

நிறைவுரை : உலகினுக்கே திருவள்ளுவரைத் தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று பாடிப்பரவினார் புலவர் பாரதியார். பாவேந்தர் பாரதிதாசன் ''திருவள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே'' (பாரதிதாசன் கவிதைகள், ப. 247) என்று எடுத்தியம்பியுள்ளார். ''வித்திப்பிழைக்கும் உழவனும் வேந்தனும் நாடனைத்தும் ஒத்துப் பிழைக்க வழி காட்டி வள்ளுவன் ஓதிய நூல்'' (ப. 248) என்று பாவேந்தர் பாடியது உண்மை, வெறும் புகழ்ச்சி அன்று.

●

அறச்சீற்றம்

தமிழாகரர் தெ. முருகசாமி

திருக்குறள் வடமொழிச் சாத்திரங்களின் வழிநூலா?

25.6.2018 'தினமலர்' திருச்சிப் பதிப்பு நாளேட்டில் டாக்டர் இரா. நாகசாமி எழுதிய "திருக்குறள் வட மொழிச் சாத்திரங்களின் வழி நூல்" என்ற கட்டுரையைப் படித்தேன்.

எழுதிய கட்டுரையில் வள்ளுவர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் உண் மையல்ல என்ற கருத்து ஏற்புடையது. ஆனால், திருக்குறள் அமைப்பும் கருத்தும் பற்றி எழுதிய அனைத்தும் ஏற்புடையன அல்ல.

இந்து சமயம் என்ற ஒன்றே இல்லாதபோது, அதன் கோட்பாடு தான் குறள் என்றது தவறானது.

திருக்குறளுக் குப் பின்தோன் றிய மணி மேகலையில் குறிப்பிடும் பல சமயங்களில் இந்து சமயம் இல்லை. அது எங்கே, யாரால் எப்போது தோற்று விக்கப்பட்டது? அதன் கடவுள் எது? இவையெல்லாம் புரியாத புதிராக உள்ளபோது எப்படி அது இதனோடு பொருந்தும்?

சமஸ்கிருதத்தில் திரிவர்க்கம் இருக் கலாம். அவைதான் முப்பால் என் றால், சமஸ்கிருதம் எப்பொழுது தோன்றிய மொழி? எங்குப் பேசப் பட்டது? தமிழின் பழம்பெரும் நூல் களிலும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பொருள்கள் பேசப்பட் டுள்ளன. எனவே சமஸ்கிருதத்தி லிருந்து வள்ளுவர் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

வேதத்தில் தர்மார்த்த காம மோட்சம் இருக்கலாம். ஆனால், அவை வையத்துள் வாழ்வாங்கு வாழும் தமிழ்நெறிக்கு முற்றிலும் மாறு பட்டவை.

மனுதர்மத்தின் கருத்தைக் குறளில் வலிந்து பொருந்துவதாகவே கட்டுரை உள்ளது.

தர்ம சாத்திர நாலுநிலை வாழ்க் கைதான் வள்ளுவம் என்ற கருத்து ஏற்புடையதன்று. பிரம்மச்சர்ய மாணாக்க நிலைக்குத் திருக்குறளில் சான்று உண்டா?

இல்லறமும் துறவற மும் கிருஹஸ்த, வானப்பிரஸ்தம் இல்லை. தொல் காப்பியர் கூறும் கற்பியல் வாழ் வின் பயனாகும் இவை.

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

திருக்குறளின் கடவுள் வாழ்த்து என்ற பெயர் – அட்சராப்பியாஸம் என்றிருந்தால் பொருந்தும் என நான் நினைக்கிறேன் – எனக் கட்டுரை யாளர் தொடர்ந்து நான்கு அதிகாரங் களுக்கும் தம் கருத்தை ஏற்றிக் கூற முயற்சிப்பதால், பொருள் பொருத்தம் இல்லாததோடு கட்டுரையாளர் போல அவரவரும் அவரவர்க்கேற்பக் கூறுவதாக அமைந்தால், திருக்குறளின்

பொதுமை என்ன வாகும்?

பொருட்பால் முழுக்க முழுக்க அரசு பற்றிக் கூறுவது, குடும்பம் பற்றியதெல்லாம் அறத்துப்பால் கூறிவிட்ட பிறகு மீண்டும் அது பற்றிய இத்தகைய அர்த்தசாத்திரமோ, மனுதர்மமோ கூறலாம். ஆனால், குறளின் பொருட்பால் கூறவில்லை.



காமத்துப்பால் நாடக பாணியில் எழுதப்பட்டதே தவிர, நாடகமே அன்று. அதற்குமாறாக நாடக மேடை எனக் கற்பிப்பது பொருந்தாது. அறம், பொருள் பற்றியதில் வள்ளுவர் கூற்றுக்கள் அமைவது போலல்லாமல் காமத்துப்பாலில் தலைவன் – தலைவி என்ற இல்லறப் பாத்திர உரையாடல்களாகப் படைக்கப்பட்ட புதுமை, சங்க இலக்கியத் தமிழ் மரபைச் சார்ந்தது. அதனால் அதை நாட்டிய சாத்திரம் எனக் கூறுவது எந்த வகையிலும் பொருந்தாது.

மேலும் காமத்துப்பால் வாத்ஸ்யாயனரின் காமசாத்திரம் எனக் கூறுவது முற்றிலும் ஏற்புடையதன்று. இப்படி இட்டுக்கட்டிக் கூறுவது தமிழ்க் காதல் பற்றி முற்றிலும் உணராத கூற்றாகும் எனலாம். காம சாத்திர விரசம் வேறு. காமத்துப்பால் விவேகம் வேறு.

கீதையின் பொருத்தப்பாடு வள்ளுவத்தில் இருப்பதால், அது முழுக்க முழுக்கக் கீதையை வழி நூலாகக் கொண்டதாகாது.

நால்வகை வர்ணாசிரமத்தைக் கூறும் கீதைக்கும் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற குறள் நெறிக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு.

மேலும் எந்த ஒரு கருத்தும் இன்னொரு மொழியோடு பொருந்தலாமேயன்றி (Applied Theory) முற்றிலுமாக ஏற்புடையதாகக் (Applicable) கொள்ள முடியாது.

மேலும் கூறினால் கீதையை வள்ளுவர் அறிருந்திருக்கவே மாட்டார் எனலாம். ஏனெனில் கீதை பற்றி நாலாயிரத்திவ்யப் பிரபந்தத்தில் எந்த ஆழ்வாரும் கூறவில்லை, ஏன்? எவ்வளவோ வைணவக் கதைகளைத் தெரிந்து கூறும் ஆழ்வார்களில் ஒருவர்கூடக் கூறவில்லை என்றால், அவர்களுக்குத் தெரியாததால் கூறவில்லை என்பதுதானே கருத்து. புனிதமான நூலைத் தெரிந்தும் புறக்கணிக்க வாய்ப்பில்லை.

எனவே, கீதை பற்றிய ஐயம் தெளிவுபடுத்த வேண்டிய ஒன்றாக உள்ளபோது வள்ளுவரோடு தொடர்புபடுத்துவது பொருத்தமேயன்று.

ஆக, "வள்ளுவர் செய் திருக்குறளை மருவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி" எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் கருத்தைத்தான் கட்டுரையாளரோடு பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது என்பது என் கருத்து.

●



தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
MILK
SELECT
SUPREME
SPECIAL
Pasteurised Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

நாடாளுமன்றம் - சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத் தேர்தல்

விவாதக் கடிதங்களில் சில... சில... சில...

நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத்தில் தேர்தல் வரவேற்கத்தக்கது. கருப்புப்பணம் விளையாட்டு இன்றி நேர்மையாக, அமைதியாக, ஊழலற்ற தேர்தல் மக்களுக்கு இன்னல், இடையூறுகள் இன்றி நீதிக்கும் வாழ்க்கைக்கும் பங்கமின்றி ஜனநாயகம், பணநாயகமாகாமலிருக்க ஒரே சமயத்தில் தேர்தல் சந்தோஷம்.

– ஏ.டி. ஸுந்தரம், சென்னிமலை.

சட்டமன்றங்கள் மற்றும் மக்களவைக்கான தேர்தல்களைத் தனித் தனியே நடத்தினால், தேர்தல் பிரச்சாரத்திற்கென மக்களைச் சந்தித்தல், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுதல் முதலியவை நிகழ்கின்றன. ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற அரசியல் தத்துவத்திற்கு அனைத்துக் கட்சியினரும் ஒருமித்த ஆதரவு தரவேண்டும்.

– த. நாகராஜன், சிவகாசி.

ஒரே நாளில் நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்குத் தேர்தல் நடந்தால் மக்களுக்கும், அரசுக்கும், அதிகாரிகளுக்கும், நம்மைப் பாதுகாக்கும் காவல் துறைக்கும் சிரமங்கள் குறையும். அரசியல் வல்லுநர்கள், நேர்மையான, நடுநிலைமை உள்ளவர்களிடமும் ஆலோசனை கேட்டுச் செய்யலாம்.

– தி.ஈ.தி. ஈசுவர்மூர்த்தி,
ஸ்ரீவில்லிப்புத்தூர்.

நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதே சாலச் சிறந்தது. இல்லையேல், எதிர்க்கட்சிகளிடமிருந்தும், மக்கள் மத்தியிலிருந்தும் எதிர்ப்புக் குரல் எழும்பிக்கொண்டே இருக்கும்.

– நவீன்குமார், நடுவிக்கோட்டை.

நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தினால், அரசுக்குச் செலவு மிச்சம் என்பது உண்மைதான். ஆனால், பல்வேறு காரணங்களால் மாநில அரசுகளைக் கலைக்க அரசியல் சட்டம் வகை செய்கிறது. ஆகவே நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் தனித்தனியாகத் தேர்தல் நடத்துவதே சிறந்ததாகும்.

– ப. அடைக்கலம்,
ஸ்ரீவில்லிப்புத்தூர்.

இன்றைய கணினி, எநதிரமய உலகில் மக்களிடையே பன்முகங்களில் வேற்றுமையே பரவுகிறது, தென்படுகிறது. ஆதலால், தேர்தல் வேளையிலான வாக்குப்பதிவு முழுமையாக – பெரும்பான்மையாக இருக்க, வாக்குப்பதிவின் குணங்கள் கூடுதலாக்க வேண்டும். உரிய பிரிவுகளின் அடிப்படையில் தனித்தனியாகத் தேர்தல் நடைபெறுதலே அதிகாரம் ஏகமாக ஒரே இடத்தில் சேராது, அனைவருக்குமான பாதுகாப்பை நல்கும்.

– எஸ்.ஜி. இசட்கான், திருப்பூர்.

இந்தியப் பெருநாட்டில்

நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியப்படாது. எடுத்துக்காட்டாக, கர்நாடகா, குஜராத், மணிப்பூர் முதலிய மாநிலங்களில் தேர்தல் முடிந்து ஓராண்டுதான் ஆகிறது. அதற்குள் அந்த ஆட்சிகளைக் கலைத்துவிட முடியுமா? ஒரே நேரத்தில் தேர்தல் என்பது சாத்தியப்படாத திட்டம்.

– பா. சீமான்பாரதி,
வெள்ளானைக்கோட்டை.

ஒரே சமயத்தில்தான் நாடாளுமன்றத்திற்கும், மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இடையில் சட்டமன்றங்கள் கலைப்பும் நிகழக்கூடாது. இடையில் மன்ற உறுப்பினர் மறைந்தால், இடைத்தேர்தலும் வேண்டாம். சம்பந்தப்பட்ட கட்சியே ஒருவரை அனுப்பி நியமனம் செய்யலாம்.

– மு. பழனி இராகுலதாசன்,
தேவகோட்டை.

இன்றைய ஆளும் கட்சி, நாளைய எதிர்க்கட்சி. இவை அனுமான் வால் போல் நீண்டு, மாறி மாறி வருகின்றன. அரசியல் தலைவர்கள் முதலில் சரியாக வேண்டும். மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியா. ஒரே சமயத்தில் தேர்தல் நடந்தால் என்ன ஆகும்? முதலில் கள ஆய்வு தேவை.

– பா. ரங்கசாமி பாப்பம்மா,
கல்வடங்கம்.

ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்படுமானால், தேர்தல் செலவு ரூ. 12 ஆயிரம் கோடி மிச்சமாவதும் நமக்கு ஒரு கூடுதல் பலன் என்பதும், மக்களுடைய சிந்தனைக்களம், அதன் மன ஓட்டம் நாடு முழுவதும் 5 ஆண்டுகளுக்கு எப்படி இருக்கும் என்று மதிப்பீடு செய்யவும் இது உதவும். உறுதியான ஆட்சி 5 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டுமானால், ஒரே நேரத்தில் மாநிலங்களுக்கும் – நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் நடத்துவதுதான் நல்லது.

– சு. இலக்குமணசுவாமி, மதுரை.

ஒரே சமயத்தில் மாநிலங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் நடத்தலாம் என்ற யோசனை ஒரு சில கட்சிகளின் சுயநல உணர்வால் ஏற்பட்ட ஒன்று. இலாப நோக்கு. எப்போது இந்த ஒரே சமயத் தேர்தல் அமுல்படுத்தினாலும், சில மாநிலங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆயுட்காலத்தை நீட்ட வேண்டி வரும். இது அந்தத் தொகுதி மக்கள் – வாக்காளர்கள் தேர்வுக்கு விரோதமான செயல். ஒரே சமயத்தில் தேர்தல் தீயது, உள்நோக்கம் கொண்டது, கைவிடப்பட வேண்டிய ஒன்றே.

– அ. சம்பத், திருவரங்கம்.

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடைபெறுவதால், நாட்டுக்கும் நல்லது, மக்களுக்கும் நன்மை. முறையான ஒரே தேர்தல் ஒழுங்காக நடைபெறும் என்ற நம்பிக்கையும் மக்களுக்கு ஏற்படும். உலக நாடுகளின் பார்வையிலும் ஒரு முகமான மதிப்பை ஈட்டித்தரும் வாய்ப்புண்டு.

– வி.எஸ். கிருஷ்ணமூர்த்தி,
வரட்டணப்பள்ளி.

உறுதியான ஆட்சி 5 ஆண்டுகளுக்கும் நீடிக்க வேண்டுமானால், ஒரே சமயத்தில் மாநிலங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் நடத்துவது நல்லதல்ல. ஒரு வேளை தேசிய அளவில் ஒரே கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கும் சூழ்நிலை ஏற்படுமெனில், அந்தந்த மாநிலங்களுக்குரிய அதிகாரம் முற்றிலும் சிதைந்து போய் விடும். இதனால், மாநிலங்களுக்குரிய உரிமைகள் தட்டிப்பறிக்கப்பட்டுப் பல விதக் குழப்பங்கள் ஏற்படும். மேலும்,

ஒரே சமயத்தில் தேர்தல் நடத்தி னாலும் ஒரே கட்சி பெரும்பான்மை யான மாநிலங்களில் வெற்றி பெறாத சூழ்நிலை ஏற்படின், மீண்டும் தற்போதுள்ள அதே சூழ்நிலைதானே தொடரும்?

– உ.மு.ந. ராசன் கலாமணி,
கோபிசெட்டிபாளையம்.


1952, 1957, 1962 ஆகிய ஆண்டு களில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றங் களுக்கும் இணைந்து தேர்தல்கள் நடைபெற்றது போன்றே, இப்போதும் நடத்துவதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டும். அப்பொழுதுதான் மத்தியிலும், மாநிலங்களிலும் முழுமையாக ஐந்தாண்டுகள் ஆட்சி நடைபெற்றுத் திட்டங்கள் செவ்வனே செயல்படுத்த முடியும். அனைத்து அரசியல் கட்சி களும் நாட்டின் நலன், முன்னேற்றத் தைக் கருத்தில் கொணடு ஒரே சமயத் தேர்தலைச் சாத்தியமாக்க வேண்டும்.

– புலவர் கருமலைத் தமிழாழன்,
ஒசூர்.

சட்டமன்றங்களுக்குத் தனியா கவும், நாடாளுமன்றத்திற்குத் தனியா கவும் தேர்தல் நடத்துவதால், மக்களது பணம் விரயம் ஆகின்றது. மத்தியிலும், மாநிலங்களிலும் ஆளும் கட்சி தொடர்ந்து 5 ஆண்டுகள் பதவி வகித்தல் வேண்டும். உதாரணமாக, அண்மையில் நடந்த, நடக்கவுள்ள கர் நாடகா, மத்தியப்பிரதேசம், ராஜஸ் தான், சத்தீஸ்கர் மாநில ஆட்சிகளை எப்படிக் கலைப்பது? என்ற கருத்துக் களும் உள்ளன. அனைத்துத் தேசியத் தலைவர்களும் ஒரே அணியில் நின்று, நாட்டின் நலன் கருதி ஒரே சமயத்தில் சட்டப்பேரவைகள், நாடாளுமன்றத் திற்குத் தேர்தலைத் துணிந்து நடத் துவதே நாட்டிற்கு நல்லது.

– லிங்கம் சின்னசாமி, தாராபுரம்.

காந்திய அறிஞர் ச. செயப்பிரகாசம் மறைந்தார்



கடந்த ஜூலை மாதம் 11-ஆம் தேதி காந்திய அறிஞர் ச. செயப்பிரகாசம் தமது 70-வது வயதில் நம்மைவிட்டு மறைந்தார் என்ற துக்கச் செய்தி ‘ஓம் சக்தி’யை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. காரணம் செயப்பிரகாசம் அவர்கள் அருட்செல்வரோடு மிக நெருங்கிய தொடர்பில் இருந்தவர்.

மதுரைக்குச் சென்ற போதெல்லாம், அருட் செல்வர் செயப்பிரகாசத்தை அழைத்துக் கலந்துரை யாடுவார். யாரிடமும் எதையும் கேட்டுப் பெறாதவர். அன்பை செயல்களால் விநியோகித்தவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ.பொ.மீ.-யின் நம்பிக்கைக்கு உரியவர்.

உலக நாடுகளில் காந்தியத்தைப் பரப்பிய அவருடைய உரை வீச்சுக்கள் நினைவுகூரத் தக்கவை. “அமைதி விஞ்ஞானம்” என்று ஒரு புதிய புலத்தை உருவாக்கியவர். ‘அகிம்சை’ என்ற ஆராய்ச்சி இதழை யும், ‘நான் வயலன்ஸ்’ என்ற ஆங்கில இதழையும் நடத்தியவர். அவருடைய அறிவின் அகலம் அட்லாண்டிக் சமுத்திரம் போன்றது.

அவருடைய அருமை மகன் மரணமடைந்ததை அவரால் தாங்க முடியவில்லை. அவருடைய கடைசி மூச்சுக் காற்றை அவர் முற்றுப்புள்ளியாக்கினார். சாவு மனிதனுக்குப் புதியதல்ல. அவருடைய இழப்பை வார்த்தைகளால் உரைப்பதுகூட ஆராதனையாகி விடுமோ என்று அச்சப்பட வேண்டியுள்ளது.

அவருடைய மறைவுக்கு ‘ஓம் சக்தி’ துயர் கொள்கிறது. ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

– இ.ஆர்.



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
FORCE GURKHA E.O.V. 4x4x4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

மிரக்கிள் மாங்கோ பானம்



இந்த ஜூஸ், வைட்டமின் 'சி' சிகிச்சை மூலம் புற்றுநோயைக் குணப்படுத்தும் சிகிச்சைக்குரிய மருத்துவக் குணம் உள்ளதாகும். இதனைக் கேன்சர் நோய் இல்லாத வர்களும் தாராளமாக ஒரு நாளைக்கு ஒருமுறை ஒரு பாக்கெட் (200 மில்லி) அருந்தலாம்.

இருதய நோயாளிகள், தோல் நோயாளிகள் உள்ளவர்களும் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று பாக்கெட்கள் அருந்தலாம். இந்த ஜூஸ், நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்தக் கூடியது. சர்க்கரை நோயாளிகளுக்கு இதே ஜூஸ் தனியாக உள்ளது.

கிடைக்குமிடம் : கோவை 180, ரேஸ்கோர்ஸ் சாலை, ஏபிடி கம்பெனி. தொடர்புக்கு : பிரம்ம மணி, அலைபேசி எண் : 8220041227, பொள்ளாச்சி அலைபேசி எண் : 9942908432, அலுவலகத் தொலைபேசி : 04259-237744.

தகவல் : **எம். ரவிச்சந்திரன்,**

சக்தி சுகர்ஸ், வைஸ் பிரசிடெண்ட் (தொழில்நுட்பம்), கோவை.

***ந**ம் நாடு சுதந்திரம் பெற்றபோது, பொதுத் தேர்தல்கள் மத்திய, மாநில அரசுகளுக்கு ஒரே சமயத்தில்தான் நடைபெற்றன. எதனையும் முறையாகச் சிந்தித்துச் செயல்பட்டால்தான் மக்களுக்குப் பயன் கிடைக்கும். ஆகவே, மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதே சிறந்தது. இதுதான் மக்களுக்குப் பயன்தருவதாக அமையும்.*

– இரா. தியாகராசன், இலால்குடி.


***ஒ**ரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும், மாநிலங்களவைக்கும் தேர்தல் நடத்தினால், தேர்தல் ஆணையத்திற்கு வேலைப்பளு அதிகமாகும். தேர்தல் சமயத்தில் நடக்கும் பலவித மோசடிகளைக் கண்டுபிடித்து, அவற்றிற்குரிய தண்டனைகள் அளிப்பது என்பது மிகக் கடினமாகலாம். தேர்தல் ஆணையத்தின் காரியங்களைச் சிறப்பாக ஆற்றும் திறமை பாதிக்கப்படலாம். அதனால், பெரிய நாடான இந்தியாவில், ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும் சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடத்துவதென்பது நடைமுறையில் மிகக் கடினமான ஒன்று.*

– ஆர்.வி. மஞ்சுளா, பெங்களூரு.

***நா**டாளுமன்றம், சட்டமன்றங்கள் இரண்டிற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது மிக மிக நல்லது. செலவுகள் ஒன்றாக முடிந்துவிடும். மக்களும் குழம்பாமல் தெளிந்த மனதுடன் விரும்பியவர்களுக்கு ஓட்டுப்போட்டுத் தங்கள் கடமையினைச் செய்ய முடியும். நாடாளுமன்றத்திற்கு ஒரு முறை தேர்தல், சட்டமன்றங்களுக்கு ஒரு முறை தேர்தல் என்பது மக்களின் வரிப்பணத்தினைத் தேவையில்லாமல் செலவு செய்வதற்கு வழிவகுக்கும். தேர்தல் என்பது மாணவர்களுக்கு வரும் தேர்வு போன்றது. இதை ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு மாதம் என்று வைத்தால் எப்படி மாணவர்களுக்குப் பாடத்தின்மீதே வெறுப்பு வருமோ, அதுபோல ஆண்டுக்கொருமுறை தேர்தல் என்ற நிலை வந்தால், பொதுமக்களுக்கும் தேர்தல் என்றாலே வெறுப்பு வரும்.*

– உஷா முத்துராமன், மதுரை.

***நா**டாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதென்பது தற்போதுள்ள நிலையில் சாத்தியமில்லை. அந்தந்த மாநிலங்களில் வெவ்வேறு நிலையில் தேர்தல்கள் அமைந்துவிட்டன. 5*



அட்டைப்படம்

திரிகோணமலை கோணேஸ்வரர் ஆலயம் (இலங்கை)

திரிகோணமலை தமிழர்களின் கிழக்கு மாகாணம். அங்கு கோணேஸ்வரரின் ஆலயம். ராவணன் அவரை வழிபட்டு வந்தவன். அந்தப் பெருமை அந்த மலைக் கோவிலுக்கு மகத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. கோணேஸ்வரரின் வரத்திற்குக் காத்திருந்த ராவணன் அது தாமதப்பட்டபோது, ஆத்திரப்பட்டு அந்த மலையையே தன் வாளால் வெட்டினான். இன்றைக்கும் அந்த இடம் 'ராவணன் வெட்டு' என்று உள்ளது. செப்டம்பர் இதழ் முகப்பை இந்தக் கோவில் அலங்கரிக்கிறது.

ஆண்டு என்ற வரையறைகளில் பாதிப்பு ஏற்படும். அந்தந்த மாநிலங்கள் சம்மதிக்குமா? செலவுச் சிக்கனம் என்ற காரணம் சரியான ஒன்று. அதுதான் உண்மை என்றால், நாடாளுமன்றத்தை முடக்காமல், எல்லா மாநிலங்களிலும் ஒரே அளவில் 5 ஆண்டு என்ற வரையறைக்கு வர சில மாநிலங்களின் ஆட்சிகளை முடக்கி வைத்து நேர் சீரானதும் செய்ய வாய்ப்பிருந்தால் நடத்தலாம். அதற்கு மாநிலங்கள் முன்வர வேண்டும். வருமா?

– தெ. முருகசாமி, புதுச்சேரி.

ஒரே சமயத்தில் மத்திய, மாநிலத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று பா.ஜ.க. சொல்வதில் வேறு உள்நோக்கம் இருக்கும் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது. பல இடைத்தேர்தல்களில் தோல்வி அடைந்துள்ள பா.ஜ.க., வரும் 2019 பொதுத் தேர்தலில் என்ன கோல்மால் செய்தாவது மத்திய அரசைப் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று பலவிதமான தந்திரங்களைச் செய்து வருகிறது. எல்லாத் துறைகளிலும் படு தோல்வி அடைந்துள்ள மத்திய அரசு, என்னவெல்லாம் செய்து மக்களை இழுக்கலாம் என்று திணறி வருவது கண்கூடு. ஆகவே, இந்த முயற்சியும் வீண்.

– ம.பெ. சுதந்திரகுமார்,

சென்னை.

நாடாளுமன்றத்திற்கும், சட்ட மன்றங்களுக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதால், தேர்தல் செலவுகள் குறையும். சட்டமன்றமோ, நாடாளுமன்றமோ கலைக்கப்பட வேண்டிய அத்தியாவசியம் ஏற்படாது. இதனால், அரசின் நேரமும், மக்களின் நேரமும் வீணாகாது. நிர்வாக, வளர்ச்சிப்பணிகள் தொடர்ந்து நடைபெறும். அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைத்தால், நாடாளுமன்றம், சட்டமன்றங்களுக்கு ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவது சாத்தியமே!

– வெ. ஜெயலட்சுமி,

கோவை.

நாடாளுமன்றத்திற்கும், சட்டசபைகளுக்குமான தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடக்காமல் போனதற்குத் தமிழகம்தான் தடம் காட்டியது. நம் நாட்டில் பலவிதங்களில் வீண் செலவுகள் செய்யப்படுகின்றன. ஆனால், தேர்தல் செலவை வீண் செலவாக எண்ணக்கூடாது. இரண்டிற்கும் தனித்தனியாகத்தான் தேர்தல் நடத்த வேண்டும். அப்பொழுதுதான் அரசியல்வாதிகளை அடிக்கடி பார்க்க முடியும்.

– என்.ஆர். ஜெயசந்திரன்,

காவேரிப்பட்டணம்.

வாசகர் கடிதங்கள்

2018 ஆகஸ்டு மாத இதழில் சுரங்கம் பகுதியில் காந்தியம் பற்றி அருட்செல்வர் தெரிவித்துள்ள கருத்து கள் அத்தனையும் மிகச் சரியானவை!

– நன்னிலம் இளங்கோவன்,
மயிலாடுதுறை.

‘பாரதிதாசன் கவிதைப் பெரு வெளி’யில் கவிஞர் சிற்பியின் மொழி நடை தனித்துவம் மிக்கது; தேனாய் இனித்தது; திகட்டவே இல்லை. பாவேந் தரின் சிந்தனைகளை நன்கு பரிமாறி யிருந்தார்.

– திருமேனி நாகராசன்,
காரைக்கால்.

ஓசோன் சிகிச்சை பற்றியும் வைட்ட மின் ‘சி’ மிரக்கிள் பானம் பற்றியும் வெளிவந்துள்ள அரிய மருத்துவச் செய்திகள் பிரம்மிப்பைத் தருகின்றன. ஆரோக்கிய மனித வாழ்க்கைக்கு இவை மிகவும் பயனுள்ளவை!

– ஏ. சோமசுந்தரம், மல்லூர்.

ஆகஸ்டு *2018* இதழில் திருக் குறளைப் பற்றி இரா. நாகசாமி கட் டுரை மூட்டிய ‘அறச்சீற்றம்’ அயல் நாட்டில் வாழும் என் மனதை வெகு வாக வருத்திவிட்டது.

– அருண்சேகர், கலிபோர்னியா.

எஸ். ஹாஜா எழுதிய ‘இப்தார் விருந்து’ சிறுகதை உள்ளத்தை நெகிழ வைத்தது. மனிதநேயத்தின் மாண்பினை எடுத்துக்காட்டியது!

– சு. இலக்குமண சுவாமி, திருநகர்.

ஆகஸ்டு மாத இதழில் வெளிவந்த ‘மழைத்துளி’, ‘தனிமையில் புலம்பும் வீடு’ ஆகிய இரு கவிதைகளும் மிகவும் அற்புதம். ரசிக்க வைத்தன!

– உஷா முத்துராமன், திருநகர்.

பாரதி, பாரதிதாசன் இவ்விருவரின் கவிதை வளத்தையும், கற்பனைத் திறத் தையும் பின்னிப் பிணைத்து கவிஞர் சிற்பி அவர்கள் ‘ஓம் சக்தி’யில் 25 மாதங்களாக எழுதி வந்த ‘பாரதிதாசன் கவிதைப் பெருவெளி” கட்டுரைத் தொடர் அவரது சிந்தனைச் சிறப்புக்குச் சிகரமாய் விளங்குவது எனக் கூறில் அது மிகையல்ல!

– கவிஞர் வெற்றியூர்
சுப. திருஞானம், கோவை.

உலகப் பொதுமறையான திருக் குறளை முனைவர் இரா. நாகசாமி தாழ்த்திப் பேசுவது மிகவும் கண்டிக்கத் தக்கது.

– இரா. தியாகராசன், இலால்குடி.

பொறியாளர் ஏ.சி. காமராஜ் அவர் களின் நவீன நீர்வழிச்சாலைத் திட்டம் பற்றிய தொடர் மிகவும் சிறப்பு. பல விவரங்களைப் புரிந்து கொண்டேன்!

– என்.ஜே. கந்தமாறன், சென்னை.

‘ஓம் சக்தி’ ஆகஸ்டு இதழ் முகப்பு அட்டையில் வெளியாகியிருந்த வண்ண மயமான யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி திருக்கோயிலின் படம் மனதைக் கவர்ந்தது.

– ஆர்.கே. லிங்கேசன்,
மேலகிருஷ்ணன் புதூர்.

300 ஆண்டுப் பழமையான பின்னலூர் இராமலிங்க சுவாமி திருக் கோயிலையும் அதன் சிறப்புகளையும் விளக்கிய பேரா. கோகுலாச்சாரிக்குப் பாராட்டுகள்.

– வி.எஸ். கிருஷ்ணமூர்த்தி,
வரட்டணப்பள்ளி.

கவிஞர் சிற்பி படைத்திருந்த ‘பாரதி தாசன் கவிதைப் பெருவெளி’ நிறைவு மனதிற்கு வருத்தத்தைத் தந்தது. இன் னும் வரும் என்று நினைத்திருந்தேன். இது நூலாக வெளிவர வேண்டும்!


– எஸ்.எஸ்.ஆர். லிங்கம்,
திருவில்லிப்புத்தூர்.

முனைவர் இரா. நாகசாமி முன்பே தமிழைப் பற்றிப் பேசிய தவறான கருத் திற்குத் தமிழறிஞர் தமிழண்ணல் போன்ற அறிஞர்கள் மறுத்து ஒரு நூலையே வெளியிட்டார்கள். அது தெரிந்தும் அவர் திருக்குறளைப் பற்றிக் கூறியுள்ள கருத்துகள் தமிழரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி யுள்ளன.

– பாவலர் கருமலைத் தமிழாழன்,
ஓசூர்.



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
NM
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
Micromax nothing like anything
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811



ஜூலை 2018 இதழ் தொடர்ச்சி

முனைவர்
கோ. அழகர் ராமானுஜம்



பித்ருக்கள் தவம்

தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கும் அலைகள் எங்கோ உருவாக்கப் பட்டுப் பெட்டிக்கு வந்து சேருகின்றன. ஆனால் நமது ஆத்ம அலைகளை நாம் நமது பெற்றோர்களிடமிருந்து பெறுகிறேம். அந்த அலைகளில் பெற்றோர்களின் உடல் அமைப்பு, குணங்கள், அவர்களது விருப்பு வெறுப்புகள், நோய் நொடிகள் என எல்லாமே பதிவாகியிருக்கின்றன. இது நாம் அன்றாடம் பார்க்கின்ற ஓர் உண்மை!

எனது கண்களோ, காதோ அல்லது மற்ற அங்க அடையாளங்களோ, ஒன்று, எனது அப்பாவை ஒத்திருக்கும் அல்லது எனது அம்மாவை ஒத்திருக்கும். எனது உடல்வாகு, குணங்களின் தன்மை, எனக்கு வருகிற நோய் நொடிகள் பெற்றோர்களிடம் நான் வாங்கிய ஆத்மப் பதிவுகளைப் பொறுத்தே அமைகின்றன.

அப்பாவுக்கு முன்கோபம் அடிக்கடி வரும் என்றால், எனக்குள்ளும் முன்கோபம் எப்போது எட்டிப் பார்க்கலாமென்று காத்துக் கொண்டிருக்கும்.

சர்க்கரை வியாதிக்கு டாக்டரைப் பார்க்கச் சென்றால், அவர் கேட்கும் முதல் கேள்வி; உங்க அப்பாவுக்கோ, அல்லது அம்மாவுக்கோ இந்த வியாதி இருந்ததா? அவர்களுக்கு இருந்திருந்தால் எனக்கும் வருவதற்கான வாய்ப்பு உண்டு. பெற்றோர்களிடமிருந்து நான் பெற்ற ஆத்மப் பதிவுகள் (சஞ்சித கர்மா) என்னை இயக்குகிற முதல் விதிகளாகும். முதல் மகனை நாம் தலைமகன் என்று சொல்வதைப் போல நம்மை இயக்குகிற முதல் விதியை (சஞ்சித கர்மா) தலைவிதி என்கிறோம். தலைவிதி என்பது நமது தலையிலுள்ள எழுத்தல்ல; அது நமது ஆத்ம அலையிலுள்ள பதிவுகள்.

நிலம் மீது விழுந்த பின்னே எனது எண்ணங்களும் செயல்களும் ஆரம்பமாகின்றன. எனது ஒவ்வொரு எண்ணமும், செயலும், எனக்கு வந்து சேரும் ஒவ்வொரு செய்தியும் எனக்குள்ளிருக்கும் ஆத்ம அலையில் புதிய பதிவுகளை உருவாக்குகின்றன. நான் என்னில் உருவாக்குகிற பதிவுகளைப் பிராரப்த கர்மா என்கிறேம்.

இன்று நான் உருவாக்குகிற பதிவு ஏற்கனவே என்னில் உள்ள ஏதோ ஒரு பதிவுக்கு முரணாக அமைந்தால், பதிவுகளுக்கு இடையே உள்ள முரண்பாடு எனது உள்மன அமைதியையும், உடல் உறுப்புகளின் இயக்கச் சீர்மையையும் குலைக்கும். அப்போது அமைதியை

இழக்கிறேன்; ஆரோக்கியத்தையும் இழக்கிறேன்.

மாறாக, நான் உருவாக்குகிற பதிவு ஏற்கனவே உள்ள பதிவுக்கு இசைவாக இருந்தால், பதிவுகளுக்கிடையே உள்ள இசைவு எனது அமைதியையும் உடல் உறுப்புகளின் இயக்கச் சீர்மையையும் நிலைநிறுத்தும். இதைச் சற்று ஆழமாகச் சிந்திப்போம்.

அவரவர்கள் பெற்றோர்களிட மிருந்து வாங்கிய சஞ்சித கர்மாவில் எல் லோருக்கும் பொதுவானதொரு பதிவு இருக்கிறது. பையனுக்குப் பெண் பார்க் கும்போது, பெண் நமது சாதியில் பார்க்க வேண்டுமென்று நம் அனை வரின் பதிவிலும் இருக்கிறது. இது அரசாங்கம் இட்ட ஆணையில்லை. நாமாகத் தேர்ந்தெடுத்த கருத்துமில்லை. அப்படியென்றால் இந்த எண்ணம் நமக்கு எப்படி வந்தது? தலைமுறை தலைமுறையாக வருகிற சஞ்சித கர்மா வில் உள்ள பதிவினால் இந்த எண்ணம் நமக்கு வருகிறது.

பையன் M.D., முடித்து வீட்டுக்குத் திரும்புகிறான். "M.D., படிப்பில், தன் னோடு படித்த பெண், ஒரு வருடமாக ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம்; திரு மணம் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறோம்" என்று பையன் அப்பா விடம் சொல்ல, அப்பா கேட்கிற முதல் கேள்வி, "அந்தப் பெண் என்ன ஜாதிடா?"

ஒரே ஜாதியாக இருந்தால், அந்தச் செய்தி அப்பாவின் உள்ளே இருக்கிற பதிவுக்கு இசைவாக இருக்கிறது. வேறு ஜாதி என்றால், அந்தச் செய்தி அப்பா விற்குள் உள்ள பதிவுக்கு முரணாக அமைகிறது. இந்த முரண்பாட்டினால் உடல் வேர்க்கிறது; வயிற்றைக் கலக்கு கிறது; நெஞ்சு லேசாக வலிக்கிறது. எல் லாம் முரண்பட்ட பதிவுகளின் மோதல் களினால் வரும் பக்கவிளைவுகள்.

தந்தையும் தாயும் காலமாகிவிட் டாலும், அல்லது இப்போது இருந் தாலும், தந்தையின் ஆத்மப் பதிவுகளும், தாயின் ஆத்ம பதிவுகளும் நமக்குள்ளாக இருந்து இப்போதும் நம்மை வழி நடத்துகின்றன.

அவர்களுடைய பதிவுகளுக்கு முரணாக நமது எண்ணமோ, செயலோ அமைந்தால் நமது உடல் நலம் கெடும்; எந்த உறுப்பு எப்படி நாசமாகுமோ தெரியாது. இதைப் பித்ருக்களின் சாபம் என்றும் சொல்வார்கள்.

பித்ருக்களின் சாபத்தைத் தவிர்த்து, அவர்களது பூரண ஆசியோடும், உடல் நலத்துடனும், உள்மன அமைதியுடனும் வாழ்வதற்குப் பித்ருக்கள் தவம் அவ சியம். ஆண் – பெண் என இரு பாலா ருக்கும் அவசியமான இத்தவத்தை அலட்சியப்படுத்த வேண்டாம். இருட் டிலிருந்து வெளிச்சத்திற்கு வருகிற தரு ணம் இது. விழித்துக் கொள்வோமாக.

"பொய் புகலேன் சத்தியம் உரைக் கின்றேன்" என்று சொல்வதைவிட, இங்கு வேறென்ன சொல்வதற்கு இருக் கிறது. பெற்றோர்களிடம் பிள்ளைகள் (மகனோ அல்லது மகளோ) பேசும் அந்தரங்க உரையாடலே பித்ருக்கள் தவம்.

ஓர் அப்பாவிற்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், மூன்றாவது ஒரு பெண் பிள்ளையும் என்று வைத்துக் கொள் வோம். கடைசித் தங்கைக்குத் திரு மணத்தை முடித்துவிட வேண்டும் என்று அப்பா முயற்சி எடுத்தார்; ஆனால் திருமணம் நடக்காமலே அவர் காலமாகிவிட்டார். அவரது ஆத்மா வில் மகளுக்குத் திருமணம் நடக்க வில்லை என்ற பதிவு இருக்கிறது. இப்பதிவு பிள்ளைகளுக்குள்ளும் ஏற் பட்டு விடுகிறது. "தங்கைக்குத் திரு மணம் ஆக வேண்டுமென்று முயற்சித் தார்; ஆனால் அதற்குள் அப்பா காலமாகிவிட்டார்" என்று பிள்ளைகள் நினைக்க, அந்த நினைப்பு அவர் களுக்குள் பதிந்து விடுகிறது.

இரண்டாவது பிள்ளை, தங்கைக்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்று நினைக்கிறார். இந்த நினைப்பு அவரது ஆத்மாவில் ஒரு பதிவை உருவாக்கு கிறது. இப்பதிவு, தங்கைக்குத் திருமண மாக வேண்டும் என்று ஏற்கனவே அங்கு உள்ள அப்பா, அம்மாவின் பதிவுக்கு இசைவாக இருக்கிறது. இந்த இசைவு அவரது அமைதியையும் ஆரோக்கியத்தையும் பெருக்கும்.



மாறாக, மூத்தபிள்ளை, "நாம் எடுத்துச் செய்தால், எல்லாம் நம் தலையில் விடியும்" என்று தங்கையின் திருமணத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளாத போது, அவர் உருவாக்குகிற பதிவு, தங்கைக்குத் திருமணமாக வேண்டுமென்ற அப்பாவின் பதிவுக்கு முரணாக அமைகிறது. இந்த முரண்பாடு அவரது உள்மன அமைதியையும், அவரது ஆரோக்கியத்தையும் குலைக்கும்.

அப்பா, அம்மா உடலோடு இல்லையென்றாலும் நமக்குள் இருக்கும் அவர்களது பதிவுகள் மூலமாக நமக்குள் அவர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அப்பாவோ அல்லது அம்மாவோ என்ன நினைத்தார்களோ, அதை நிறைவேற்றுகிற மகள் அல்லது மகனின் செயல் உருவாக்குகிற பதிவு அவர்களது பதிவுகளுக்கு இசைவாக அமைந்து, அவர்களது ஆத்மாவுக்குச் சாந்தி கிடைக்கும். இசைவான பதிவுகளே இனிமையான வாழ்க்கையின் ஆதாரம்.

இரண்டாவது பிள்ளையின் முயற்சியால், தங்கைக்குத் திருமணம் ஏற்பாடாகி, திருமணத்தில் மாங்கல்யம் அணியும் நேரத்தில் சற்றுத் தூரத்தில் நின்று அதைப் பார்க்கும் அந்தப் பிள்ளையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வருகிறது. இந்தக் கண்ணீர் பிள்ளையின் கண்ணீரல்ல, பிள்ளைகளுக்குள்ளிருக்கும் பெற்றோர்களின் கண்ணீர் அது.

ஒரு பெற்றோர்களுக்கு இரு பெண் பிள்ளைகள் என்று வைத்துக் கொள்வோம். அப்பா காலமாகிவிட்டார்; அம்மா இருக்கிறார். அப்பாவிற்குப் பிறகு, அம்மாவை எந்தப் பெண் பிள்ளை மிகவும் கனிவோடு கவனித்துக் கொள்கிறதோ, அந்தப் பிள்ளையின் செயலால் அப்பாவின் ஆத்மா சாந்தியடையும். அந்தப் பிள்ளைக்கு அப்பாவின் பரிபூரண ஆசியுண்டு.

பெற்றோர்களின் பதிவுகளுக்கு முரணாகச் செயல் செய்துவிட்டு, எந்த ஆற்றங்கரைக்கு எத்தனை முறை சென்றாலும் பயனில்லை. பொறுப்பற்ற செயல்களாலும் முரண்பட்ட செயல்களாலும் குமுறலை உள்ளே பெருக்கிக் கொண்டு வெளியில் ஆறுதலைத் தேடி அலைகிறோம். அவசரக் கோலத்தில் ஆற்றங்கரை ஓரத்தில் அள்ளித் தெளிப்பதால் ஆறுதல் வந்துவிடாது.

மாறாக, பெற்றோர்களை நன்றியுணர்வோடு நினைத்துப் பார்க்கும்போது, மகன் என்றாலும், மகள் என்றாலும் அவர்களுக்குள் இருக்கும் பெற்றோர்களது ஆத்மப் பதிவுகள் சாந்தியடைகின்றன.

நமது சகோதர, சகோதரிகளிடம் மிகுந்த இணக்கத்தோடும் அன்போடும் நடந்து கொள்ளும்போது நமக்குள் இருக்கிற பெற்றோர்களின் ஆத்மா சாந்தி அடைகிறது.

பெற்றோர்கள் நினைத்ததை நிறை வேற்ற முற்படாது, அவர்கள் நமக்குச் செய்த நன்மையை நன்றியோடு நினைத்துப் பார்க்காது, பெற்றோர்கள் பெற்ற மற்ற பிள்ளைகள்தானே நமது சகோதர, சகோதரிகள். பாகப் பிரிவி னைகள் நடக்கும்போது சகோதர சகோதரிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து அவர்களோடு நமது இணக்கத்தைப் பெருக்க முற்படாது, நாம் எங்கு சென்று, என்ன செய்து, என்ன பலன்?

பித்ருக்கள் நமது ஆத்மாவோடு கலந் திருப்பதால், நமது எண்ணமும் செய லும் அவர்களது ஆத்மப் பதிவுகளுக்கு இசைவாக இருக்க வேண்டும். இந்த இசைவை நாளும் நினைத்து மேலும் மேலும் பெருக்குவதற்கான ஒரு மனப் பயிற்சியே பித்ருக்கள் தவம்.

அமாவாசை, பௌர்ணமி தினங் களே மட்டுமின்றி, எந்த நாளிலும் மகனும், மகளும் இத்தவத்தைச் செய்ய லாம். நன்றி சொல்வதற்கு நாள் ஏது? பெற்றோர்கள் நம்மோடு வாழும் காலத் திலேயே இத்தவத்தைச் செய்து வரலாம்.

பித்ருக்கள் தவம் செய்முறை (இரு பாலருக்கும்) : ஒரு விரிப்பின் மீது, சுகா சனத்தில் அமர்கிறோம். முதுகை நேராக்கி, சுயநிலையில் எந்தவித இறுக் கமும் இன்றிக் கண்களை மூடி, கை விரல்களைக் கோர்த்து மடியில் வைத்து அமர்ந்திருக்கிறோம்.

நாம் அமர்ந்துள்ள இல்லம் முழு வதும் நல்ல தெய்வீக ஆற்றலே நிரம்பின.

நாம் அமர்ந்துள்ள வளாகம் முழு வதும் நல்ல தெய்வீக ஆற்றலே நிரம்பின.

நம்மைச் சுற்றியுள்ள வெளி எங்கும் நல்ல தெய்வீக ஆற்றலே நிரம்பின.

(மேலே உள்ள மூன்று வாசகங்களையும் மனதிற்குள்ளே சொல்லிக் கொள்ளவும்)

அருட் பேராற்றல் உடலிலே, உயி ரிலே அலை அலையாகப் பாய்வதை உணர்கிறோம். (மூன்று முறை சொல்லுதல்)

அருட் பேராற்றல் இரவும், பகலும் எல்லா நேரங்களிலும் எல்லா இடங் களிலும் எல்லாத் தொழில்களிலும் உறு துணையாகவும், பாதுகாப்பாகவும் வழி நடத்தியாகவும் அமையுமாக. (ஒரு முறை)

அன்னைக்கு வணக்கம், தந்தைக்கு வணக்கம், ஆசான் அருள்தந்தை அவர் களுக்கு வணக்கம். (ஒரு முறை)

பித்ருக்கள் தவம் : நான் இந்த உலகி னுள் நானாக வருவதற்குக் காரணங் களாக அமைந்த எனது பெற்றோர்கள், முன்னோர்கள், அவர்களுக்கும் முன்பு வாழ்ந்த உயிரினங்கள், அவற்றிற்கும் காரணமான பஞ்சபூதங்கள், பஞ்சபூதங் களின் பிறப்பிடமாகிய இறைவெளி என அனைத்தும் எனது பித்ருக்களே. எண்ணற்ற எனது பித்ருக்களில், நான் பார்த்து, பேசி, தொட்டுப் பழகிய பித்ருக்கள் எனது மூன்று தலைமுறை களே. இன்று அவர்களை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். எனது சிறு வயதில் அவர்களோடு கழித்த இனிமை யான நாட்களை நினைத்துப் பார்க் கிறேன். (மனதிற்குள் சொல்கிறோம்; பின்பு மூன்று நிமிடம் அந்த நாட்களை நினைத்து மௌனம்)

எனது இளம் வயதில், பள்ளி, கல்லூரி நாட்களில் பெற்றோர்கள் சொல்லிய அறிவுரைகள், எனக்காக அவர்கள் பட்ட சிரமங்கள் அனைத் தையும் நினைத்துப் பார்க்கிறேன். (மூன்று நிமிட மௌனம்)

பெற்றோர்கள் எல்லோருமே அவர்கள் பெற்ற பிள்ளைகள் ஒருவருக் கொருவர் ஒத்தும், உதவியும், பாசத் துடனும் வாழ்வதையே விரும்புவார்கள் என்பதை நான் அறிவேன். எனவே, நான் எனது சகோதர, சகோதரிகளிடம் இணக்கத்தோடும், பாசத்தோடும் வாழவே முற்படுவேன் என்று சங்கல்பம் செய்கிறேன். (மூன்று நிமிட மௌனம்)

தர்மம் மற்றும் கோயில் காரியங்கள், தங்கை மற்றும் தம்பியின் திருமணம் முதலிய செயல்களைப் பெற்றோர்கள் செய்ய நினைத்து அவர்கள் காலத்தில் அதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் அக்காரியங்களைச் செய்து முடிக்க நான் அனைத்து முயற்சிகளையும் மேற் கொள்வேன். (மூன்று நிமிட மௌனம்)

எனது நற்செயல்களாலும், தர்ம சிந்தனையாலும், பிறர் துன்பம் போக்குகிற அன்பினாலும் இந்தச் சமுதாயம் என்னைப் பாராட்டுகிறபோது எனக் குள்ளிருக்கும் எனது பெற்றோர்களின் ஆத்ம அலைப் பதிவுகள் மகிழ்ச்சியும் சாந்தமும் அடையும் என்பதை நான் அறிவேன். எனவே, பிறர் என்னைப் போற்றும் முகமாக நான் என்னைப் பக்குவப்படுத்திக் கொள்வேன் எனச் அறிவேன். (மூன்று நிமிட மௌனம்)

பெற்றோர்களில் ஒருவர் காலமாகி யிருந்தால், இருக்கும் மற்றவரை நல்ல முறையில் நாம் முடிந்த அளவுக்குக் கவனித்துக் கொள்கிற நமது செயலால் நமக்குள் இருக்கும் பெற்றோர்களின் ஆத்மா சாந்தியடையும் என்பதை நான் அறிவேன்.

(பெற்றோர்கள் காலமாகியிருந்தால்) எனது பெற்றோர்களின் அந்திம நாட் களில் அவர்களோடு நான் கழித்த நாட் களை நினைத்துப் பார்க்கிறேன். (மூன்று நிமிட மௌனம்)

மானசீகமாகப் பெற்றோர்களின் பாதம் தொட்டு வணங்கித் தவத்தை நிறைவு செய்கிறோம்.



சங்கல்பம் செய்கிறேன். (மூன்று நிமிட மௌனம்)

எத்தனையோ மனிதர்களின் உழைப் பில் வாழ்கிற நான், என்னைச் சுற்றி யுள்ள மனிதர்களுக்கு உதவும் வகையில் நான் என் திறமையையும், எண்ணங்களையும் வளர்த்துக் கொள் வேன் என உறுதி கூறுகிறேன்.

வாழ்க்கைத் துணைவரோடும், பெற்ற பிள்ளைகளோடும் ஓர் இனிமையான குடும்பத்தை உருவாக்கியிருக்கிறேன் என்று நான் நினைக்கும்போது, அந்த நினைப்பு உருவாக்குகிற ஆத்ம பதிவுகள் எனது பெற்றோர்களின் பதிவுகளுக்கு இசைவாக இருக்குமென்று நான்

ஓம் சாந்தி! சாந்தி சாந்தி!

தவத்தில் நாம் கூறிய அனைத்தும் பெற்றோர்களிடம் நாம் எடுத்துக் கொண்ட சத்தியப் பிரமாணமாகும். இந்தப் பிரமாணம் நம்மையும் மேம்படுத்தும்; நமது பெற்றோர்களின் ஆத்மாவிற்கும் சாந்தியைத் தரும்.

பெற்றோர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் இடையே நிகழும் ஆத்மப் பரிவர்த்தனையே பித்ருக்கள் தவம்.

பித்ருக்களை நினைத்து நாம் ஆற்றும் அகத்தவத்தை விடவா ஆற்றங்கரை பெரிது?



ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 36 செப்டம்பர் 2018 இதழ் : 8

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **த. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் :
சக்தி சுகர்ஸ் லிமிடெட்.

E-mail :
omsakthieditorial@gmail.com



சமையல்

சிறுதானிய மாவு பிஸ்கட்

தேவையானப் பொருட்கள் : சிறுதானிய மாவு : 1 கப், கோதுமை மாவு : 1/4 கப், நாட்டுச் சர்க்கரை : 1 கப், வெண்ணெய் : 2 டீஸ்பூன், எண்ணெய் : பொரிக்கத் தேவையான அளவு.

செய்முறை :

1. நாட்டுச் சர்க்கரையைப் பொடித்து வெண்ணெய்யுடன் சேர்த்துக் குழைக்கவும்.
2. அதனுடன் சிறுதானிய மாவு, கோதுமை மாவு சேர்த்துத் தண்ணீர் சேர்த்துச் சப்பாத்தி மாவுப் பதத்திற்குப் பிசைந்து கொள்ளவும்.
3. கல்லில் மாவைத் திரட்டி, டைமண்ட் வடிவில் வெட்டிக் கொள்ளவும்.
4. வாணலியில் எண்ணெய் விட்டுச் சூடாக்கிப் பொரித்து எடுக்கவும். ஆறியதும் காற்றுப் புகாத டப்பாவில் போட்டு வைக்கவும்.

குழந்தைகளுக்குச் சத்தான, உடலுக்கு ஆரோக்கியம், வலிமை அளிக்கும் அற்புத நொறுக்குத் தீனி 'சிறுதானிய மாவு பிஸ்கட்'.

– பி.கே. பிரேமிகா,
சென்னை–11

இம்மாத ராசி பலன்

**“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”**

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.9.2018 அன்று கோள்கள் நிலை

	சந்திரன்		
	01.9.2018 சுக். – துலாம் 02.9.2018 புதன் – சிம்மம் 17.9.2018 சூரியன்–கன்னி 18.9.2018 புதன் – கன்னி 06.9.2018 சனி – (வக்ர நிவர்த்தி)		புதன் ராகு
கேது செவ்.			சூரியன்
சனி (வ)		குரு	சுக்கிரன்

மேஷம்



அறிவு, ஆற்றல், புகழ், சாதனை முதலியவற்றை அடையத்தக்க மேஷ ராசி அன்பர்களே! இம்மாதம் முற்பாதியில் சூரியன் 5–ஆமிடத்தில் புதனுடன் சஞ்சரிப்பதால் குழப்பம், தடைகள், முடிவெடுக்க இயலாத சூழ்நிலை, அரசாங்கக் காரியங்களில் இடர்ப்பாடுகளை அடையக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் சூரியன் 6–ஆமிடத்தில் சஞ்சரிக்க இருப்பதால் தொழில்வழி அனுகூலம், தன லாபம், காரிய சித்தி, புதிய முயற்சிகளில் வெற்றி முதலிய பலன்களை அடைவீர்கள். குரு – சுக்கிரன் 7–ஆம் வீட்டில் சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால் சுப காரியங்கள் ஈடேறும். தன லாபம், பொருள் லாபம், சூழ்நிலை மாற்றம் கிட்டும்.

சனி 6–ஆம் தேதி முதல் வக்கிர நிவர்த்தியாகி 9–இல் சஞ்சரிப்பதால் தடைகள் யாவும் அகன்று விடும். 4–ஆம் வீட்டில் ராகு சஞ்சரிப்பதால் பயணங்களில் நன்மையுண்டு. 10–இல் கேது – செவ்வாய் சஞ்சரிப்பதால், நிதித்துறை, பங்கு வர்த்தகம், திரைப்படத்துறை, நிலம் – பூமி சம்பந்தப்பட்ட தொழில் துறையில் இருப்போர் மிகவும் மேன்மை அடைவர். ஒரு சிலருக்குப் பாராட்டும், பரிசும் கிட்டும். பொது வாழ்வில் உள்ளவர்கள் ஆன்மிகத்துறையில் உள்ளோர் சிறப்படைவர். புதன் அனுகூலமாகச் சஞ்சரிப்பதால் குறிப்பாக 18–ஆம் தேதி முதல் உறவினர் வகையிலும், கல்வி கேள்விகளிலும் நற்பலன் உண்டாகும்.

ரிஷபம்



பிறருக்கு உழைப்பது, உணர்ச்சிகளுக்கு அடிமையாவது, தன்னைத்தானே நம்பாதது, பேச்சுச் சாமர்த்தியம் முதலியவற்றைக் குறிக்கும் ரிஷப ராசி அன்பர்களே! இம்மாதம் முற்பாதியில் அலைச்சலும், சோர்வும், வீண் பகையும் அடையக்கூடும். மாதத்தின் பிற்பாதியில் குழப்பம் ஏற்படும். காரியத்தடைகளைச் சந்திக்க வேண்டி வரும். இம்மாதம் புதிய முயற்சிகளில் இறங்க வேண்டாம். தொழில் உத்தியோகத் துறைகளில் பெரிய அளவில் அனுகூலங்கள் ஏற்பட வாய்ப்பில்லை.

6–ஆம் வீட்டில் குரு சஞ்சரிப்பதால், கடன்பட நேரிடலாம். தேவைப்படுபவர்கள் முயற்சிக்கலாம். மிகவும் வயதானவர்களாக இருப்பின் உடல் நிலையில் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சிலருக்கு வயிற்று உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சனி 8–ஆம் வீட்டில் நேர்கதியில் சஞ்சரிப்பதால் காரியத் தடைகள் சகஜமாக ஏற்படும். தடைகளைக் களைவது உங்கள் தன்னம்பிக்கையைப் பொறுத்த விஷயம். ராகு 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால்

வெளியூர் அல்லது வெளிதேச யாத்திரைக்குச் சிலருக்கு வாய்ப்பு ஏற்படும். 9–ஆம் வீட்டில் செவ்வாய் – கேது சஞ்சரிப்பதால் கால பைரவர், சுப்பிரமணியர் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வருவது நலம் பயக்கும். சுமாரான மாதம்.

மிதுனம்



பொறியியல் துறை நிபுணத்துவம், கலை, இசை யார்வம், இருவித எண்ணங் கள், பிறர் யோசனை கேட்டு நடப்பது முதலிய குணங் களைக் குறிக்கும் மிதுன ராசி அன்பர்களே! இம்மாதம் முற் பாதி அனுகூலமாகக் காணப் படுவதால் தொழில், உத்தியோகத் துறைகளில் நன்மையும், தன லாபமும், முயற்சி பலிதமும் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் உடல் உபாதை யும் அதிகச் சோர்வும், செலவும், குடும்பக் கவலை அதிகரிப்பதும் ஏற் படக்கூடிய பலன்களாகும். குரு – சுக்கிரன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் அதிர்ஷ்டம் உண்டாகும். எதிர்பாராத நன்மை ஏற்பட வாய்ப்புண்டு. சுப காரியங்கள் ஒரு சிலருக்குக் கைகூடும்.

7–ஆம் வீட்டில் 6–ஆம் தேதி முதல் சனி நேர்கதியில் சஞ்சரிப்பதால் கூட்டுத் தொழில், கூட்டாளிகள், வயதானவர்கள் விஷயங்களில் எச்சரிக்கை வேண்டும். உடல் சோர்வு அடிக்கடி தலைகாட்டும். வண்டி வாகனங்கள் ஓட்டுவதில் கவனம் தேவை. செவ்வாய், கேது 8–இல் சஞ் சரிப்பதால் மின்சாரச் சாதனங்களை எச்சரிக்கை யுடன் கையாள வேண்டும். மருந்து, மாத்திரைகள் உட்கொள்வோர் ஒரு முறைக்கு இரு முறையாகக் கவனித்து உரிய மருந்துகளை உட்கொள்ள வேண்டும். சில நேரங்களில் பொய்யும், சில நேரங் களில் மெய்யும் பேசக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்பட லாம்.

கடகம்



பந்த பாசங்களுக்குக் கட்டுப்படுவதும், சலன மனப் போக்கும், ஏற்ற இறக்கமான வாழ்க்கையும், பிடிக்காதவர் களிடமிருந்து ஒதுங்கிக் கொள் ளும் சாமர்த்தியமும் உடைய கடக ராசி அன்பர்களே! இம் மாதம் முற்பாதியில் தனம், பொருள் வரவுண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்படும். மாதத்தின் முற்பாதியில் ஏற்படக்கூடிய நன்மைகளைவிட, பிற் பாதியில் அதிக நன்மைகளை ஏற்படுத்தும். லாபம் உண்டு. சுக்கிரன் – குரு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சுப காரியச் செலவுகள், குடும்பச் செலவுகளுக்கு இம்மாதம் பஞ்சமிருக்காது.

ராசி மீது ராகு சஞ்சரிப்பதால், அவ்வப்போது இனந்தெரியாத நோய் நொடிகளுக்கு ஆளாவீர் கள். 7–ஆம் வீட்டில் செவ்வாய் – கேது சஞ்சரிப்ப தால், கணவன் – மனைவி சண்டை, சச்சரவு களுக்கும் குறைவிருக்காது. 6–இல் சனி 6–ஆம் தேதி முதல் வக்கிர நிவர்த்தியாகிச் சஞ்சரிப்ப தால், வசதி வாய்ப்புகள் சிலருக்கு அதிகரிக்கும். குழப்பங்கள் அகன்றுவிடும். திருமணக் காரியங் கள் அக்டோபர் மாதத்திற்கு மேல் ஈடேற வாய்ப் புண்டு. புதிய முயற்சிகளை பிற்பாதியில் தொடங்க லாம்.

சிம்மம்



ஆளுமை, அடங்காமை, ஆன்மீகம், மருத்துவம், அர சாங்கம் தொடர்புடைய பணி களில் கடமையாற்றுவது முத லிய பண்புகளைக் கொண்ட சிம்ம ராசி அன்பர்களே! இம் மாதம் முற்பாதியில் உங்களின் ஆன்ம பலம் ஓங்கி இருக்கும். பற்பல சிந்தனைகளுக்கு ஆட் படுவீர்கள். உஷ்ண பீடிதம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் உங்களின் யதார்த்தமான சிந்தனை, செயல்கள் மூலம் நன்மதிப்பை அடைவீர்கள். மூன் றாம் வீட்டில் குரு – சுக்கிரன் சஞ்சரிப்பதால், தற் பெருமை கொள்ள வேண்டாம். உணர்ச்சிவசத்தில் உடனடி முடிவுகளை எடுக்க வேண்டாம். கண் ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய் என்ற பழமொழியை மறக்க வேண்டாம்.

6–ஆம் தேதி முதல் சனி 5–ஆம் வீட்டில் நேர்கதியில் சஞ்சரிப்பதால் குழந்தைகளைப் பற்றி அதிகம் சிந்திக்கத் தோன்றும். சில நேரங்களில் கடினமாகவும், கடுமையாகவும் நடக்க வேண்டி வரலாம். 6–ஆம் வீட்டில் செவ்வாய் – கேது இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால், யார் மீதேனும் வழக்குத் தொடர விரும்பினால் தாராளமாக இறங் கலாம். நிச்சயம் வெற்றியுண்டு. சுப காரியங்கள் ஈடேறுவது கேள்விக்குறியாகும்.

கலையார்வம், எழுத்தாற்றல், பேச்சாற்றல், தந்திர உபாயங்களில் தேர்ச்சி பெற்ற கன்னி ராசி அன்பர்களே! இம்மாதம் முற்பாதியில் சுபச் செலவு கள் உண்டு. அரசாங்கப்பீடை சிலருக்கு ஏற்படும். குழந்தைகளால் கஷ்ட நஷ்டம் ஏற்படலாம். மாதத் தின் பிற்பாதியில் ராசி மீது சூரியன் சஞ்சரிப்ப தால் பற்பல சிந்தனைகளுக்கு ஆட்படுவீர்கள். சலன மனதுடன் காணப்படுவீர்கள். செலவுகளும்



அதிகப்படும். சுக்கிரன் – குரு இரண்டில் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால், சுப காரியங்கள் சிலருக்கு நடைபெற வாய்ப் புண்டு. பண வரவும் எதிர் பார்க்கலாம்.

சனி 6–ஆம் தேதி முதல் 4–ஆம் வீட்டில் நேர்கதியில் சஞ் சரிப்பதால், குடும்பக் கவலை அதிகப்படும். செவ் வாய் – கேது 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் புத்திர வர்க்கத்தாருக்கு நல்லதல்ல. நீங்களாக எந்த ஒன்றையும் திடமான சிந்தனையுடன் செய்ய இயலாது. அடிக்கடி மனதை மாற்றிக்கொள்வீர் கள். மன விரக்தி அவ்வப்போது ஒரு சிலருக்கு ஏற்படும். ராகு லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் மாற்றார்கள் மூலமான உதவியும், நன்மையும் கிட்டும். புதன் மாதத்தின் பிற்பாதியில் உங்களுக் குச் சில நன்மைகளை ஏற்படுத்தக்கூடும். விரைந்து முடிவு செய்து காரியங்களைச் செயல் படுத்துவதால் அவ்வாறான நன்மைகள் ஏற்பட லாம்.




பொது வாழ்வில் தொடர்பு கொள்ளுதல், அழ குணர்ச்சி, நியாய அநியாயங் களை அலசிப் பார்த்தல், உல் லாச வாழ்வை அனுபவித்தல் முதலியவற்றிற்குப் பெயர் பெற்ற துலாம் ராசி அன்பர் களே! இம்மாதம் முற்பாதியில் சூரியன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் தன வசதி கூடும். வெளியூர்ப் பயணங்களில் அனுகூலம் உண்டாகும். பொருள் வரவு ஏற்படும். வியாஜ்ஜியங்களில் நன்மை கிட்டும். மாதத்தின் பிற்பாதியில் அத்தியாவசியச் செலவுகள், பயணம், அலைச்சல் இவற்றை அடைய நேரிடும். சுக்கிரன் – குரு ராசி மீது சஞ் சரிப்பதால், நல்ல தோற்றமும், இளமையுணர்வும் உங்களிடம் வெளிப்படும்.

சனி 6–ஆம் தேதி முதல் நேர் கதியில் சஞ்சரிப்பதால், வசதிகள் கூடும். புதிய தொழில், உத்தியோக முயற்சிகளில் முன்னேற்றம் உண்டாகும். தைரியம், தன்னம்பிக்கை கூடும். செவ்வாய் – கேது 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பெரியோர் பேச்சைக் கேட்டு நடப்பது நல்லது. ராகு 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், பயணங்களில் கவனம் வேண்டும். தொழில் துறையில் மாற்றங் கள் செய்ய நினைத்தாலும் கைகூடுவது சந்தேகம் தான். திருமணம் முதலிய சுப காரியங்கள் இனிக் கைகூடும். வரும் ஆண்டு சுப காரியங்கள் ஈடேற நல்ல தருணமாகும். புது முயற்சிகளை மாதத்தின் முற்பாதியில் தொடங்க நல்லது. ஒரு சிலர் மாதத் தின் பிற்பாதியில் அரசாங்க நிந்தனையை அடைய நேரலாம்.



தத்துவ மார்க்கங்களை மற்றவர்க்குப் போதிப்பது, எதையும் முன்னெச்சரிக்கை யுடன் செய்வது முதலியவற் றிற்குப் பெயர் பெற்ற விருச்சிக ராசி அன்பர்களே! இம்மாதம் முழுவதும் உங்களுக்கு யோக மானதே! மாதத்தின் முற்பாதி யில் தொழில் உத்தியோகத் துறைகளில் சிறப்படைவீர்கள். பொருளாதாரம் உயரும். மாதத்தின் பிற்பாதியில் நானாவிதப் பொருள் லாபம், நண்பர் உதவி, பிரமுகர்கள் சந்திப்பு முதலியவை ஏற்படும். சுக்கிரன் – குரு 12–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், சுக போகங்கள் ஏற்படும்.

சனி வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், சொல் பலிதம் ஏற்படும். பணம் வரும், போகும். மிச்சப்படுத்த இயலாது. மூன்றில் செவ்வாய் – கேது சஞ்சரிப்பதால் துணிச்சலும், ஆண்மைக் குணமும் அதிகமாகவே உங்களிடம் வெளிப்படும். ஒரு சிலர் உடன் பிறந்த சகோதர வர்க்கத் தாருடன் பிரச்சனைகளை அடைவர். 9–இல் ராகு சஞ்சரிப்பதால் தூர தேசத்திலிருந்து செய்திகள் வந்தடையும். வெளிதேச வர்த்தகத்தில் ஈடுபட் டிருப்போர் பொறுமையுடன் தங்கள் தொழிலை நடத்திச் செல்ல வேண்டும்.



நிலையான கொள்கை, கோட்பாடுகள், கருத்துப்போர் செய்தல், பொதுஜனச் சேவை செய்தல், பாதுகாப்புத் துறை யில் பணி செய்து பெயர் பெற் றல் முதலியவற்றிற்கு உகந்த ராசியான தனுசு ராசி அன்பர் களே! மாதத்தின் முற்பாதியில் காரியத்தடைகள் ஏற்பட்டாலும் பலதரப்பட்ட தொடர் முயற்சிகளால் காரிய சித்தியை அடையலாம். மாதத்தின் பிற்பாதியில் உங்கள் நீண்ட நாள் முயற்சி கனவு நனவாகும். தொழில் உத்தியோக லாபம் ஏற்படும். சுக்கிரன் – குரு 11–இல் சஞ்சரிப்பதால் ஆடம்பரப் பொருள் லாபமாகும். பெண்கள் மூலம் நன்மை ஏற்படும். ஒரு சிலருக்குப் பெரும் தொகை உதவியாகவோ, கடனாகவோ கிடைக்க வாய்ப்புண்டு.

இரண்டில் செவ்வாய் – கேது சஞ்சரிப்பதால், செலவு செய்ய வேண்டிய நேரத்தில் கருமியாகவும், கருமியாக இருக்க வேண்டிய நேரத்தில் செல வாளியாகவும் இருப்பீர்கள். 8–இல் ராகு இருப்ப தால், தடைகள் பல ஏற்படும். எந்தப் பிரச்சனை யையும் அலசி ஆராய்ந்து செயல்படுவது நல்லது. தடித்த வார்த்தைப் பிரயோகம் கூடாது. மங்கள காரியங்கள் ஈடேறும். புதன் 9, 10–ஆம் இடங் களில் சஞ்சரிப்பதால், யோசனை சொல்லலாம் அல்லது கேட்கலாம்.

மகரம்



விசுவாசம், நிர்வாகத் திறமை, திறமையாக வியாக்கி யானம், மற்றவர்களை அனு சரித்து வாழும் அமைப்புடைய மகர ராசி அன்பர்களே! இம் மாதம் சற்றுச் சோதனைகள் ஏற் படலாம். மாதத்தின் முற்பாதி யில் அவ்வாறான சோதனை கள், அதே சமயம் சில வேதனை களும் ஏற்படலாம். மாதத்தின் பிற்பாதியில் காரியத் தடைகளும், பலதரப்பட்ட தொடர் முயற்சி களால் அற்ப நன்மைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. 6–ஆம் தேதி முதல் உங்களுக்கு ஏழரைச் சனி யின் தாக்கம் என்னவென்று உணரத் தொடங்கு வீர்கள். புதிய முதலீடுகள் செய்யலாம், வரவு இருக்காது. சுபச்செலவுகளை மேற்கொள்ளலாம். இடம் பெயர்ந்து வேற்றிடம் சென்று வாழலாம்.

பெண்களாக இருப்பின் மண வாழ்க்கையின் காரணமாகப் புகுந்த வீட்டிற்குச் செல்லும் வாய்ப் புண்டாகும். வரும் ஓராண்டில் திருமணக் காரியங் கள் கைகூடும். 10–இல் குரு, சுக்கிரன் சஞ்சரிப்ப தால், கௌரவப் பிரச்சனைகள் ஏற்படலாம். வெட் கம், மானம் பார்த்தால் சோறு உண்ண முடியாது. இன்னும் 2 மாதங்களில் வாழ்க்கையில் சிலருக்கு நல்ல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. 7–ஆம் வீட்டில் ராகு சஞ்சரிப்பதாலும், ராசி மீது செவ்வாய் – கேது சஞ்சரிப்பதாலும் கோப தாபங்கள் கூடாது. அமைதியான செயல் திறனே வெற்றியளிக்கும்.

கும்பம்



மர்மங்கள் நிறைந்தவர் களும், தத்துவ மார்க்கங்களில் பற்றுள்ளவர்களுமான கும்ப ராசி அன்பர்களே! இம்மாதம் முற்பாதியில் பிரச்சனைகளைச் சமாளித்து விடுவீர்கள். ஆனால், மாதத்தின் பிற்பாதி யில் எதிர்பாராத செலவும், சம்பவங்களும், தேக நலிவும், திடீர் மாற்றங்களும் உங்களைச் சற்றே பயம் கொள்ளச் செய்யலாம். இருப்பினும் செவ் வாய் – கேது – குரு முதலிய கிரகங்கள் சாதக மாகச் சஞ்சரிப்பதால், சில நன்மைகளும் கிட்ட லாம். தேங்கிய பணிகள் மீண்டும் முடக்கம் பெறும். ஆன்மீகவாதிகள், அரசியல் பிரமுகர்கள், உத்தியோகஸ்தர்களின் நட்பும், அவர்களால் லாபமும் கிட்ட வாய்ப்புண்டு.

சனி 6–ஆம் தேதி முதல் 11–இல் நேர்கதியில் சஞ்சரிப்பதால், தொழில் – உத்தியோகத் துறை களில் நன்மை ஏற்படலாம். பணியாளர்கள் பிரச் சனை வந்தகலும். குரு பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் கல்யாண காரியங்கள் சிலருக்கு நிறைவேறும். சுக்கிரன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்ப தாலும், குரு சேர்க்கை பெறுவதாலும் உயர்ந்த வஸ்துக்கள் வாங்கலாம். தூர தேசத் தொடர்பு டையவர்கள் நல்ல செய்திகளைக் கேள்விப்படுவர். 18–ஆம் தேதி முதல் புதன் உறவினர்கள், இன பந்துக்கள், புத்திர வர்க்கத்தாரால் செலவினங் களை ஏற்படுத்தக்கூடும். புதிய முயற்சிகள் இம் மாதம் வேண்டாம்.

மீனம்



இருவித வாழ்க்கை, எதி ரும் புதிருமான செயல்கள், போதனை செய்தல், நீதி நெறி களில் நம்பிக்கை, தலைமை தாங்கும் தகுதியுடைய மீன ராசி அன்பர்களே! இம்மாதம் முற்பாதியில் தொழில் உத்தி யோகத் துறைகளில் அனு கூலம் அடைவீர்கள். மனத் தெளிவுடன் எக்காரியத்தையும் செய்வீர்கள். மாதத்தின் பிற்பாதியில் குழப்பம், சங் கடம், குடும்பத்தில் விரோதம், செலவு இவற்றால் மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். சனி 10–ஆம் வீட்டில் 6–ஆம் தேதி முதல் நேர்கதியில் சஞ்சரிப்ப தால், பணியாளர் மூலமான சிக்கல்கள் ஏற்பட்டுப் பின்னர் சரியாகும்.

சுக்கிரன் – குரு 8–இல் சஞ்சரிப்பதால், ஆடம் பரப் பொருள்களைச் சிலர் அடமானம் வைக் கவோ, பின்னப்படுத்தவோ கூடும். 11–இல் செவ் வாய் – கேது சஞ்சரிப்பதால் தனம், பொருள், சொத்து சேர்க்கை ஒரு சிலருக்குக் கிட்ட வாய்ப்புண்டு. ராகு 5–இல் சஞ்சரிப்பதால், உயிரி யல் சம்பந்தப்பட்ட கல்வி பயில்பவர்கள் வெற்றி அடைவர். கல்யாண காரியம் மாதத்தின் முற் பாதியில் ஒரு சிலருக்குக் கிட்டும். புதன் 18–ஆம் தேதி முதல் குழந்தைகளால், வாழ்க்கைத் துணைவரால் செலவினத்தை ஏற்படுத்தக்கூடும்.

கட்டுரை



கு.ப.ரா.–விடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் கும்பகோணம் பட்டாபிராமய்யர் மகன் ராஜகோபாலனின் (கு.ப.ரா.) இடம் ஒரு தனி இடம் ஆகும். இன்னும் தெளிவாகச் சொல்வதெனில், கு.ப.ரா. வகித்த இடத்தை, அவருக்கு முன்னும் பின்னும் யாரும் வகித்ததில்லை.

அப்படி ஓர் இடத்தை அவருடைய எழுத்து அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. அப்படி ஒரு நிறைவான எழுத்து ஆளுமையிலிருந்து, அவருக்குப் பின் வந்த படைப்பாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிரம்பவே உண்டு.

கு.ப.ரா. நாவல்கள், நாடகங்கள், திறனாய்வுகள், கவிதைகள் என்று பன்முகமாகப் படைப்புகள் தந்திருந்தாலும் அவர், அவருடைய சிறுகதைகளுக்காகவே முதன்மை பெறுகிறார்; சிறுகதையாளராகவே அறியப் பெறுகிறார்; ஆராயப் பெறுகிறார். இப்போது சிறுகதை எழுதுகிறவர்களும், இனி வருங்காலத்தில் எழுத வருகின்றவர்களும், கு.ப.ரா.–வின் சிறுகதைகளிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நுணுக்கமான பாடங்கள் ஏராளம் இருக்கின்றன.

அவற்றை தி. ஜானகிராமன், சி.சு. செல்லப்பா, என்.ஆர்.தாசன், கோ.கேசவன் முதலிய சிந்தனையாளர்கள் அவரவர் அணுகுமுறைகளில், பல செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார்கள். ‘‘தந்தத்தில் சிற்பங்களைச் செதுக்கும் ஒரு கலைஞனின் கவனமும், ஈடுபாடும் கு.ப.ரா.–வின் கதைகளில் புலப்படுகின்றன. மனித உணர்ச்சிகளின் மிகநுட்பமான சாயைகளை அவர் வர்ணிக்கும்போது அவர் கையாண்ட சொற்செட்டு பிரமிப்பைத் தருகிறது. அவசியமற்ற ஆசிரியத் தலையீடு கு.ப.ரா.–வில் இல்லை; பட்டுப்போன்ற சொற்கள், பத்துப் பக்கத்துக்கும் மேற்படாத சிறுகதைகள்... ஒவ்வொரு சொல்லுக்குள்ளும், ஒவ்வொரு வரிக்குள்ளும் ஓர் ஓவியம்’’ என்று தி. ஜானகிராமன் பதிவு செய்திருக்கிறார்.


‘‘சிக்கனமான சொற் பிரயோகம்; அதற்குச் சிறந்த உதாரணம் கு.ப.ரா. படைத்த ‘நூருன்னிசா’ என்று சி.சு. செல்லப்பா சுட்டிக் காட்டுகிறார். ‘‘வார்த்தை வார்த்தையாய் வரி வரியாய்க் கதை வளரும்; கதையின் வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கே இல்லையோ என்று சந்தேகப் படுகின்ற அளவுக்கு அவர் மறைந்து கொள்வார்’’ என்று என்.ஆர்.தாசன் திறனாய்ந்து கூறுகிறார்.

உபாலி

‘‘கு.ப.ரா.–வில் சமூக உறவுகளின் அடிநிலையில் எழும்பும் சமூக வேறுபாடுகள் உள்ளடக்கம் ஆகின்றன... கு.ப.ரா.–வுக்குச் சம்பவங்கள்

முக்கியமல்ல; கு.ப.ரா.–விடம் உருவமும் உள்ளடக்கமும் இயைந்து நிற்கின்றன; கு.ப.ரா.–வில் தேவையற்றது என்று எதுவும் இல்லை'' என்றெல்லாம் திறனாய்வாளர் கோ.கேசவன் எடுத்துரைக்கின்றார்.

கு.ப.ரா. சில கதைகளில் பாலுணர்வுகளுக்கு முக்கியத்துவம் தந்துவிட்டார் என்று தொடக்க காலத்தில் ஒருசிலர் விமர்சனமாக எடுத்துரைத்தார்கள். எனினும் தமிழ் விமர்சன உலகம் அதனை ஏற்கவில்லை. பெண்ணுலகத்தின் மிக மென்மையான ஆற்றாமை உணர்வுகளைத்தான்



கு.ப.ரா. வெகு நாகரிமான முறையில் எழுத்தாக்கினார்; எந்த இடத்திலும் பெண்மை தரம் தாழ்த்தப்படவில்லை என்ற விமர்சனமும் ஆரம்பத்திலேயே முன்வைக்கப்பட்டுவிட்டது.

இந்தக் கருத்துக்களின் பின்னணியில் ''சிறுகதை'' என்ற படைப்பிலக்கிய ஆக்கம் பற்றி, கு.ப.ரா. என்ன கருதியிருந்தார் என்ற அவரது சொந்தக் கருத்தையும் நாம் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

1944 ஜூன் – கலாமோகினி இதழில் கு.ப.ரா. ''சிறுகதை'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார். ஒரு சிறுகதையாளரே 'சிறுகதை' என்னும் படைப்பு பற்றி, அதன் இலக்கணங்களை வரையறுத்து விளக்குவது ஓர் அபூர்வமான அனுபவம். ''ஒரு நிகழ்ச்சி, ஒரே இடம், ஒரே காலம்; என்ற புள்ளியில் தொடங்கும் விஸ்தரிப்பே சிறுகதை; ஒரு சிறுகதை என்பது சம்பவங்களின் தொகுப்பல்ல'' என்று கு.ப.ரா. சிறுகதைக்கான இலக்கணங்களை வரையறுக்கின்றார். 'பூர்வாங்கம்' என்று சொல்லப்படுகின்ற சம்பவங்கள் அதிகப்பட்டுவிடக் கூடாது என்று கு.ப.ரா.–வின் மிக முக்கியமான எச்சரிக்கை ஆகும்.

ஆக, கு.ப.ரா. என்ற சிறுகதைப் படைப்பாளி, ஒரு சிறுகதையில், உருவம், உள்ளடக்கம் இவை இரண்டும் இயைந்து அமைகின்ற ஒருமைப்பாடு பற்றி மிகவும் அக்கறையும் உணர்வும் கொண்டிருந்தார் என்றும், இந்த உணர்வினால் அவர் தமது சிறுகதைப் படைப்பில் சிக்கனமான சொற் பிரயோகத்தால், சம்பவங்களைக் குறைத்து மிகச் சிறந்த படைப்புகளைத் தந்து வெற்றி பெற்றார் என்றும் நாம் உணர்ந்து கொள்ளலாம்.


கு.ப.ரா.–வின் சிறுகதைகளைப் பார்க்கும்போது, அவை அனைத்தும் (ஒன்றிரண்டு நீங்கலாக) சமுதாயத்தின் மீதான விமர்சனமாகவே அமைகின்றன. இலக்கியப் படைப்புக்கு நோக்கம் என்று ஏதேனும் உண்டா? என்று ஒருமுறை இளைய மாணவர்கள் மக்சிம் கார்க்கியிடம் கேட்டார்கள். அப்போது கார்க்கி, ''ஆம், உண்டு, நிச்சயமாய் உண்டு, ஓர் இலக்கியப் படைப்பு சமுதாயத்தை விமர்சிப்பதாய், எதிர்த்துப் போராடுவதாய் இருக்க வேண்டும்'' என்று சொன்னதாகச் சோவியத் நாட்டு இலக்கிய வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

கு.ப.ரா.–வின் சிறுகதைகள் உள்ளடக்க அடிப்படையில் விமர்சிப்பனவாகவும், போராடும் தன்மை உடையனவாகவும் அமைகின்றன. அந்தச் சிறுகதைகளை கு.ப.ரா. சம்பவங்களைச் சுருக்கி, மிகுந்த சொற்சிக்கனத்தோடு ஓவியமாய், சிற்பமாய்ச் சமைத்துத் தந்திருக்கிறார். சொற்சிக்கனம், சம்பவங்கள் குறைப்பு, கூர்மையான உள்ளடக்கம் ஆகிய இவை மூன்றுமே கு.ப.ரா.–விடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான படைப்பியல் நேர்த்திப் பாடங்கள் எனலாம்.

சொற்சிக்கனம், சம்பவங்கள் குறைப்பு, கூர்மையான உள்ளடக்கம் என்பதான, கு.ப.ரா. தரும் படைப்பிலக்கியப் பாடங்களுக்கு, மிகச்சிறந்த உதாரணங்கள் அவருடைய சிறுகதைகளில் பல உள்ளன. உதாரணத்துக்காக, இங்கே "தாயாரின் திருப்தி", "பண்ணைச் செங்கான்" என்ற இரண்டு கதைகளை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.



தி.ஜானகிராமன்



சி.சு.செல்லப்பா

"தாயாரின் திருப்தி" என்ற சிறுகதை, ஏறத்தாழ இரண்டே பக்கங்கள் கொண்ட சின்னக் கதை. சமுதாயத்தில் நிலவி வரும் ஒருவித மூடநம்பிக்கை மீது கடுமையான விமர்சனத்தை முன்வைக்கிறது இந்தக் கதை. 'இறந்துபோன மூதாதையர்கள், மேல் உலகத்தில் நலமாக இருக்க வேண்டுமென்றால், அவர்களுக்காக, அவர்கள் பெயரில் திதி கொடுப்பது என்பது இந்துக் குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாக நிகழ்ந்து வரும் ஒரு நிகழ்வு.

அதற்கென்று புரோகிதர்கள் இருக்கிறார்கள். திதி நாளன்று வரவழைக்கப்படுவார்கள்; சடங்குகள் நடைபெறும்; இதனால் மேலுலகத்தில் வாழும் மூதாதையர்களின் பசி தீரும் என்பது நம்பிக்கை. இது இந்து சமுதாயத்தில் நிலவுகிற மூடநம்பிக்கை; இது தேவையற்றது. நான்கு புரோகிதர்களை அழைத்து சிரார்த்தம் செய்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் மேலுலகத்தில் இருக்கும் மூதாதையரின் பசி தீருமா?' என்று எதிர்ச் சிந்தனை கொள்கிறார் கு.ப.ரா. திராவிட இயக்கத்தார் ஆயிரம் மேடைகள் கட்டி முழங்கிவந்த மூடநம்பிக்கை எதிர்ப்புச் சிந்தனையை கு.ப.ரா. இந்தச் சிறுகதை மூலம், இரண்டே பக்கங்களில் வெகு நளினமாக, மிக உறுதியாக, சாதித்துக் காட்டிவிட்டார்.

சுந்தரேசய்யரின் தாயாருக்குச் சிரார்த்தம். புரோகிதர்களின் சாப்பாடும் முடிந்து அவர்கள் "திருப்தி" மொழிந்து புறப்படுகிற நேரம். சுந்தரேசய்யரின் மூன்று வயதுக் குழந்தை ஓடிவந்து, "அப்பா, வாசல்லே பாட்டி வந்திருக்கா, சாதம் வேணுமாம்" என்று சொல்கிறது.

'பாட்டிக்குத் தானே வீட்டுக்குள் திதி நடக்கிறது; வாசல்லே பாட்டி என்றால் அது யார்? அதுவும் சாதம் வேண்டுமாமே!' என்று குழம்பிப் போன சுந்தரேசய்யர் வாசலுக்கு ஓடுகிறார். "ஐயோ, கிறுகிறுன்னு வருதே, இந்தப் பாவி ஊர்லே ஒரு பிடி சோறு போடறவங்க இல்லையா" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள் ஒரு கிழவி. உள்ளே ஓடிவந்த சுந்தரேசய்யர் பிண்டத்தை எடுத்து, தீர்த்தக் கலசத்தில் கரைத்துக் கிழவியின் குவளையில் ஊற்றினார். 'மடமட' என்று கிழவி குடித்துப் பசியாறினாள்.

"வாயசத்துக்கு இன்னும் பிண்டம் வைக்கவில்லை. பித்ருக்கள் காக்கையாய்ப் பதறினார்கள். "மனித ரூபத்துடன் வந்து என் தாயார் திருப்தியடைந்து விட்டாள். காக்கையைக் காட்டிலும் மனித ஜன்மம் மேலல்லவா" என்று அந்தப் புரோகிதர்களிடம் சுந்தரேசய்யர் சொல்லிக் கொண்டிருந்த பொழுது, அவருடைய மனைவியும் ஓடிவந்து, "இதென்ன இப்படிச் செய்துவிட்டீர்களே" என்று குறுக்கிட்டாள்.

சுந்தரேசய்யர் மனைவியைப் பார்த்து, "அசடு, வாசலில் பார், அம்மா உருவெடுத்து வந்திருப்பதை" என்றார். மிகவும் சின்னக் கதை; ஆனால், உள்ளடக்கத்தால் மிகப் பெரிய கதை. காலம் காலமாய் இந்து சமூகத்தில் புரையோடிக் கிடக்கிற, பகுத்தறிவுக்கு ஒவ்வாத ஒரு மூட நம்பிக்கையை ஒரு நொடி நேரத்தில் இடித்துத் தகர்த்துப் போடுகிற இமாலயக் கதை. வாசலில் நிற்கிற ஒரு கிழவியைப் பார்த்துவிட்டு உள்ளே ஓடி வருகிற குழந்தையை, "அப்பா, வாசல்லே யாரோ கிழவி" என்று சொல்ல வைக்காமல், "பாட்டி வந்திருக்கா" என்று சொல்ல வைத்திருக்கிற அற்புதக் கட்டமைப்பு, செய்நேர்த்தி தமிழ்ச் சிறுகதைகளில் வேறு எங்கும் காணக் கிடைக்காதது.

“பண்ணைச் செங்கான்” சிறுகதை உள்ளடக்கத்தால் மாறுபட்ட பின்புலம் கொண்ட கதை. “பண்ணைச் செங்கான்” நில உரிமை சம்பந்தப்பட்ட கதை. நிலத்தின் மீதான சகலவிதமான உரிமையும் நிலத்தில் உழுகிற, உழைக்கிற, பாடுபடுகிறவனுக்குத் தானே இருக்க வேண்டும்? என்று நயமாக ஆனால் மிக அழுத்தமாகக் கேட்கிற கதை. உழைப்பு, உழைப்பவன், நிலம் என்னும் நல்லாள் அவனிடம்தான் இருக்க வேண்டும்; அவனையும் அவளையும், காரணம் எதுவாயினும் பிரித்துவிடக் கூடாது என்ற மிகக் கடுமையான நில உரிமைப் பிரச்சனையை, வெளியே தெரியாமல், நாசூக்கான சிறிய சிறிய சம்பவங்கள் வழியே சொல்லிவிடுகிற அற்புதமான படைப்பு.

நிலம், உழைப்பவனுக்கே உரிமை, அதிகாரம் என்று காந்தியடிகள் பேசியதையும், பூஜ்யர் வினோபா பேசியதையும், இன்று இடதுசாரி அரசியலாளர்கள் “நில மீட்புப்போர்” நடத்தி வருவதையும், உலகமயம், தாராளமயம் என்ற அறிவிப்புடன், பாடுபடும் விவசாயப் பெருங்குடி மக்கள் நிலத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு வெளியேற்றப்படுவதையும் ஒரு நிமிடம் மனத்திற்குள் உள்வாங்கிக் கொண்டு இந்தக் கதையை ஒருமுறை வாசிக்க வேண்டும். அப்படி வாசித்தால் கதையின் உள்ளடக்க வீச்சு மனத்துக்குள் விரிந்து பெரிய அளவில் வியாபகம் கொள்வதை உணர முடியும்.

மூன்று தலைமுறைக்கு முன்னால் பேசிய குத்தகை; இப்போது அது போதாது என்று கருதுகிற நிலஉரிமை முதலாளி நிலத்தை வேறு ஓர் ஆளுக்கு மாற்றிவிடலாம் என்று முயல்கிறார். மூன்று தலைமுறையாக, அந்த நிலத்தில் உழைத்துப் பாடுபடும் உழவனின் இப்போதைய வாரிசு செங்கான் தனக்குரிய உரிமையை விட்டுக் கொடுக்க மறுக்கிறான். இதுதான் கதை.

நிலம் நகர்ப்புற முதலாளிக்கு அதாவது அந்த நிலப் பிரபுவுக்குத்தான் சொந்தம். செங்கானும் அவனுடைய மூதாதையரும் நிலத்தை உழவடை செய்பவர்கள்தான். ஆனால், இடையில் சிக்கிக் கொண்டிருக்கிற பிரச்சினை ‘உழைப்பு’ ‘உழைப்பவன்’ என்ற பிரச்சினை. அவனை நிலத்திலிருந்து வெளியேற்றத்தான் வேண்டுமா? கதையில் வெளிப்படையான உரிமைக் கோஷங்கள் இல்லை; கொடிபிடிப்பு இல்லை; ஆள்திரட்டல் இல்லை; அங்கலாய்ப்பு இல்லை; இது என்னுடைய நிலம் என்று செங்கான் பேசவில்லை; ஆனால் தலைமுறை தலைமுறையாக இந்த நிலத்திற்குள் நாங்கள் எங்களது உழைப்பைக் கொட்டியிருக்கிறோம் என்று பேசுகிறான்.

செங்கான் உரிமை கோருகிறானா? உழைப்பு குறித்துப் பேசுகிறானா? பிரித்துப் பார்க்க முடியாத நுட்பம் கு.ப.ரா.–வின் எழுத்துக்களில் நேர்த்தி பெற்றிருக்கிறது. உரிமை கோருவதும், உழைப்பைப் பேசுவதும் ஒன்றுதான், வேறுவேறு அல்ல என்ற புரிதலுக்கு வாசிப்பாளனைக் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார் கு.ப.ரா.

“என் நெலத்துலே எவன் நொளைவான், பாக்குறேன்..? அந்த மண்ணுத்தான் அவனுக்கு வெளெய்வாளா...? நான் வுடமாட்டேஞ் சாமி... நம்ம காட்டு லச்சுமி என்னோட பேசுவாளே...! இந்த வயக்காட்லே ஔச்சேதான் நான் சாகணும் சாமி...! இதெ வுட்டா நான் செத்துப் போவேன்...” – செங்கானின் பேச்சுக்களைப் படிக்கும்போது, “செங்கான் கேட்பது நியாயம்தானே!” என்று நம் மனம் உருகிவிடுகிறது. மனத்தை உலுக்கச் செய்வதைவிட, உருகச் செய்வதில்தான் இலக்கியத்தின் வெற்றி இருக்கிறது என்ற படைப்பு ரகசியம் தெரிந்தவர் கு.ப.ரா.

இந்த இரு கதைகளில் மட்டுமல்ல, கு.ப.ரா. தனது எல்லாச் சிறுகதைகளிலும் சொற்செட்டு, சம்பவக் குறைப்பு, கூர்மையான உள்ளடக்கம் என்று அமைத்துக் கொள்வதில் மிகப்பெரிய வெற்றியை அடைந்திருக்கிறார். கு.ப.ரா.–வை முழுமையாக ஆராயும் வாய்ப்புப் பெற்ற படைப்பாளர் கரிச்சான் குஞ்சு ஓர் இடத்தில் “கு.ப.ரா.–விடம் காணப்படுவது காலத்தை மீறி வெல்லும் கலைச் சாதுர்யம்” என்று குறிப்பிடுகிறார்.

கு.ப.ரா.–விடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அவரிடம் இருந்த “கலைச் சாதுர்யம்”தான்.

ஜப்பானில் சரஸ்வதி கோவில்கள்

இந்தியப் பண்பாடு மீது ஜப்பானியருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. ஜப்பானியர்கள் வணங்கி வரும் ஏழு தேவதைகளுள் கல்விக்கு அதிபதியான நம் சரஸ்வதி தேவியும் உண்டு. ஜப்பானில் பல ஊர்களில் சரஸ்வதிக்குக் கோவில்கள் உள்ளன.

– தங்கமுத்து

கட்டுரை

நவீன நீர்வழிச்சாலைத் திட்டம் 10

மத்திய அமைச்சர்களுடன் சந்திப்பு

மாண்புமிகு அமைச்சர் திரு. பொன் ராதா கிருஷ்ணன் : 2014–ஆம் ஆண்டு திரு. நரேந்திர மோடி அவர்களின் தலைமையிலான பா.ஜ.க. அரசு பதவியேற்றவுடன் ஜூன் 26 அன்று டெல்லியில் தமிழ்நாட்டின் முன்னாள் பாரதிய ஜனதா கட்சித் தலைவரும் மாண்புமிகு அமைச்சரும் ஆகிய திரு. பொன் ராதாகிருஷ்ணன் அவர்களைச் சந்தித்துத் திட்டம் குறித்து விவாதித்தோம். உடன் டெல்லியில் உள்ள நமது நவாட்டெக் வல்லுநர் திரு வி.கே. குப்தாவும் கலந்து கொண்டார்.

அமைச்சர் அவர்கள் திட்டத்தை முழுமையாகப் புரிந்து கொண்டதோடு புகழ்ந்தது மட்டுமல்லாமல் மாண்புமிகு பிரதமர் அவர்களையும், நீர்வழிச் சாலைத் தொடர்பான அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களையும், சந்திக்க ஏற்பாடு செய்வதாக உறுதியளித்தார்.

அதன்பின் மீண்டும் டெல்லியில் அவரைச் சந்தித்தபோது, மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. வெங்கையா நாயுடு அவர்களைச் சந்திக்க அழைத்துச் சென்றார். திரு. வெங்கையா நாயுடு அவர்கள் திட்டத்தைக் குறித்தும், என்னைப் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருந்தார். திட்டத்தை திரு. சுரேஷ் பிரபு அவர்களது காலத்திலே ஆய்வு செய்ததாகவும் அப்பொழுது தானும் நதிநீர் இணைப்பின் உயர்மட்டக் குழுவின் செயலாக்கக் குழுவில் இருந்தேன் என்றதோடு, திட்டத்தினை அமைச்சர் நிதின் கட்கரி அவர்களிடம் எடுத்துச் சொல்வதாகவும் உறுதியளித்தார்.

திரு. பொன் ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து நமது திட்டத்தைப் பற்றி பேசிய பின்னர், அவரையே கப்பல் போக்குவரத்து இணை அமைச்சராகப் பிரதமர் நியமித்தார். அதன் பிறகு திரு. பொன் ராதாகிருஷ்ணன் மதுரை வந்த போது, நகரியில் அமைந்துள்ள நவீன நீர்வழிச் சாலைத் திட்ட மாதிரியைப் பார்வையிட்டார். அவர் மேசையில் வைக்கக்கூடிய அளவிற்கு ஒரு செயல்வடிவ மாதிரியைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி நாங்களும் செய்தோம். பின்னர் திரு. பொன் ராதாகிருஷ்ணன் அவர்களைப் பலமுறை சந்தித்துத் திட்டத்தை எடுத்துக் கொள்ள வலியுறுத்தி வந்தோம்.



மாண்புமிகு
மத்திய அமைச்சர்
பொன் ராதாகிருஷ்ணன்
அவர்களுடன்
திரு. ஏ.சி. காமராஜ்

மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி : 2014 ஜூன் 28–ஆம் தேதி மாண்புமிகு கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்களது அலுவலகத்திலிருந்து தொலைபேசியில் என்னைத் தொடர்பு கொண்டு, தாங்கள் அளித்துள்ள நவீன நீர்வழிச் சாலைத் திட்டம் பற்றி விவாதிக்க அமைச்சர் தங்களை டெல்லியிலுள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு வருமாறு அழைக்கிறார் எனத் தெரிவித்தார்கள். உடனே நானும் வருவதாகச் சம்மதம் தெரிவித்தேன்.



பொறியாளர் ஏ.சி.காமராஜ்

அதன்படி ஜூன் 30–ஆம் தேதி நான் டெல்லி சென்றேன். உடன் ஜப்பானில் 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய பொறியாளர் பாபு மாதவனும் வந்தார். மேலும் லண்டனிலிருந்து பொறியாளர் கே. ஜெயச்சந்திரன் நேரடியாக டெல்லிக்கு வந்தார். இவர்களுடன் பொறியாளர் வி.கே. குப்தா, விஷு குப்தா ஆகியோரும் இணைந்து கொண்டனர். நாங்கள் ஒரு குழுவாக அமைச்சரைச் சந்தித்துத் திட்டத்தை விளக்கினோம். அவர் இது பெரிய திட்டம். மறுநாள் விரிவாகப் பேசுவோம் என்றார்.

மறுநாள் ஜூலை 1–ஆம் தேதி டெல்லியில் உள்ள டிரான்ஸ்போர்ட் பவனில் மத்திய நீர்வளத் துறை, உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துத் துறை, தேசிய நீர்வள மேம்பாட்டு ஆணையம் மற்றும் இதர சம்பந்தப்பட்ட அலுவலர்களையும் அழைத்து அமைச்சர் தலைமையில் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதிலும் நாங்கள் கலந்து கொண்டு நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தை விளக்கினோம். மாண்புமிகு அமைச்சர் திரு. நிதின் கட்கரி திட்டத்தைப் புரிந்து கொண்டார்.

நானும் பொறியாளர் கே.ஜெயச்சந்திரன் அவர்களும் அதிகாரிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தோம். கூட்டம் சுமார் 2 மணி நேரம் நடந்தது. பின்பு இத்திட்டத்தினை மிக அருமையானத் திட்டம் எனப் பாராட்டியதோடு இத் திட்டத்தை ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள உள் நாட்டு நீர்வழிப் போக்குவரத்தோடு இணைக்கக் கூடிய சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும்படி எங்களைக் கேட்டுக் கொண்டார். (தற்போது அது அனுப்பட்டுவிட்டது.)

மேலும் அவரிடம் நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தின் ஒரு பகுதியை எடுத்து ஆய்வு செய்திட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலும் தென்னக நீர்வழிச்சாலையை முதலில் அமல்படுத்திடவும் அதற்கு ஆந்திரா – தமிழ்நாடு நவீன நீர்வழிச்சாலை சாத்தியக் கூறு அறிக்கையினை முதலில் தயாரித்திட நிதி ஒதுக்கவும் கேட்டுக் கொண்டோம். அமைச்சரும் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்.

மேலும் திட்டம் குறித்துத் தன்னுடைய வல்லுநர்கள் திரு. சஞ்சய் மற்றும் திரு. ஸ்ரீதர் இருவரையும் அறிமுகம் செய்துவைத்து, அவர்களுடன் விவாதிக்கவும் கேட்டுக் கொண்டார். அதன்படி திட்டத்தை விளக்கினோம். அவர்களும் திட்டத்தைப் புரிந்து கொண்டு வெகுவாகப் பாராட்டினார்கள்.

கடந்த ஆண்டு மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் மதுரை வந்தபோது, அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க விழா மேடையை ஒட்டியே ஒரு மேடை அமைத்து அதில் நவீன நீர்வழிச்சாலைத் திட்ட மாதிரியை அமைத்து விளக்கிக் காட்டினோம்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உங்களுடைய திட்டம் மிக அருமையானத் திட்டம் எனப் பாராட்டியதோடு, உடனே இது குறித்துப் பேச டெல்லி வருமாறு அழைப்பு விடுத்தார். அதன்படி நானும் டெல்லி சென்று அவரைச் சந்தித்தேன். அப்போது இத்திட்டத்தை மூன்று கட்டமாக எடுத்துக் கொள்வோம் என உறுதியளித்துள்ளார்.

அதாவது ஏற்கனவே உள்ள 5 நீர்வழிச்சாலைகளைப் புனரமைப்பது முதற்கட்டம். கூடுதலாக 106 நதிகளைத் தேசிய நீர்வழிச்சாலையாக அறிவிப்பது இரண்டாம் கட்டம். பின் நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தை எடுத்துக் கொள்வது மூன்றாவது கட்டம். தற்போது 2 கட்டங்கள் பாராளுமன்ற ஒப்புதலுடன் அறிவிக்கப்பட்டு விட்டது. நாங்கள் தொடர்ந்து அமைச்சரைத் தொடர்பு கொண்டு வருகிறோம். திட்டம் பரிசீலனையில் இருப்பதாகவும் நிச்சயம் விரைவில் 3–வது கட்டமாக இதனை எடுத்துக் கொள்வோம் எனவும் உறுதியளித்துள்ளார்.

மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள், சமீபத்தில் சென்னை வந்தபொழுது நதிகள் இணைப்பிற்கு மாநில அரசு திட்டம் கொடுத்தால் மத்திய அரசு 90% நிதி அளிக்கத் தயாராக உள்ளது என அறிக்கை வெளியிட்டுள்ளார். தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய அரசு, மாநில அரசிடம் இருந்து தெளிவானத் திட்ட அறிக்கையை எதிர்பார்க்கிறது. தமிழக அரசு, மத்திய அரசின் உதவியுடன் தமிழ்நாடு நீர்வழிச்சாலைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

மாண்புமிகு அமைச்சர் செல்வி உமாபாரதி : 2016–ஆம் ஆண்டு மாண்புமிகு மத்திய நீர்வளத் துறை அமைச்சர் செல்வி. உமாபாரதி அவர்கள் என்னைப் பற்றியும் நவீன நீர்வழிச்சாலைத் திட்டம்



*மாண்புமிகு மத்திய அமைச்சர் நிதின்கட்கரி அவர்களின் ஆலோசகர்
பொறியாளர் சஞ்சய் கோலாப்பூர்க்கார் அவர்களுடன்
பொறியாளர் ஏ.சி. காமராஜ்*

குறித்தும் கேள்விப்பட்டு நேரில் சந்திக்க அழைப்பு விடுத்தார்கள். நானும் அவ்வழைப்பை ஏற்று டெல்லி சென்று மாண்புமிகு அமைச்சர் செல்வி. உமாபாரதி அவர்களைச் சந்தித்துத் திட்டத்தை விளக்கினேன்.

திட்டத்தைப் புரிந்துகொண்ட அமைச்சர் அவர்கள் திட்டத்தை அமல்படுத்த ஏதுவாக நதிநீர் இணைப்பிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புச் செயலாக்கக் குழுத் தலைவரும் மாண்புமிகு நீர் வளத்துறை அமைச்சரின் ஆலோசகருமாகிய பொறியாளர் நவாலாவாலா அவர்களைச் சந்தித் துத் திட்டத்தை விளக்குமாறு கேட்டுக் கொண் டார். மேலும் தனது உதவியாளரிடம் அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவிட்டார்.

அதன்படி திரு. நவாலாவாலா அவர்களை 2016 டிசம்பர் 30–ஆம் தேதி சந்தித்துத் திட்டம் குறித்து விளக்கினோம். அப்போது திரு. நவாலாவாலா அவர்கள் அரசின் நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் உள்ள பல்வேறு சிக்கல்கள் குறித்து வேதனையுடன் பகிர்ந்து கெண்டார். அப்போது இதுபோன்ற சிக்கல்கள் நவீன நீர்வழிச் சாலைத் திட்டத்தில் இல்லை என்பதையும் இத் திட்டம் எந்தந்த விதத்தில் நதிநீர் இணைப்பை விடச் சிறந்தது என்பதையும் நான் விளக்கிட, புரிந்துகொண்ட திரு. நவாலாவாலா அவர்கள் பொது மக்களிடையே மிகப்பெரிய அளவில் இத் திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார். மேலும் நவீன நீர்வழிச்சாலைத் திட்டம் குறித்த கருத்துருவைத் தனக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டதோடு திட்டத்தை அமலுக்குக் கொண்டுவரத் தேவை யான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்ப தாக உறுதியளித்தார்.

இதற்கு வலுச்சேர்க்கும் விதமாக, முன்னாள் பிரதமர் திரு. வாஜ்பாய் அமைச்சரவையில் விவ சாயம் மற்றும் நீர்வளத்துறை அமைச்சராக இருந்த திரு. சேம்பால் சாஸ்திரி அவர்களும் திரு. நவாலா வாலா இத்திட்டத்தை எடுத்துக்கொள்ளப் பரிந் துரை செய்தார்.

சென்ற ஆண்டு மாண்புமிகு அமைச்சர் செல்வி. உமாபாரதி அவர்களை டெல்லியில் அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசியபோது, "எந்த மாநிலமும் நதிநீர் இணைப்புத் திட்டத்தை ஏற்கவில்லை. முக்கியமாகத் தென் மாநிலங்கள் நதிகள் இணைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வில்லை. நான் என்ன செய்வது?" இதனை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடமும் சொல்லிவிட்டேன்" என்று தெரிவித்தார்கள்.

அதற்கு நான், நதிகள் இணைப்புத்

தொடர்ச்சி 97–ம் பக்கம்

சிறுகதை

ஜெயா ராஜாமணி

அப்பத்தா

வேப்ப மரத்துக் காற்று இனிய நறு மணத்துடன் 'ஏ.சி.'யைவிட சுகமாக இருந்தும், துரைப்பாண்டிக்குத் தூக்கம் இல்லை. சுற்றி பச்சுபச்சென்று செடிகளும், மரங்களுமாகச் சூழ்ந்த நாலு கட்டு வீடு! அதில் இந்த எழுபது வயதிலும் சுறுசுறு என்று ஓடியாடும் அம்மா!

ஆத்தா, அப்பத்தா, அத்தை, அக்கா, அண்ணி என்று உறவு இல்லாமலேயே உறவு முறையில் அழைத்துக்கொண்டு நொடிக்கொரு தரம் ஓடிவரும் நட்புகள்!

இதையெல்லாம் விட்டுவிட்டு 'அட்டாச்ட் பாத்ரூமும்', 'சுவிட்சைப் போட்டால் வேலை முடியும் மெஷின்களும்' அம்மாவுக்குச் சரிப் படுமா? நாங்களும், பிள்ளைகளும் காலையில் போனா வீடு வந்து சேர விளக்கு வெச்சுடும். ஏதோ முடக்கிப் போட்டது போல, மெட்டு, மொட்டுனு ஒரு பேச்சுத் துணைக்குக்கூட ஆள் இல்லாம அந்தத் தனிமை அம்மாவை நோக வைக்காதா?



ஆனா... அப்பா இருந்த வரை சரி. அவரும் போய் வருஷம் ஒன்று ஓடிப் போச்சு! இனியும் இங்கே, அம்மாவைத் தனியா எப்படி விட்டு வைக்கிறது? என்ன தான் ரெண்டு அக்காமாரும் பக்கத்து ஊர்கள்ல இருந் தாலும், மகன்கிற கடமையும், உரிமையும் எனக்குத்தானே இருக்கிறது. நாளைக்கு எது ஒன்று ஆச்சுன்னாலும், ஆயுசுக்கும் மனசு உறுத்துமே!

அம்மா கூட்டுக் குடும்பத்திலேயே பிறந்து வளர்ந்து வாழ்ந்தவங்க! இத்தனை நாளா உழைச்சு, உழைச்சுத் தேஞ்சவங்க! அதான் அம்மாவைக் கூட்டிக்கிட்டுப் போயிடலாம்... அங்க வந்து ஹாயா இருப்பாங்கன்னு நினைச்சேன்!

ஃபோன்ல 'உனக்கு விசா எடுத்துட்டேம்மா, கூட்டிட்டுப்போக வர்றேன்'னு சொன்னப்பக்கூட அம்மா மறுத்து ஒண்ணும் சொல்லலே. பாப்பம் னாங்க. ஆனா, அது எதிராளி மனசு கடிஞ்சுறு மோன்னு நினைக்கிற அவங்க சுபாவம்!

இங்க வந்து 'என்னம்மா கிளம்ப ரெடியா'ன்னு கேட்டா, சிரிச்சுக்கிட்டே ''அதுக் கென்னப்பா! மூட்டையா கட்டணும்? ரெண்டு துணிமணி எடுத்துட்டுக் கிளம்ப வேண் டியதுதானே''ங்கிறாங்க. என்னவோ பிடி கொடுக்காமப் பேசறாப்ல தோணுது.

நேத்து, தெக்குத்தெரு சுப்பண்ணன் வந்து அம்மாகிட்ட, ''என்னாத்தா... நீ என்னவோ ஒம் பிள்ளையோட வெளிநாடு போப் போறயாமே! வர மாசம் நம்ப ராசுப் பயலுக்குப் பரிசம் போட நீதானே ஆத்தா நாள் குறிச்சே! இப்ப நீ பாட்டுக்குப் போயிட்டா என்ன அர்த்தம்''னு சத்தம் போடறாரு!

அம்மாவும் சிரிச்சுக் கிட்டே, ''என்னடா கிறுக்கா! போனா அங்கேயேவா இருந் துடப் போறேன்? ரெண்டு மாசத்துலே வந்துற மாட் டேன்''கிறாங்க. என்னவோ அய்யம்புத்தூரும், ஆஸ்திரேலி யாவும் அக்கம்பக்கத்திலே இருக் காப்பல! தொண்ணூத்தெட்டில

மாடு
கன்று போட்டதா, மகளுக்குப் பேறுகாலமா, காதுகுத்தா, கல்யாணமா, நாத்து நடவா, கதிர் அறுப்பா, விதை விதைப்பா... எது ஒண்ணுக்கும் அப்பத்தா, அப்பத்தான்னுதான் வராங்க. அவனுக்கு அதிசயமாக இருந்தது. அம்மா மட்டும் நாலு எழுத்துப் படிச்சிருந்தா, நாட்டையே கட்டி ஆண்டிருப்பா!

ஐயாவோட வந்துட்டு மூணு மாசம் முடியறதுக் குள்ளே 'ஊரு, ஊரு'ன்னு பறந்தது கணக்கா இப்பவும் நினைப்புப் போல! ஒண்ணும் விளங்கலே!

'உம்... கிளம்ப ஒரு வாரம் இருக்குன்னாலும் நாளைக்கு மனசு விட்டு அம்மாகிட்டப் பேசிரணும்' இப்படி எண்ண ஓட்டங்களில் ஆழ்ந்திருந்த துரை எப்போது தூங்கினானோ... ஆனால்...

காலையில் வெள்ளி முளைக்கிறதுக்குள்ளே பறவைகளின் கீச்சுக் கீச்சு அலாரம் அவனைத் தட்டி எழுப்பிவிட்டது. எழுந்து முகம் கழுவிய வனை...

"என்னப்பா துரை! கருக்கல் விலகலே, அதுக்குள்ளே முழிச்சுக்கிட்டே! சித்த படுப்பா! இப்பத்தான் கோவாலு பால் கறந்துட்டுப் போனான். காபி காச்சறேன்."

"இல்லம்மா! நான் இப்படி ஆத்துப் பக்கம் காலாற நடந்துட்டு வர்றேன்" என்றபடி வெளியே வந்தான் துரை.

வாசலில் தாய் மடியில் முட்டி முட்டிப் பால் குடித்துக் கொண்டிருந்த கன்று! அதைப் பாசமுடன் நக்கிக் கொடுக்கும் தாய்ப்பசு! தெரு வில் இருபுறமும் சாணம் கரைத்துத் தெளித்த நீரின் மணம்! அமைதியான ஆட்டு மந்தை, குஞ்சுகளுடன் குறுக்கே ஓடும் கோழி; அவன் படித்த பள்ளி, மாதா கோயில், பள்ளி வாசல், ஜடாமுனி கோயில், காட்டாஸ்பத்திரி, தாமரைக் குளம் எல்லாமே மாறவில்லை! மனிதர்கள் மட்டும் மாறிவிட்டோம். ஒரு பெருமூச்சுடன் களத்து மேட் டைத் தாண்டினான். கீழே நிச்சலனமாக ஓடும் ஆறும், மேலே கீழ்வானத்தின் சிகப்பும் கண் ணுக்கு விருந்தாக அவனைத் திகைக்க வைத்தன.

"என்னப்பா! நல்லாருக்கயா?" எதிரே தோளில் கலப்பையும், தலையில் முண்டாசுமாக நின்றவரைக் கண்டு அவன் ஒரு நொடி தடுமாற...

"என்ன தம்பி மறந்துட்டயா? புளியந்தோப்பு மீசைக்காரன்!" தன் நரை மீசையைத் தடவிக் கொண்டே அவர் கடகடவென்று சிரிக்க...

அவன், பிச்சை, கோண்டு, காதர் எல்லோருமா அந்த ஆற்றைத் துவம்சம் செய்ததும், காவலுக்கு வள்ளியை நிற்க வைத்துவிட்டு, மேலக்காடு புளியந்தோப்புல புளியம்பழம் அடிச்சதும், பிடிபட்டால் அவரிடம் அவர்கள் காது படும் பாட்டையும், முத்துத் தேவரை மீசைக் காரராக்கியதும் சட்டென நினைவில் ஓட, அவரது சிரிப்பில் அவனும் கலந்து கொண்டான்!

வெல்லம், உப்பு, மிளகாய் என்று ஆளுக் கொன்றாய்க் கொண்டுவந்து அந்தப் புளியம்பழத் துடன் கல்லை வெச்சு நசுக்கி, உருட்டி அதைத் தொப்பியைப் போல ஈர்க்குச்சியில் செருகி, சப்பிச் சப்பித் திங்க, ஆஹா! அந்த ருசி! இன்னிக்கு விக்கிற விதவிதமான சாக்லெட்டுகள்லாம் அதற்கு ஈடாகுமா? எவ்வளவு இனிமையான நாட்கள் அவை! அவன் பிள்ளைகளுக்கு ஏது இந்த வாய்ப்பெல்லாம்!

ஓயாத படிப்பு! கிடைக்கும் இடைவேளையை யும் டி.வி.யும், கம்ப்யூட்டரும் பறித்துக் கொள் கின்றன! ஆனா... இங்கே பரவாயில்லை! அங்கங்கே டி.வி. பெட்டி இருந்தாலும் பிள்ளைகள் பாண்டி, பம்பரம், பட்டம், கண்ணாமூச்சி, திருடன், போலீஸ்னு ஓடிப்பிடிக்க விளையாடிட்டுத்தான் இருக்காங்க.

"என்ன துரை! பழசெல்லாம் அசை போட றியா? ஆமா, அம்மாவ என்னமோ கூட்டிட்டுப் போப்போறியாமே? மெய்யாலுமா?" தேவர் கேட்க...

'போச்சுடா, பத்தாவது ஆளா இவரும்' என்ற நினைப்புடன் துரை, "ஆமாங்கய்யா! இனியும் அவங்கள இங்க தனியா விட்டுட்டு..." அவன் முடிப்பதற்குள் அவர்,

"என்னய்யா தனி? நாங்கள்லாம் இல்லை... சரி, சரி, கூட்டிட்டுப் போய்ப் பத்து நா, ஒரு மாசம் வெச்சுக்கிட்டு அனுப்பிரு! ஏன்னா... இங்க அப்பத்தா இல்லாம சரிப்படாது. தடி எடுத்தவன் தண்டல்காரன் ஆயிடுவான்! என்ன நான் வரட்டா..." துரையின் பதிலை எதிர்பாராமலே அவர் கிளம்ப,

'இந்த மனுஷன் மாறவேயில்லை! அதே படபடா! அதென்ன... அப்பத்தா இல்லாட்டா ஒண்ணும் நடக்காதாமே?' ஆனா... அவனும் வந்த ரெண்டு நாளாப் பாக்கறானே...

மாடு கன்று போட்டதா, மகளுக்குப் பேறு காலமா, காதுகுத்தா, கல்யாணமா, நாத்து நடவா, கதிர் அறுப்பா, விதை விதைப்பா... எது ஒண்ணுக்கும் அப்பத்தா, அப்பத்தான்னுதான் வராங்க. அவனுக்கு அதிசயமாக இருந்தது. அம்மா மட்டும் நாலு எழுத்துப் படிச்சிருந்தா, நாட்டையே கட்டி ஆண்டிருப்பா! இப்ப மட்டும் என்ன? எலக்ஷன்ல நின்னா மந்திரிதான்!

புன்னகையுடன் ஆற்றில் இறங்கியவனுக்கு, 'அடடா! துண்டை எடுத்துட்டு வந்திருந்தா ஒரு முழுக்குப் போட்டிருக்கலாமே'ன்னு தோன்றியது. கரை ஏறியவன், எதிரே அரசமரத்தடிப் பிள்ளை யாரைப் பார்த்தான். சுற்றுமுற்றும் பார்த்தவாறு காதைப் பிடித்துக்கொண்டு மூன்று தோப்புக் கரணங்கள் போட்டான்.

வீடு வந்து குளித்து முடித்து அம்மா தேங்காய்ப்பாலுடன் ஆசையாகச் செய்து போட்ட ஆப்பத்தை ஒரு பிடி பிடித்தவன், "உன் கை மணம் யாருக்கும் வராதும்மா! ஆனா... அங்கெல்லாம் ரெடிமேட்தான். சப்பாத்தி, நூடுல்ஸ், நறுக்கிப் பாதி வேகவைத்த காய்கறி, துருவின தேங்காய்ப்பூ... உனக்கு வேலையே இருக்காது" என்றவனைப் பிடித்துக் கொண்டாள் பொன்னம்மா.

"அதாம்ப்பா சொல்றேன்! இங்க எனக்கு ஆயிரம் சோலி! பேசின வாயும், ஊறின கையும் சும்மாயிருக்க முடியுமா? ஏதோ உங்க ஆசைக்கு ஒரு பத்து, இருபது நாள் வந்து இருக்கேன்... என்ன?" அம்மா கூற, துரைக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. டிக்கட் ஐம்பது ரூபா இல்லே, ஐம்பதாயிரம்னு சொன்னா அம்மாவுக்குத் தப்பாப் படும்.

"நீ ஏம்மா இப்படி ஊர்ப்பாடெல்லாம் கால்ப் பாடா இழுத்துப் போட்டுக்கறே!" என்றவனைக் கண்கொட்டாது பார்த்த பொன்னம்மா,

"தம்பீ, உங்க தாத்தா நாட்டாமைக்காரரு. அப்பா பஞ்சாயத்துத் தலைவரு. சித்தப்பா மணியக்காரரு. அந்த வாசம் எங்கிட்டயும் இருக்கு போல! எது ஒண்ணுன்னாலும் சனங்க இங்க ஓடி வருதுங்க. நீ என்னவோ கடல் கடந்து போயிட்டதாலே இந்த ஊரு உனக்கு அந்நியமாப் போச்சா? இல்லையே! எங்கேயோ போயி ஆயிரம் ஆயிரமாச் சம்பாரிச்சாலும் நம்ம நாடு, நம்ம ஊரு, நம்ம சனங்கன்னு உன் உள் மனசு ஏங்குதில்லே... எனக்குத் தெரியாதா! நீ ஏரோப்ளேன்லேந்து இறங்கினதும் உன் முகத்திலே எப்படி ஒரு சந்தோஷம்! அதாம்பா தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்கிறது..." அம்மா சொல்லி முடிக்கவில்லை...

"முளைப்பாரித் திருவிழாவுக்கு வார வெள்ளிக்கிழமை காப்புக் கட்டலாமா ஆத்தா?" கேட்டபடி உள்ளே வந்தார் பூசாரி ஐயனார். துரைக்கு அலுப்பாக இருந்தது.

சட்டென்று, "அம்மா! நான் சின்னாளப்பட்டி வரைக்கும் போயி லட்சுமி அக்காவைப் பாத்துட்டு வரேன்" என்று கூற,

"என்னப்பாது! அக்கா, மாமா, புள்ளைங்க எல்லாரும் நாளை மக்கா நாள் வரதா இருக்காங்களே! நீ வேற எதுக்கு அலையறே?" அம்மா கேட்க...

"சாயங்காலம் வந்துருவேம்மா" என்று கூறியவனிடம் சாக்குப்பை நிறையக் காய்கறி, பழங்கள்னு அடைச்சு அவன் கையில் கொடுத்தாள் பொன்னம்மாள்.

அக்காவிடம் ஒரு பாட்டம் முறையிட லாம்னுதான் போனான் துரை! ஆனால்... அக்கா!

"தம்பீ! கூட்டிட்டுப் போ! ஆறு மாசம் கூட வெச்சுக்க! அப்புறம் கொண்டாந்து விட்ரு! அதுக்கு வெளிநாடெல்லாம் சரிப்படாது. என்னதான் மகன், மருமக, பேரப்பிள்ளைங்கன்னு இருந்தாலும், நினைச்சாக் காலாறக் கோவில், குளம்னு நடந்தமா, நாலு மக்கள் மனுசங்களைப் பாத்து வம்பு தும்பு பேசினமான்னு இருந்தாத்தான் தோதுப்படும். ஏதோ வெந்ததைச் சாப்பிட்டு விதி வந்தாச் சாவோம்னு இருக்க முடியாதப்பா... புரிஞ்சுக்க! இங்கதான் நாங்க இருக்கோமில்ல, பாத்துக்கிறோம். அந்தக் கவலையே உனக்கு வேண்டாம்."

பிறகு எழுந்த வாதப் பிரதி வாதங்களால் அவனால் மாலை வீடு திரும்ப முடியவில்லை. மறுநாள் காலையில் அவன் அய்யம்புத்தூருக்கு வந்தபோது ஊரே ஒரு மாதிரி இருந்தது! அம்மா வீட்டில் இல்லை. சின்னம்மா சொன்னாள்...

“தம்பீ! நீ அந்தாண்ட போனயா, இங்க ஒரு சம்பவம் நடந்து போச்சு. உன் சோட்டு பாலையா இல்லே! அதோட தங்கச்சி செல்வியோட பத்து வயசுப் பச்சைப் பிள்ளை பாரதி நாலு தரம் வாயால, வவுத்தால போச்சாம். பொக்குனு உசிர் போயிருச்சு...”

கேட்டதும் பதறிப்போனான் துரை. முந்தா நாள்கூட பாலையா வீட்ல பாத்தேனே. பூப்போல அந்த ஓட்டைப்பல் சிரிப்பு! ஒரு நிமிஷம் நிக்காம துருதுருன்னு... அப்படியே செல்வியோட அச்சு! துடிப்பான பய! அவனுக்கு பாரதின்னு பேர் வெச்சதே நானும் பாலையாவும்தானே? அவனா? குபுக்கென்று பெருகிய கண்ணீரைத் துடைத்த வாறு மெதுவாகக் கேட்டான்.

“அடக்கமெல்லாம் முடிஞ்சுருச்சா சின்னம்மா?”

“ஊஹூம். இல்லப்பா. இந்தக் கூத்த ஏன் கேக்கறே. பாலையா தாய்மாமனாச்சே. அவன் வந்து கோடி போட்டுத்தானே புள்ளையத் தூக்கணும். அதானே முறை. எல்லோரும் காத்துக் கிடக்காக. அவனுக்கும் இவங்களுக்கும்தான் வெட்டுப்பழி, குத்துப்பழியாக் கிடக்கே. வர மாட்டேன்னு முரண்டு பிடிக்கறான். அம்மாவும், ஊர்ப் பெரியவங்களும் அங்கதான் போயிருக் காங்க. நீயும் வேணாப் போயி அவனை இட்டார வழியைப் பாரு!”

சின்னம்மாவின் சொற்கள் காற்றில் பறக்க, துரை ஓடினான்.

“ஒரு சின்ன வரப்புச் சண்டை! அதை ஊதி ஊதிப் பெரிசாக்கிப் பெரியவங்க நீங்க அடிச்சுக் கிட்டீங்க. இன்னைக்குச் செத்தா நாளைக்கு ரெண்டுநா. போறப்ப என்ன தலையிலா கட்டிட்டுப் போப்போறோம். இது புரியலே உங்களுக்கு. அந்தப் பிஞ்சு, அது அப்பன், ஆத்தா தடுத்தாலும் கேட்காம, ‘மாமா, மாமான்னு உங்காலடியையே சுத்தி வந்துச்சே. அது முகத்தைக் கடைசியா ஒரு தரம் பாத்துட்டு வந்துரு பாலையா. நீ கோடி எடுத்துப் போட்டுத் தூக்கினாத்தான் அது நெஞ்சு வேகும். அடுத்த பிள்ளைங்க நல்லாருக்கும். ஊர்க் கட்டுப்பாடு உனக்குத் தெரியாதா?”அம்மாதான் அவனுடன் மன்றாடிக் கொண்டிருந்தாள்.

துரையைக் கண்டதும் ‘ஓ’வென்று அழுதான் பாலையா.

“இந்தப் பாருங்க! கோடியக் கொடுத்தமா, வந்தமான்னு திரும்பிருவேன்! அந்தச் சடங்கு, இந்தச் சடங்குன்னு என்னைய நிப்பாட்டக்கூடாது” என்றவன், கையில் கோடித் துணியுடன் தள்ளாடியபடி எழுந்தான்.

அதோ... பச்சென்று குளிப்பாட்டி நெற்றி நிறையத் திருநீறுடன் கிடத்தப்பட்டிருந்தது பாரதியின் உடல். பாலையாவைப் பார்த்ததும், “அண்ணே! உன் மருமகன் கிடக்கிற கோலத் தைப் பாத்தீங்களா?” என்று கதறியபடி அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்ட தங்கையை அணைத்த படி கதறினான் பாலையா.

“மாமா, மாமான்னு வாய்க்கு வாய் உன்னைப் பத்தியே பேசுவானே மச்சான்! இப்ப இப்படிப் பேசாமக் கிடக்கானே” என்று அழுத தங்கை புருஷனை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டான் பாலையா. அவர்களின் கண்ணீர் வெள்ளத்தில் வரப்புச் சண்டை, வாய்க்கால் சண்டை எல்லாமே அடித்துக்கொண்டு ஓடியது! ஆழத்தில் இருந்த பாசம் மட்டுமே மிஞ்சியது!

“சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ” என்று பாரதி புன்னகைப்பது போலிருந்தது துரைக்கு.

“பிரிஞ்சவங்க ஒண்ணா கல்யாணத்தில கூடணும். இல்லே, கருமாதியில கூடணும். அதான் ஊர் வழக்கு! என்ன செய்யறது? பச்சப் புள்ளை! ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா இருந்து தான் இந்த இழப்பை ஆத்திக்கணும்” என்று அமைதியாகக் கூறிய அம்மாவை...

‘எப்படியும் வாழலாம்’ என்பதைவிட, ‘இப்படித்தான் வாழ வேண்டும்’ என்று தன் முதுமைக் காலத்தை, ஜனனம், மரணம், வாழ்வு, தாழ்வு எதிலும் சம நோக்குடைய அந்த மக்களுடன் பின்னிப் பிணைந்து சுகமான ஒரு சுமையாகச் சுமக்கும் அந்த அப்பத்தாவைப் பார்க் கையில் அவனுக்குப் பெருமையாக இருந்தது.

“ஆம்! இந்தக் கிராமம் கிராமமாக இருப்பதற்கு இவர்களுக்கு அப்பத்தா வேணும்... அம்மா இங்கேயே இருக்கட்டும்!”



ஆச்சு. இன்னும் அஞ்சாறு வருஷத்தில புள்ளைங்க தலையெடுத்துருவாங்க. பொறவு போங்கடான்னு உதறிட்டு, இங்கனயே வந்துற வேண்டியதுதான்னு நினைக்கும்போதே சுகமாக இருந்தது துரைப்பாண்டிக்கு!

•



வாழ்வின் நிஜங்கள்

வாசமான மலர்களும்
சுவாசமாயிருக்கும் மரங்களும்
நேசத்திற்குரிய மண்ணும்
பாசமுள்ள மனிதனும்
வசந்தம் தரும்
நெஞ்சைத் தொடும்
வாழ்வின் நிஜங்கள் என்றால்

மலர்கள் கசக்கப்படுவதும்
மரங்கள் வீழ்த்தப்படுவதும்
மண்ணெங்கும் மாசுறுவதும்
மனிதன் மிருகமாவதும்
வலியைத் தரும்
நெஞ்சைச் சுடும்
வாழ்வின் நிஜங்கள் அன்றோ?

வளம் தரும்
வசந்தம் தரும்
வாழ்வின் நிஜங்களை
ஏற்றுக் கொண்டு வாழ்த்துவோம்!
வலி தரும்
வருத்தம் தரும்
வாழ்வின் நிஜங்களை
எதிர்த்து நின்று வீழ்த்துவோம்!

வெ. ஜெயலட்சுமி



சிற்பி இலக்கிய விருது - 2018



மேடையில் முனைவர் முத்துவேல், திரு. கரு. ஆறுமுகத் தமிழன், சிற்பி இலக்கிய விருதாளர் திரு. மகுடேஸ்வரன், முதல்வர் பொ.மா. பழனிச்சாமி, டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர், பி.எம்.எஸ்.' விருது பெறும் 'மணல்வீடு' ஹரிகிருஷ்ணன்,கவிஞர் சிற்பி, எழுத்தாளர் நாஞ்சில்நாடன் ஆகியோர்.

சிற்பி இலக்கிய விருது விழா, 11.8.2018 அன்று பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரியில் நடைபெற்றது.

விழாவில் 'சிற்பி இலக்கிய விருது–2018' கவிஞர் மகுடேஸ்வரன் அவர்களுக்கும், 'பி.எம்.எஸ். விருது' 'மணல்வீடு' ஹரிகிருஷ்ணன் அவர்களுக்கும் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

எழுத்தாளர் நாஞ்சில்நாடன் வாழ்த்துரை வழங்கினார். தத்துவ அறிஞர் கரு. ஆறுமுகத் தமிழன் 'காலத்தை வென்ற மூலன்' என்று திருமூலரைப் பற்றிச் சிறப்புரை நிகழ்த்தினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் பொ.மா. பழனிச்சாமி, துறைத் தலைவர்கள், பொதுமக்கள், மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

– ந.நி.

‘சிலம்புச் செல்வர்’ ம.பொ.சி. விருது!



‘அமுதசுரபி’ ஆசிரியர் திருப்பூர் கிருஷ்ணன், தாளாளர் கே.ஏ. சுப்பிரமணியம், கவிஞர் பெ. சிதம்பரநாதன், கவிஞர் புவியரசு, செயலர் திரு. ஆர். சண்முகசுந்தரம்.

கோவை காந்தியடிகள் கல்வி நிறுவனத்தில் 2018–ஆம் ஆண்டிற்கான ம.பொ.சி. விருது ‘அமுதசுரபி’ ஆசிரியர் முனைவர் திருப்பூர் கிருஷ்ணன் அவர்களுக்குப் பொற்கிழியுடன் தாளாளர் திரு. கே.ஏ. சுப்பிரமணியம் அவர்களும், ‘ஓம் சக்தி’ இணையாசிரியர் கவிஞர் பெ. சிதம்பரநாதன் அவர்களும், 15.8.2018 அன்று வழங்கினார்கள்.

– **ந.நி.**



கூட்டத்தில் ஒரு பகுதியினர்.



பொள்ளாச்சி எம்.சி.இ.டி. கல்லூரியில் பட்டமளிப்பு விழா!

பட்டமளிப்புப் பேருரை வழங்கிய திரு. சேகர் முருகேசன், முதல்வர் முனைவர் ஏ. ரத்தினவேலு, செயலர் முனைவர் சி. இராமசாமி, கல்லூரித் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம், தாளாளர் திரு. மா. ஹரிஹரசுதன்.

பொள்ளாச்சி டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியில் 16–ஆம் பட்டமளிப்பு விழா ஆகஸ்ட் 4–ஆம் நாள், சனிக்கிழமை நடைபெற்றது. விழாவில் வரவேற்புரை வழங்கிய கல்லூரியின் செயலர் முனைவர் சி. இராமசாமி, 1077 மாணவர்கள் பட்டம் பெறுவதாகவும், 533 மாணவர்கள் வளாக நேர்காணலில் பணிகள் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

கல்வி அறிக்கையை வாசித்த முதல்வர் முனைவர் ஏ. ரத்தினவேலு அவர்கள், எம்.எச்.ஆர்.டி. அமைப்பின் கல்லூரித் தரவரிசைப் பட்டியலில், எம்.சி.இ.டி. இந்திய அளவில் 151 – 200 ஆவது இடம் பெற்றுள்ளதைப் பற்றியும், 2022–ஆம் ஆண்டு வரை கல்லூரியின் தன்னாட்சி விரிவு செய்யப்பட்டுள்ளது பற்றியும் தெரிவித்தார்.

தலைமையுரை ஆற்றிய கல்லூரியின் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள், இக்காலத்தில் மென்பொருள் துறையைவிட, உற்பத்தித் துறை மற்றும் சேவைத்துறை பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது எனத் தெரிவித்தார். மேலும், சர்வதேச அளவில் பொறியாளர்களின் தேவை பற்றியும், சீனா முதலிய நாடுகளில் திறமையுள்ள மாணவர்களின் தேவை பற்றியும் கூறினார்.

சிறப்பு விருந்தினர் சென்னை கேட்டர்பில்லர் இந்தியா பி. லிமிடெட்டின் பொது மேலாளர் திரு. சேகர் முருகேசன் அவர்கள், பட்டம் பெற்ற மாணவர்களையும், அவர்களுக்கு உதவிய ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் வாழ்த்தினார்.

எம்.சி.இ.டி.யின் தாளாளர் திரு. மா. ஹரிஹரசுதன் அவர்கள் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். மாணவர் நல இயக்குநர் முனைவர் ரங்கா பழனிசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

என்.பி.டி. முதல்வர் திரு. ஆர். மணிவண்ணன், 'நாபா' சங்கத்தின் மதிப்பியல் தலைவர் திரு. கே. பால சுப்பிரமணியம், என்.ஐ.ஏ. பள்ளிகளின் நிர்வாக அலுவலர், தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

– ந.நி.



'மரபின் மைந்தனின் கவிதைகள்' நூல் வெளியீடு!

'மரபின் மைந்தனின் கவிதைகள்' நூலை மலேசிய முன்னாள் அமைச்சர் டத்தோ ஸ்ரீ மு. சரவணன் வெளியிட, பெற்றுக் கொள்கிறார் ஸ்ரீ கிருஷ்ணா கல்விக் குழுமங்களின் நிர்வாக அறங்காவலர் எஸ். மலர்விழி. உடன் நூலாசிரியர் மரபின் மைந்தன் முத்தையா, சொற்பொழிவாளர் சுகி சிவம், கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் திரு. கே.பி. ராமசாமி, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிர்வாக அறங்காவலர் எம். கிருஷ்ணன், பி.எம்.சி. பாலிடெக்னிக் கல்லூரிச் செயலர் பி. குமார் ஆகியோர்.

கோவையில் விஜயா பதிப்பகம் புத்தகத் திருவிழா!

விஜயா பதிப்பகம் கோவையில் ஜூலை 15-ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 19-ஆம் தேதி முடிய நடத்திய புத்தகத் திருவிழா நிறைவு நாளன்று குழந்தை மாணவி நி.ச. தமிழினி எழுதிய 'ஒரு நா... ஒரு ஊர்ல...' என்ற புத்தகம் வெளியிடப் பட்டுக் குழந்தைகள் கொண்டாடப்பட்டார்கள். அந்த அரிய காட்சி புத்தகத் திருவிழாவில் பொற்குடத்திற்குப் பொட்டு வைத்ததுபோல அமைந்தது.



85–ம் பக்கத் தொடர்ச்சி

திட்டத்தை மாநிலங்கள் ஏற்காது. ஆனால் நவீன நீர்வழிச்சாலைத் திட்டம் அப்படியல்ல. வெள்ள நீரை மட்டும் எடுப்பதால் அனைத்து மாநிலங் களும் ஏற்றுக்கொள்கின்றன. ஆகவே சாத்திய மான நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தைத் தாங் கள் நிறைவேற்றிட வேண்டும் என்று கூறினேன்.

அதற்கு அமைச்சர் உமாபாரதி அவர்கள் "உங்களுடைய திட்டம் எனக்கு நன்கு தெரியும். திரு. சுரேஷ்பிரபு உங்கள் திட்டத்தைப் பற்றிக் கூறியுள்ளார். திரு. குருமூர்த்தி அவர்களும் உங்கள் திட்டத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். ஆனால் இதனை நான் நிறைவேற்ற இயலாது. இது நீர்வழிச்சாலை என்பதால் மாண்புமிகு மத்திய சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள்தான் நிறைவேற்ற வேண்டும். ஆகவே நான் அவருக்கு இத்திட்டத்தைப் பரிந்துரை செய்து அனுப்பு கிறேன்" என உறுதியளித்தார்கள்.

அதன் பின்னர் மாண்புமிகு மத்திய அமைச் சர் நிதின் கட்கரி அவர்கள் நீர்வளத் துறையையும் கூடுதல் பொறுப்பாக ஏற்ற பின்னர் டெல்லியில் சந்தித்தோம். அப்பொழுது அவரது ஆலோசகர் பொறியாளர் சஞ்சய் கோலாப்பூர்க்கார் அவர் களைச் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார்.

அதன்படி மத்திய நீர்வளத்துறை அமைச் சகத்தில் அவரைச் சந்தித்துத் திட்டம் பற்றி விவாதித்தோம். உடன் திரு. வி.கே. குப்தா அவர்களும் இருந்தார். அப்பொழுது அவர் நவீன நீர்வழிச்சாலைத் திட்டம் குறித்துத் தனக்கு முன்பே தெரியும் என்றும் உங்களது திட்டம் மிகச் சிறந்தது என்றும் பாராட்டினார்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத் தலின்படி, கோதாவரியிலிருந்து காவேரிக்குத் தண்ணீரைக் குழாய்கள் அமைத்து கொண்டுச் செல்லத் திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது என்றும் அதில் எங்கு சாத்தியமோ அங்கெல்லாம் உங் களது திட்டப்படியும் மற்ற இடங்களில் குழாய் மூலமும் தண்ணீரைக் கொண்டு செல்லும்படி திட்டம் தீட்டலாம் என்றார்.

அதற்கு நான், குழாய்கள் அமைக்க எனது எதிர்ப்பைத் தெரிவித்ததோடு நவீன



மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. நிதின்கட்கரி மற்றும் மத்திய இணையமைச்சர் திரு. பொன் ராதாகிருஷ்ணன்



மாண்புமிகு மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின்கட்கரியுடன் பொறியாளர் ஏ.சி.காமராஜ்

நீர்வழிச்சாலை உண்டாக்கினால்தான் கோதாவரி யிலிருந்து அதிகளவு தண்ணீரை எடுக்க முடியும் என்பதால் நவீன நீர்வழிச்சாலை அமைக்கும்படி வலியுறுத்தினேன். சமீபத்தில்கூட குழாய்கள் அமைப்பதைக் காட்டிலும் நவீன நீர்வழிச்சாலை எவ்வாறு சிறந்தது என்பதையும் அதன்மூலம் கிடைக்கும் ஏராளமான நன்மைகள் குறித்தும் கடிதம் மூலம் அவருக்குத் தெரிவித்துள்ளேன். விரைவில் புரிந்துகொண்டு நவீன நீர்வழிச்சாலை அமைக்கச் சம்மதம் தெரிவிப்பார்கள் என நம்பு கிறோம்.

நதிநீர் பிணைப்பு விரைவில் நடக்கவில்லை யென்றால் நாட்டில் பல பிரச்சனைகள் ஏற்படும். நாடுகளுக்கிடையே நடக்கும் யுத்தம் தண்ணீருக் காகவே இருக்கும் என்று அறிஞர்கள் கூறு கிறார்கள். நாடுகளுக்கிடையே நடக்குமோ இல்லையோ, மாநிலங்களுக்கிடையே யுத்தம் நடந்தே தீரும். ஏன் கிராமங்களுக்கிடையேயும் இது நடக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

ஒருமுறை குஜராத்தைச் சேர்ந்த பொறியாளர் சி.சி.படேல் அவர்கள், என்னைச் சந்தித்தபோது, "காமராஜ், நதிநீர் இணைப்போ அல்லது பிணைப்போ திட்டத்தை விரைவில் செய்யுங்கள். இல்லையென்றால், தமிழ்நாடு அடுத்த 20 ஆண்டு களில் பாலைவனமாக மாறிவிடும்" என்று கூறி னார். அவர் அவ்வாறு கூறியே 10 ஆண்டுகள் ஓடி முடிந்துவிட்டன.

ஆகவே ஒவ்வொரு மாநிலத்திலும் நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தை விரைவில் மத்திய – மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டும். இல்லை யெனில், தண்ணீர்ப் பிரச்சனை தலைவிரித்தாடும் அபாயம் உள்ளது. இத்திட்டமானது மக்களுக் காகக் கொடுக்கப்பட்டது. ஆக, இதனை விரை வில் செயல்பாட்டுக்குக் கொண்டுவரப் பொது மக்களும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இத்திட்டத்தினை நிறை வேற்றிடத் தொடர்ந்து அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.



மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் செல்வி. உமாபாரதி அவர்களுடன் பொறியாளர் ஏ.சி.காமராஜ்

நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தைச் செயல்படுத்தக் காலதாமதம் ஏற்படுவதால், ஆண்டுதோறும் அரசுக்கு ரூ. 4 இலட்சம் கோடி வருமான இழப்பு ஏற்படுகிறது. எனவே, அரசிற்கும் பொது மக்களுக்கும் பல வகையிலும் வரு மானத்தை அள்ளித் தரும் நவீன நீர்வழிச்சாலைத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த ஆதரவு தர வேண்டும்.

"கங்கா – குமரி தேசிய நீர்வழிச்சாலைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மதுரையில் ஓர் அலுவலகம் நிறுவப்பட்டுப் பல ஊழியர்கள், தன்னார்வலர்கள் அதில் பணிபுரிந்து வரு கின்றனர். 2000–ஆம் ஆண்டு லாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாகத் தொடங்கப்பட்டுத் தற் போது SIRO (Scientific Industrial Research Organisation) எனும் சிறு ஆராய்ச்சி மையமாக வளர்ந்துள்ளது. இதற்கு மத்திய அறிவியல் மற்றும் ஆராய்ச்சித் துறை அங்கிகாரம் வழங்கியுள்ளது. ●

நமது இல்லத்து இறைவனாக இருக்கும் முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை (08.10.2018) அன்று ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் கோதானம் செய்து கோடி நன்மை பெறுவோம்

ஹரி ஓம்...! முன்னோர்களின் ஆசி வேண்டியும், அனைத்து தோஷங்களில் இருந்து விடுபடவும் அற்புதங்கள் நிறைந்த மஹாளய அமாவாசை தினத்தன்று, சென்னை திருவேற்காட்டில் உள்ள புனித தன்மை வாய்ந்த பசுமடத்தில் கோதானங்கள் நடைபெற உள்ளது. கோதானம் யார் நினைவாக செய்யப்படுகிறதோ, அவர்கள் பசுவின் ஒவ்வொரு ரோமத்திற்கும் ஒரு ஆண்டு வீதம், பல ஆயிரம் ஆண்டுகள் கோலோகத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானுடன் சேர்ந்திருக்கும் பேறு பெற்று அவ்வளவு காலமும் செழிப்புடன் வாழும் பாக்கியம் பெறுகிறார்கள். கோதானம் செய்பவர்கள் கயிலாயத்தில் சிவகணங்களுடன் சிவதரிசனம் செய்யும் பலனையும் அடைவார்கள். மேலும், தாங்கள் ஜென்ம லாபங்கள் பெறவும் தங்கள் குலம் தழைத்து வாழையடி வாழையாக செல்வச் செழிப்புடன் வாழவும் மேலும் தீர்க்காயுள் பெறவும் கோதானம் செய்வீர். கோதானத்திற்கு மிஞ்சிய புண்ணியம் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து. யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும், ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் ராசியானவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** தமது வேத வித்வான்கள் குழுவுடன் கோதான பூஜை, ரிஷப தான பூஜை மற்றும் வலம்புரி சங்கு பூஜையும் செய்து வைக்க உள்ளார்கள். இதில் அனைவரும் கலந்துகொண்டு யாருக்காக கோதானம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுடைய முழு விவரங்களையும் தெளிவாக குறிப்பிட்டு, கணக்கிலடங்காத அனைத்துவித தெய்வீக பலன்களையும் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்



ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் பசுமடத்தில் நடைபெற்ற கோதானம்

கோதானம் செய்வதால் ஒருவர் தனது முன் ஏழு, பின் ஏழு தலைமுறையினர் மோட்சத்திற்கு போக வழி செய்கிறார்

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று... நாட்டுப் பசுவும் கன்றும், காறாம் பசுவும் கன்றும், எருமையும் கன்றும் (மகிஷ தானம்), காளை கன்று (ரிஷப தானம்) தங்கள் சார்பாக கோதானம் செய்யப்படும். யார் பெயரில் கோதானம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி, கோத்திரம் போன்ற விவரங்களை தெரிவிக்கவும். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், பித்தளையிலான ஸ்ரீ லட்சுமி சமேத ஹயக்ரீவர் விக்ரஹமும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

நாட்டுப் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், தலைமுறை தோஷம், செய்வினை தோஷம், மாத்ரு, பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், புத்ர தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், செல்வக் குறைபாடு/சொத்துக் குறைபாடு தோஷம், பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகி, தீர்க்க சுமங்கலி பாக்கியம், கணவன்-மனைவி ஒற்றுமை, குழந்தை பாக்கியம், தடைப்பட்ட திருமணம் கைகூடும், மறுமணம், குடும்பத்தில் குபேர சம்பத்து உண்டாகி மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும் **கோதானம் செய்ய ரூ.12,500**

காறாம் பசுவும் கன்றும் தானம் செய்தால்... முற்பிறவி மற்றும் இந்தப் பிறவியில் ஏற்பட்ட பாவங்கள், தீவினைகள், ஏழரை சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி விலகும். நவக்கிரஹ தோஷம், ருண ரோக தோஷம், நாக தோஷம், ராகு-கேது, சந்திர தோஷம், ஆபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை, பணம் மற்றும் தேவையற்ற பிரச்னைகள் விலகி, கிரஹங்களின் பாதிப்பு விலகி, வீடு, நிலம், பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் பெற்று சந்தான அபிவிருத்தியுடன் மகாலட்சுமி அருள் உண்டாகும் **காறாம் பசு தானம் செய்ய ரூ.13,500**

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால்... ஆயுள் தோஷம், நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் மன உளைச்சல், வியாபார நஷ்டம், கடன் பிரச்சனை, படிப்பில் தடை, உத்யோகத் தடை நீங்கும், கால ஸர்ப்ப தோஷம், சத்ரு தோஷம், பாப தோஷம் விலகி, வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, குலவிருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, குடும்ப விருத்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை, மனசாந்தி, ஆத்ம ஞானம் உண்டாகும் **மகிஷ தானம் செய்ய ரூ.14,500**



பசுமடத்தில் நடைபெறும் ரிஷபதானம்

ரிஷப தானம் (காளை கன்று) செய்தால்... அனைத்து துன்பங்களும் துயரங்களும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், வியாபார தடைகள் அகலும், தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெறலாம், தோல்விகள் அகன்று வெற்றிகள் குவியும், கற்ற கல்வியும் தேடிய செல்வமும் என்றும் நிலைத்திருக்கும். ரிஷப தானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான கல்பவிருக்ஷ காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும் **ரிஷப தானம் செய்ய ரூ.5,000**

தங்கள் சார்பாக நடைபெறும் கோதானத்துடன் புடலங்காய் சாதம், பிரண்டை சாதம் மற்றும் கருப்பு எள் சாதமும் வழங்கப்படும்

குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கித் தருவதும் வலம்புரி சங்கே!

சங்கு அதிர்ஷ்டம் தருவது, தைரியம் தருவது, செல்வம் தருவது, ஐஸ்வர்யம் தருவது. மேலும் வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மகிழ்ச்சியான இல்லற வாழ்வு அமையவும், மாணவர்கள் கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு வரும் நோய்களை தடுக்கவும், வாஸ்து தோஷம்/குறைகள் நீங்கவும், வியாபாரத்தில் யோகம் பெறவும், தீயசக்தியை தடுக்கவும், தொட்டது துலங்கவும், மனக்கவலையை மாற்றும் வலம்புரி சங்கை வழிபடுவீர். இதனால் எல்லா தேவதைகளும் வீட்டில் குடிகொண்டு மஹாலட்சுமி வாசம் இருப்பாள். வலம்புரி சங்கின் சுவாசம் நமது மூளையோடு தொடர்புகொண்டு உடலின் குறிப்பிட்ட இயக்கத்தையும் தூண்டுகிறது.



ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்கள் செய்து வைக்கும் வலம்புரி சங்கு பூஜை

முன்னோர்கள் நினைவாக ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரித்து வளர்க்க ரூ. 6,600 அனுப்புவோருக்கு ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யாவால் மஹாளய அமாவாசை அன்று தாங்கள் தத்தெடுத்த பசுவிற்கு அபிஷேகம் செய்ய பயன்படுத்தப்பட்ட மனதை வளமாக்கும் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்

கோதானத்திற்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை Cheque/DD/MO ஆக Shri Ghosala Seva Trust, Chennai என்ற பெயரில் அல்லது Direct Remittance-ஆக SHRI GHOSALA SEVA TRUST, ICICI Bank, Mylapore Branch, SB A/c No: 218601000077, IFSC Code: ICIC0002186 என்ற வங்கி கணக்கில் அல்லது ஆன்லைன் மூலமாக www.shrigosala.com என்னும் எங்களுடைய இணையதளத்தின் மூலமாகவும் நன்கொடையை அனுப்பலாம். ரசீதும், மேற்கண்ட கோமாதா ஆசீர்வாத பிரசாதங்களும், சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும், தங்கள் சார்பாக பித்ரு பூஜைக்கு பயன்படுத்தப்பட்ட விஷ்ணு பாதமும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

கோ-தானம் செய்வது 11 சிவாலயங்களைக் கட்டி கும்பாபிஷேகம் செய்த பலனை தங்களுக்கு கொடுக்கும்



கோமாதாவை காப்போம்! நேசிப்போம்!! பூஜிப்போம்!!!

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

பசுமடம்®

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77 | pasumadam.chennai@gmail.com

✆8754 555 555, 8754 666 666 | www.shrigosala.com



தாங்கள் விரும்பும் விசேஷ நாட்கள் மற்றும் முன்னோர் நினைவு நாட்களில் தங்கள் சார்பாக மேற்கண்ட கோதானங்கள் செய்யப்படும்

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.08.2018

Regd.No.CB/016/2018-20

OM SAKTHI - SEPTEMBER - 2018